உ

இவை.

நான்மணிக்கடிகை.
இனியது நாற்பது.
ஐந்திணையைம்பது.
அட்டாங்கயோகக்குறள்.
வைருத்தமாவய்யம்வழி.
புலவராற்றுப்படை.
கணநூல்.
வைஞாயாபதிச்செய்யுட்கள்.

பி. சுப்ரமணியன்

கடவுள் துணை.

விளம்பிநாகனார்

அருளிச்செய்த

நான்மணிக்கடிகை

மூலமும் உரையும்.



௧ மதிமன்னு மாயவன் வாண்முக மொக்குங்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கு
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளி
னெதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமல ரொக்கு நிறம்.

இதன்பொருள்; மதி மாயவனது ஒளிமுகம் ஒக்கும்; ஒளிசிறந்த ஞாயிறு அவனது சக்கரமொக்கும்; முதுநீர்ப் பழனத்துத் தாமரைத்தாளின்கட் செவ்விமலரை மற்றவன் கண்ணொக்கும்; நிறம் காயாவின் புதுமலரை ஒக்கும்; என்றவாறு.

௨. படியை *மடியகத் திட்டா னடியினான்
முக்காற் கடந்தான் முழுநில—மக்காலத்
தாப்பனித்† தாங்கிய குன்றெடுத்தான் சோவி
னருமை யழித்த மகன்.

இ-ள்; உலகத்தைத் தன்வயிற்றின்கண் வைத்தானும், எல்லாவுலகையும் தன்சேவடியான் மும்முறையாற் கடந்தானும், முற்காலத்து ஆநி

* 'மடியகத் திட்டாண் மகவை' என்னுங் களத்திறமுரைத்தகாதைக் கண், மடி-வயிறென்பதற்கு இதனையே எடுத்துக்காட்டினார் அடியார்க்குநல் லார்.

† 'தாணிரை' எனவும் பாடம்.

ரையைத் துயர்கெடுக்கவேண்டி மலையையெடுத்தானும், சோவென்னும் *குறும்பினருமையை அழித்தமகனும் முன்சொல்லிய மாயவன், எ-று.

இவை யிரண்டும் கடவுள்வாழ்த்து.

நூல்.

௩ எள்ளற்க வென்று மெளியரென் றென்பெறினுங்
கொள்ளற்க கொள்ளார்கை †மேற்பட—வுள்ளஞ் சுடினுஞ்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து.

இ-ள்; எளியரென்று ஒருவரையும் என்றும் இகழாதொழிக; எல்லாம்பெறினும் தான் கொள்ளத்தகாதார் கை மேற்படக் கொள்ளா தொழிக; சிற்றிற் பிறந்தார் செய்த பிழை தன்னுள்ளத்தைச் சுடுகின்றதாயினும் அவரை வெகுளாதொழிக, தனக்குத் தகுதியில்லாத சொற்களை ஆராயாது விரைந்து கூறாதொழிக, எ-று. (க)

கொள்ளாரென்றது பகைவரென்றவாறு.

பறைபட வாழா வசுணமா வுள்ளங்
குறைபட வாழார் ‡உரவோர்—நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாந் தனக்கொவ்வாச்
சொற்பட்டாற் சாவதாஞ் சால்பு.

இ-ள்; பறையொலித்தால் உயிர்வாழா அசுணமா¶; மனங் குறைபட உயிர் வாழார் அறிவுடையார்; மிக்க காட்டின்கண் உள்ள மூங்கில்கள் நெற்பட்டபொழுதே சாம்; அவைபோல, ஒருவன் தனக்குத் தகாத பழிச்சொற்கள் படவதிற் சாவது சால்பாவது; எ-று. (உ)

---

*குறும்பு - அரண். சோவரணம் - அசுரர் நகரம்: என்ப.

† 'மேல்வர'

‡ 'உரவோ ரெனினு மடவோ ரெனினும்' என்றார் பதிற்றுப்பத்தினும் (அ-௩). உரம்-அறிவு 'உரமொருவற் குள்ள வெறுக்கை' என்னுந் திருக்குறளானுணர்க.

¶ அசுணம் இசையறிவதோர் விலங்கு (சிந்தாமணியுரை-பதுமை-உ௩எ) ஒருவன் முதற்கண் யாழிசையைக் கேட்பித்து, இஃது அவ்விசையின் பத்தே யின்புற்றுமூழ்கியவளவில் வலியதோர் பறையை ஒலிக்க, அதன்

௫ மண்ணி யறிப மணிநலம் பண்ணமைத்
தேறிய பின்னறிப மாநல மாசறச்
சுட்டறிப பொன்னி னலங்காண்பார் *கெட்டறிப
கேளிரா னாய பயன்.

இ-ள்; மணியினது நன்மையைக் கழுவி அறிவர்; பண்ணினையமைத்து ஏறியபின்னர் அறிவர் மாவினது நன்மையை; குற்றம் அறுபடச் சுட்டறிவர் பொன்னினன்மையைக் காண்பார்: அதுபோலத் தாங்கள் கெட்டால் அறிவர் கேளிரானாய பயன்; எ-று. (௫)

௬ கள்ளி வயிற்றி னகிற்பிறக்கு மான்வயிற்றி
னொள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுட்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
†நல்லாள் பிறக்குங் குடி.

இ-ள்; கள்ளியின் வயிற்றின் அகில் தோன்றும்; மானின்வயிற்றின் ஒள்ளிய அரிதாரம் தோன்றும்; பெருங்கடலுட் பலபொருள்களையும் விலை

வல்லோசையைக் கேட்கலாற்றாது இவ்விலங்கினரியவுயிர் விட்டு நீங்கும் என்ப. இதனை 'மறையிற்றன யாழ்கேட்ட மானை யருளாத, தறைகொன்று மற்றத னாருயி ரெஞ்சப், பறையறைந் தாங்கு' என்னும் நெய்தற்கலியாலும், (உ௬) அதற்கு நச்சினார்க்கினியர் 'வஞ்சனையாலே தான் வாசித்த யாழிசையைக் கேட்ட அசுணமாவை இவ்வின்ப முற்றதென்று அருள்பண்ணாதே, முனபுசெய்த வஞ்சனையைக் கெடுத்துப் பின்னை அதனரியவுயிர் போம்படி பறையைத் தட்டினாற்போல' எனக் கூறிய உரையாலும் அறிக. 'யாழ்நறையடுத்த வசுணநன்மாசெவி பறையடுத்ததுபோலும்' (இராமாவதாரம்-அவையடக்கம்) என்பதூஉம் இதுபற்றி வந்தது. 'இருஞ்சிறைத்தொழுதியார்ப்ப யாழ்செத், திருங்கல் விடரளை யசுணமோர்க்கும்' என்று அகப்பாட்டினும் (அஅ) வருதல் காண்க. 'அசுணங் கொல்பவர் கைபோ னன்று, மின்பமுந் துன்பமுமுடைத்தே' என்பது நற்றிணை (௩0௪) இன்பம்யாழிசைத்தலாலும் துன்பம் பறையொலிப்பித்தலாலுங் கொள்க. "அச்சப்பொருளாவன 'வள்ளெயிற் றரிமா வாள்வரி வேங்கை, முள்ளெயிற் றரவே முழங்கழற் செந்தீ, யீற்றுமகண்மா வேக பாதங், கூற்றங் கோண்மா தூன்றுறை யசுணம்' என்று சொல்லப் பட்டாற் போல்வன" என மெய்ப்பாட்டியலுரையிற் (க) காணப்படுதலால் இது தீங்கிழைக்கும் வலியுடையதென்றும், அதுபற்றி அஞ்சத்தக்கதென்றும், மலையின்கண் உறைவதென்றும் விளங்கிக்கொள்க. பிங்கலநூலார் இவ்வசுணத்தை 'அசுணமா விசையறி பறவை கேகயப்புள்' என்பதனாற் பறவையெனக் கூறுகின்றார். 'மறையிற்றன் யாழ்கேட்ட மானை' என வழங்கிய சான்றோர்க்கு இதனைப் புள் எனல் கருத்தில்லைப் போலும்!

* 'கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை, நீட்டி யளப்பதோர் கோல்' என்னுந் திருக்குறளை நோக்குக.

† 'நல்லாளிலாதகுடி' என்னுந்திருக்குறளுரையையும் (௧0௩0) நோக்குக.

யாகப்பெறும் முத்தங்கள் தோன்றும்; அவைபோல, அறிவாரியார் நல்லறிவினை உடையானொருமகன் பிறக்குங்குடியினை? எ-று. (௪)

௫ கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கு முயர்மத—மெல்லெ
னருளிற் பிறக்கு மறநெறி* யெல்லாம்
பொருளிற் பிறந்து விடும்†.

இ-ள்; மலையின்கட் பிறக்கும் ஒளியையுடைய மணி; மகளிரது மெல்லிய சொல்லின்கட் பிறக்கும் தன்மனத்தின்கட் களிப்பு; மெல்லென்ற அருளின்கட் பிறக்கும் நல்ல அறநெறிகள்; அவ்வற முதலாயின எல்லாம் பொருளின்கட் பிறக்கும்; எ-று. (௫)

௬ திருவொக்குந் தீதி லொழுக்கம் பெரிய
வறனொக்கு மாற்றி னொழுகல்—பிறனைக்
கொலையொக்குங் கொண்டுகண் மாறல் புலையொக்கும்
போற்றாதார் முன்னர்ச் செலவு.

இ-ள்; தான் பிறந்த குலத்திற்குத் தீது வாராமல் ஒழுகுமொழுக்கம் செல்வத்தோடொக்கும்; மிக்க அறஞ்செய்கையோடு ஒக்கும் நெறியின்கணின்று ஒழுகுமொழுக்கம்; பிறனொருவனைத் தனக்கு நட்பாகக்கொண்டுவைத்துப் பின்பு அவன்மாட்டுக் கண்மாறுதல் அவனைக்கொன்றபாவத்தோடு ஒக்கும்; தன்னை விரும்பாதார்மாட்டு அவராலாகும் பயன்கருதிச் சேறல் புலையோடு ஒக்கும்; எ-று. (௬)

௭ கள்வமென் பார்க்குந் துயிலில்லை காதலிமாட்
டுள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை யொண்பொருள்
‡செய்வமென் பார்க்குந் துயிலில்லை யப்பொருள்
காப்பார்க்கு மில்லைத் துயில்.

இ-ள்; களவுகாணுதும் என்று சோர்வுபார்ப்பார்க்கும் துயிலில்லை; தன்னாற் காதலிக்கப்பட்டாளொருத்திமாட்டுத் தம்முள்ளம் வைப்பார்க்கும் அவளைக் கூடுமட்டுந் துயிலில்லை; ஒள்ளிய பொருளைத் தேடுவமென்பார்க்

---

* 'அறனு மருளுடையான் கண்ணதே யாகும்' என்பது சிறுபஞ்சமூலம்.

† 'பொருளானா மெல்லாம்' என்பது திருக்குறள்-௧௦௦௨.

‡ 'சேர்ப்பாமென்'

கும் அப்பொருள் கூடுமளவுந் துயிலில்லை; அக்கூடிய பொருளைப் பிறர் கொள்ளாமற் காப்பார்க்குந் துயிலில்லை; எ-று. (௭)

௧௦ கற்றார்முற் றோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்
றுற்றார்முற் றோன்று முறாமுதல் — தெற்றென
வல்ல புரிந்தார்க் கறந்தோன்று மெல்லாம்
வெகுண்டார்முற் றோன்றுங் கெடும்.

இ-ள்; கற்றார்மாட்டுக் கழிந்த பொருட்கு இரக்கந்* தோன்றா; அன்பு பட்ட பொருளைப் பெறுவதற்கு முயல்வார் அவர்மாட்டு அவ்வன்பு பட்டன தமக்கெய்தாமைக் காரணந் தோன்று, தெளியப் பாவமுள்ளவாம் வினைகளைப்பயின்று பழகி வந்தார்க்கு அறவினைதோன்று; வெகுண்டார்க்கு எல்லா நன்மைகளுந் தோன்ற; எ-று.

உறாமுத லென்பதனை 'உறுமது' என்றும் 'உசாவுதல்' என்றும் பாடம் ஓதுவாருமுளர். (௮)

௧௧ நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்புங்
குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணி
தான்செல் லுலகத் தறம்.

இ-ள்; நிலத்துக்கு அழகென்று சொல்லுவர் நெல்லையும் கரும்பையும்; குளத்துக்கு அழகென்று சொல்லுவர் தாமரைப்பூவை; அவைபோல, பெண்டிரழகிற்கு அழகாவது நாணுடைமை, ஒருவன் தனக்கழகாவது தான்செல்லும் உலகிற்குத் துணையாகச் செய்யப்பட்ட அறம்; எ-று. (௯)

௧௨ கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத்தி னாற்பிணிப்பர் மாநாகங் — கொந்தி†
யிரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை
நயத்திற் பிணித்து விடல்.

இ-ள்; தறியினிற் பிணிப்படுப்பர் யானையை; சினந்தணியும் வகை ‡ மறைமொழியிற் பிணிப்படுப்பர் மாநாகத்தை; அவைபோல, கழறித்

---

* 'இரங்கல் கழிந்த பொருட்டு மாகும்' என்பது தொல்காப்பியம் (உரி சூக).

† கொந்துதல் - எரிதல்: 'கொந்தழல்' என்ப (சீந-கேம-அஅ): ஈண்டுச் சுடச்சொல்லுதலின் மேற்று.

‡ 'மறைமொழி தானே மந்திர மென்ப' என்பது தொல்காப்பியம் (செய்-௧௭௯)

தளைமுதலாயினவற்றாற் பிணிப்படுப்பர் கீழ்மக்களை; இதத்தாற் பிணிப்படுக்க சான்றோரை; எ-று. (கo)

கக கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டு—மென்றும
விடல்வேண்டுந் தங்கண் வெகுளி யடல்வேண்டு
மாக்கஞ் சிதைக்கும் வினை.

இ-ள்; பிறர் *அஞ்சத்தக்கவற்றின்கட் †டளம்பாதொழியவேண்டும்; தனக்குப்பிறர்செய்த நன்றியை மிகமனத்தின்கட் கொள்ளவேண்டும், என்றுந் தன்மாட்டு வெகுளியை நீக்கவேண்டும், தன் செல்வத்தைக்கேடு செய்யுஞ் செய்கையைக் கெடுக்கவேண்டும்; எ-று. (கக)

கஉ பல்லினா னோய்செய்யும் பாம்பெல்லாங் கொல்களிறு
கோட்டானோய் செய்யுங் குறித்தாரை யூடி
முகத்தானோய் செய்வர் மகளிர் முனிவர்
தவத்திற் றருக்குவர் நோய்.

இ-ள்; பல்லானே பிறரைத் துன்பஞ்செய்யும் பாம்பெல்லாம், கொல்களிறுதான் கொலைகுறித்தாரைக் கோட்டானே துன்பஞ்செய்யும்; மகளிர் தங்காதலரைப் புலந்து முகத்தானே துன்பஞ்செய்வர்; அவைபோல, அருந்தவரும் தமது தவத்தானே தம்மையிகழ்ந்தாரைத் துன்பத்தை மிகுவிப்பர்‡; எ-று (கஉ)

கங பறைநன்று பண்ணமையா யாழி னிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரிற்—பண்ணழிந்
தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரிற்
றீர்தலிற் றீப்புகுத னன்று.

இ-ள்; வீக்குதலமையாத யாழோசையிற் பறையோசை நன்று; பெருமையில்லாத ஆடவரின் நிறையுடைமையினின்ற பெண்ணே நன்று; ஒழுக்

* கடி — அச்சம்.

† தளம்புதல் - மாணம்ஆழ்தல்.

‡ தருக்கும் செருக்கும் மிகுதியையுங்குறித்துவரும்; "மிகுதியான் மிக்கவை செய்தாரை" (திருக்குறள்-கருஅ), 'கவறுங் கழகமுங் கையுந் தருக்கி' (ஷை-கூகரு) 'மிகுதியிறுவாய செல்வங்கள்' (நான்மணி-கக) என்பவற்றுமைகளான் உய்த்துணர்க.

கமழ்ந்துண்டலிற் பசித்தலேநன்று; அன்புபட்டாரி னீங்குதலிற் றீயின்கட் புகுதலேநன்று; எ-று. (௧௩)

௧௪ வளப்பாத்தி யுள்வளரும் வண்மை கிளைக்குழா
மின்சொற் குழியி னினிதெழூஉம் வன்சொற்
கரவெழூஉங் கண்ணில குழியி னிரவெழூஉ
மின்மைக் குழியின் விரைந்து.

இ-ள்; செல்வப்பாத்தியுள்ளே தோன்றி வளரும் ஈகை; இன்சொற் பாத்தியுள்ளே இடையூறின்றியே தோன்றிவளரும் தன் சுற்றக்குழாம்; கண்ணோட்டமில்லாத பாத்தியுட் கடுஞ்சொல்லும் கரத்தலும் தோன்றிவளரும்; வறுமைப் பாத்தியுட் டோன்றிவளரும் இரப்பு; எ-று. (௧௪)

௧௫ இன்னாமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

இ-ள்; ஒருவன் தனக்குப் பொல்லாப்பு வேண்டின் இரப்பினைத் தொடங்குக; இவ்வுலகின்கண் என்றும் உளனாகவேண்டிற் புகழை நிறுத்துக; தன்னொடு மறுமைக்குத் துணையாகச் செல்வதனை வேண்டினானாயின் அறத்தைச் செய்க; வென்றியை வேண்டினானாயின் வெகுளியைத் தவிர்க; எ-று.

௧௬ கடற்குட்ட மபோழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமி
றவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டங்
கற்றான் கடந்து விடும்.

இ-ள்; கடலி னாழத்தை யூடறுத்துச்செல்வர் நாவாயினை யுடையார்; சேனையி னருமையை வென்றுசெல்லும் பாய்மாவினை யுடையவன்; குற்றமில்லாத தவத்தினருமையைத் தன்மனத்தினைத் தனக்கெனவுடையான நீந்திக் கடக்கும்; அவையினதருமையைக் கற்றுவல்லவன் வென்று விடும்; எ-று. (௧௫)

௧௭ பொய்த்த லிறுவாய நட்புக்கண் மெய்த்தாக
மூத்த லிறுவாய்த் திளநலந்—தூக்கின்
மிகுதி யிறுவாய செல்வங்க டத்தந்
தகுதி யிறுவாய்த் துயிர்.

இ-ள்; வஞ்சித்தலை ஈறாகவுடையவாயிருக்கும் நட்புக்கள்; மெய்ம்மையாக மூத்தலைத் தனக்கிறுவாயாக வுடைத்து இளமைநலம்; ஆராய்தலையில்லாத செருக்கினை இறுவாயாகவுடையவா யிருக்கும் செல்வங்கள்; தம்முடைய ஒழுக்கங்களை இறுவாயாகவுடையது உயிர்வாழ்வு; **எ-று.** (கஎ)

உ0 மனைக்காக்க மாண்ட மகளி ரொருவன்
வினைக்காக்கஞ் செவ்விய னாதல்—சினச்செவ்வே
லாட்டாக்க நல்லனிவ் வேந்தென்றல் கேட்டாக்கங்
கேளி ரொரீஇ விடல்.

இ-ள்; ஒருவனது மனைக்குச் செல்வமாவது மாட்சிமையுடைய மகளிருளராதல்; ஒருவனது காரியத்துக்கு ஆக்கமாவது செப்பமுடையவனாதல்; நாட்டுக்கு ஆக்கமாவது அந்நாட்டை ஆளுஞ் சின-செவ்வேலையுடைய வேந்தன் நல்லனென்று பிறரால் சொல்லப்படுதல்; ஒருவன் கேட்டுக்கு ஆக்கமாவது தன் சுற்றத்தாரை மேவாது நீங்கி விடுதல்; **எ-று.** (கஅ)

உக * பெற்றா னதிர்ப்பிற் பிணையன்னா டானதிர்க்குங்
கற்றா னதிர்ப்பிற் பொருளதிர்க்கும்—பற்றிய
மண்ணதிர்ப்பின் மன்னவன் கோலதிர்க்கும் பண்ணதிர்ப்பிற்
பாட லதிர்ந்து விடும்.

இ-ள்; தன்கொழுநன் ஒழுக்கத்திற் கலங்கினானாயின் அவன் மனையாளும் அவன்வழியினளாகலான் அவளுங் கலங்கும்; கற்றான் கலங்குமாயின் அவன்கற்ற நூலுங் கலங்கும்; தன்னான் ஆளப்படுகின்ற நாடு நெறியில்லாது கலங்குமாயின் அரசன் செங்கோலுங் கலங்கும், யாழின்கண் வீக்கங் கலங்குமாயிற் பாடலுங் கலங்கும்; **எ-று.** (கக)

உஉ மனைக்குப்பாழ் வாணுத லின்மை தான் செல்லுந்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை யிருந்த
வவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு.

இ-ள்; தன்மனைக்குப் பாழாவது மனையாளை இல்லாமை; தான் செல்லக்கடவ திசைக்குப் பாழாவது தன்னொடு நட்புடையாரை இல்லாமை; தானிருந்த அவைக்குப் பாழாவது அறிவான் முதிர்ந்தாரை இல்லாமை; தனக்குப் பாழாவது கற்றுணர்வில்லாத வுடம்பு; **எ-று.** (உ0)

---

* பெற்றான்-கொழுநன்: "பெற்றாற் பிழையாத பெண்டிரும்" என்றார் 'மாநிலந் தோன்றாமை' என்னும் பரிபாடலினும்.

௨௧ மொய்சிதைக்கு மொற்றுமை யின்மை யொருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்குங்
கூடார்கட் கூடி விடின்.

இ-ள்; பெருமையை அழிக்கும் ஒற்றுமையின்மை; ஒருவனைத் தன் பொன்போலு மேனியைத் தானுரைக்கும்பொய் கெடுக்கும்*; பாலினது சுவையைப் பால்பெய்த பொல்லாகலங் கெடுக்கும்; தான்பிறந்த குலத்தைக் கெடுக்கும் தனக்கினமல்லாதாரோ டினமாகக் கூடின்; எ-று. (௨௧)

௨௨ புகழ்செய்யும் பொய்யா விளக்க† மிகழ்ந்தொருவன்
பேணாமை செய்வது பேதைமை—காணாக்
குருடராச் செய்வது மம்ம ரிருடீர்ந்த
கண்ணாராச் செய்வது கற்பு.

இ-ள்; ஒருவன் பொய்சொல்லாமை யென்னும் விளக்கம் அவற்குப் புகழை விளைக்கும்; ‡யாதனையு மிகழ்ந்து பாதுகாவாமையைச் செய்வது ஒருவன தறியாமை; யாதொன்றனையும் உண்மைகாணாக் குருடராய்ச் செய்வது கல்லாமை; மயக்கந் தீர்ந்த கண்ணுடையாராகச் செய்வது கல்வி; எ-று. (௨௨)

௨௩ மலைப்பினும் வாரணந் தாங்குங் குழவி
யலைப்பினு மன்னே யென் றோடுந்§—சிலைப்பினு
நட்டார் நடுங்கும் வினைசெய்யா ரொட்டா
ருடனுறையுங் காலமு மில.

இ-ள்; மேல்வலிதாகிய பகைவந்து தன்னையலைப்பினும் யானை போரைத் தாங்கும்; குழவியைத் தாயலைப்பினும் அக்குழவி அன்னேயென்று

* பொய்த்தபிற் றன்னெஞ்சே தன்னைச்சுடுமாதலால் இவ்வாறு கூறினார்.

† ‘பொய்யாமை யன்ன புகழில்லை’ ‘பொய்யா விளக்கே விளக்கு’ எனத் **திருக்குறளிற்** கூறியவாறு காண்க.

‡ ‘யாதொன்றும் பேணாமை பேதை தொழில்’ என்ப. (**திருக்குறள்**-௮௩௩.)

§ ‘தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட், டன்னா வென்னுங் குழவி’ என்றார் **குறுந்தொகையினும்** (௩௯௭).

அவள்பின்னே செல்லும்; நட்டாரோடு நட்டார் வெகுண்டு வினைசெய்வா ராயினும் அவர் நடுங்கும் வினை செய்யார்; பொருந்தாதார் ஒருவரையாற் பொருந்தினாராயினும் மனத்தாற் பொருந்தி யுடனுறையுங் காலமுமில்லை; எ-று. மேற்கொண்டவன் மலைப்பினும் என்றுமாம். (உ௩)

உசு நகைநல நட்டார்க ணந்துஞ் சிறந்த
அவைநல மன்பின் விளங்கும்*—விசைமாண்ட
தேர்நலன் பாகனாற் பாடெய்து மூர்நல
னுள்ளானா னுள்ளப் படும்.

இ-ள்; நகையினது நன்மை நட்டார்மாட்டுச் சிறக்கும்; அவையினது நன்மை மாறுபாடின்றி அன்புடைத்தாமாயின் விளங்கும்; †விசைமாட்சி மைப்பட்ட தேரினதுநலம் ஊரும்பாகனாற் பெருமையெய்தும்; ஊரினது நலம் அவ்வூர்க்கு முதன்மையுடையவன் நன்மையானே நிலைக்கப்படும்; எ-று.

உஎ அஞ்சாமை யஞ்சுக வொன்றிற் றனக்கொத்த
வெஞ்சாமை யெஞ்ச லளவெல்லா—நெஞ்சறியக்
கோடாமை கோடி பொருள்பெறினு நாடாமை
நட்டார்கண் விட்ட வினை.

இ-ள்; பழி முதலாயினவற்றை அஞ்சாமையை அஞ்சுக; பொருந்து மாயிற் றனக்குத் தகுதியாகிய ஒழுக்கங்களைத் தான் இறக்குமளவும் தவிரா தொழிக; தன்மனம் அறியக் கோடாதொழிக, கோடி பொருள்பெற்றானாயி னும்; ஆராயாதொழிக, தனக்குநட்டாராயினார்மாட்டுத் தான் செய்யவிட்ட காரியத்தை; எ-று.

அல்லதூஉம் நட்டாரோடுகூடிச் செய்யாத வினையை நாடாதொழிக வென்றுமாம். (உ௫)

உஅ கோனோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலையின்
பானோக்கி வாழுங் குழவிகள்—வானத்
துளிநோக்கி வாழு முலக முலகின்
விளிநோக்கி யின்புறாஉங் கூற்று.

இ-ள்; அரசன் செங்கோனோக்கி வாழும் உலகத்துக்குடிகளெல்லாம்; பெற்றதாயினது முலைப்பானோக்கி வாழும் குழவிகளெல்லாம்; வானத்தின்

* 'அறனிலை திரியா அன்பி னவையத்து' என்பது புறம்-எக.
† விசை-செலவு; 'கடுவிசைக்கதநாய்' என்பது புறம்-உ0௫.

கணுள்ள துளியினை நோக்கி வாழும் உலகமெல்லாம்; அவ்வுலகின் சாக்காட்டினை நோக்கி இன்புறூஉம் கூற்றம்; எ-று. (உசு)

உகூ கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணருங் கோளுணர்ந்தாற்
றத்துவ மான நெறிபடரு மந்நெறி
யிப்பா லுலகத் திசைநிற்றி யுப்பா
லுயர்ந்த வுலகம் புகும்.

இ-ள்; ஒருவன் கற்கவே மிகவும் பேதைமை குறையும்; பேதைமை குறையப் புல்லறிவுதீர்ந்து இவ்வுலகத்துள்ள இயற்கையையறியும்; அவ்வியற்கையை யறிந்தான் மெய்ம்மையாகிய வீட்டுநெறியின்கட் செல்லும்; அச்செல்லப்படுகின்ற நெறியானே இவ்வுலகின்கட் புகழை நிறுத்தி உப்பக்கத்து உயர்ந்த வீட்டுலகம் புகும்; எ-று. (உஎ)

௩0 குழித்துழி நிற்பது நீர்தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவ—மழித்துச்
செறுவுழி நிற்பது காமந் தனக்கொன்
றுறுவுழி நிற்ப தறிவு.

இ-ள்; குழித்த நிலத்துள்ளே நிற்பது நீர்க்கியற்கையாவது; பல்லோரும் பழிக்கப்பட்டவன்மாட்டே பாவம் நிற்பது; தனக்கு நண்பாயினோர் அழித்துத் தடுக்கவும் தான் சென்றுழிச்செல்வது காமமாவது; தனக்கு ஒரு துன்பம் வந்துற்றால் அவ்விடத்தே வந்து தவிர்ப்பது அறிவு; எ-று. (உஅ)

௩க திருவிற் றிறலுடைய தில்லை யொருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—யெற்றுள்ளு
மின்மையி னின்னாத தில்லை* யிலமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.†

இ-ள்; செல்வம்போல் ஒருவற்கு வலியுடையது பிறிதில்லை; கல்விபோலப் பயன்படுவன பிறவில்லை; யாதனுள்ளும் இன்மைபோல இன்னாததொன்று இல்லை; யாதொரு பொருளும் இலமென்று பிறரையிரக்கும் வன்மைபோல் வலியதிறனில்லை; எ-று.

---

* 'இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி, னின்மையே யின்னாதது' (திருக்குறள்-௧0௪௧)

† 'இரந்துதீர் வாமென்னும் வன்மையின் வன்பாட்ட தில்' (ஷை-௧0௬௩) 'வன்பட்டதில்' எனவும் பாடம்.

அல்லதூஉம் இரந்துசென்றார்க்கு யாதும் இலமென்று மறுக்கும் வன்மைபோல வலியதிறமில்லை யென்றுமாம். (௪௯)

௫௨ புகைவித்தாற் பொங்கழ றோன்றுஞ் சிறந்த
நகைவித்தாற் றோன்று முவகை—பகையொருவன்
முன்னம்வித் தாகி முளைக்கு முளைத்தபின்
னின்னாவித் தாகி விடும்.

இ-ள்; புகை காரணமாக ஒருகுநெருப்பு உண்டென்று அறியலாம்; ஒருவன் மாட்டுள்ள முறுவல் காரணமாக அவன் மனத்துள்ள உவகை தோன்றும்; ஒருவன் செய்த இன்னாக்குறிப்புச் செய்கைகளான் அவன் மனத்துள்ள பகைமை வெளிப்படும்; அப்பகைமை பின்பு இன்னாமைகளுக்குக் காரணமாகத் தோன்றும்; எ-று. (௫௰)

௫௩ பிணியன்னர் பின்னோக்காப் பெண்டி ருலகிற்
கணியன்ன ரன்புடை மாக்கள்—பிணிபயிலும்
புல்லன்னர் புல்லறிவி னாடவர் கல்லன்னர்
வல்லென்ற நெஞ்சத் தவர்.

இ-ள்; ஒருவர்க்கு உற்றநோயோடு ஒப்பர் பின்புவரும் பழியை ஆராயாது செய்யுமகளிர்; உலகத்திற்கு அலங்காரத்தை ஒப்பர் எல்லா வுயிர்க்கும் அன்புடைய மக்கள், பிறர்க்குப் பிணியை வருவிக்கும் நச்சுப்புல்லோடு ஒப்பர் புல்லியவறிவினையுடைய ஆடவர்; கல்லோடு ஒப்பர் வலிய நெஞ்சத்தையுடையார்; எ-று. (௫௧)

௫௪ அந்தணரி னல்ல பிறப்பில்லை யென்செயினுந்
தாயிற் சிறந்த தமரில்லை யாதும்
வளமையோ டொக்கும் வனப்பில்லை யெண்ணி
னிளமையோ டொப்பது மில்.

இ-ள்; மறையவர் பிறப்புப்போல மிக்க பிறப்பு இல்லை; எல்லா நன்மையுஞ் செய்தாராயினும் தாயைப்போல மிக்க தமர் இல்லை; செல்வத்தோடொக்கும் அழகு மற்றியாதும் இல்லை; ஆராயின், இளமைக்காலம்போல எல்லாநன்மையும் முடிக்கவல்லது பிறிதொன்றுமில்லை; எ-று. (௫௨)

௫௫ *இரும்பி னிரும்பிடை போழ்ப பெருஞ்சிறப்பி
னீருண்டார் நீரால்வாய் பூசுப—தேரி
னரிய வரியவற்றாற் கொள்ப பெரிய
பெரியரா னெய்தப் படும்.

* “அயிலானே போழ்வ ரயில்” என்பது பழமொழி (௩௩௭).

இ-ள்; இரும்பார்செய்த கருவிகளானே இரும்பினை இடையே போழ்வார்; பெருஞ்சிறப்பினையுடைய நீரினையுண்டார் நீரானே அந்நீரினையுண்ட வாயினைப் புகுவா, ஆதலிற் பெறுதற்கரிய பயன்களைப் பெறுதற்கரிய காரணங்களான் முடித்துக்கொள்வர்; பெரியவாயுள்ள சிறப்புக்கள் பெரியாரான் எய்தப்படும்; எ-று. (௧௩)

௧௪ மறக்களி மன்னர்முற் றோன்றுஞ் சிறந்த
வறக்களி யில்லாதார்க் கீயுமுற் றோன்றும
வியக்களி நல்கூர்ந்தார் மேற்றோன்றுங் கயக்களி
யூரிற் பிளிற்றி விடும.

இ-ள்; வீரத்தான் வருங் களிப்பு சேவகர்க்குத் தம்மையாண்ட அரசர் முன்பு தோன்றும், ஒருவன் மனத்தின்கண் மிக்க அறக்களிப்பு வறுமையுற்றோர்க்கு உதவிடத்துத் தோன்றும்; எஞ்ஞான்றுஞ் செல்வராயினோர் தம்மையொன்று வினவுதல், அவ்விவ்வலான் வருங் களிப்பு நல்கூர்ந்தார் மாட்டுத் தோன்றும்; கயமையான் வருங் களிப்புத் தான்வாழும் ஊரின்கட் டோன்றி ஆரவாரம் பெருகிவிடும், எ-று.

அல்லதூஉம் 'வியக்களி நல்கூர்ந்தார் மேற்றோன்றும்' என்பது, யாதானும் ஒருபொருள் பெற்றால் அதனைக்கண்டு வியக்குங்களி நல்கூர்ந்தார் மாட்டுத் தோன்றுமென்றுமாம். (௧௪)

௧௫ மையாற் றளிர்க்கு மலர்க்கண்கண் மாலிரு
ணெய்யாற் றளிர்க்கு நிமிர்சுடர்—பெய்ய
முழங்கத் தளிர்க்குங் குருகிலை நட்டார்
வழங்கத் தளிர்க்குமா மேல்.

இ-ள்; அஞ்சனத்தாற் றளிர்க்கும் மலர் போன்றிருந்த கண்கள்; பேரிருளின்கண் நிமிர்ந்தெரியும் விளக்கு நெய்பெற்றாற் றளிர்க்கும்; பெய்தற்கு முழங்கவே தளிர்க்குங் குருகிலை; நட்டார்க்குப் பொருள் வழங்கத் தளிர்ப்பர் மேலாயினோர்; எ-று. (௧௫)

௧௬ நகையினிது நட்டார் நடுவட் பொருளின்
றொகையினிது தொட்டு வழங்கிற்—றகையுடைய
பெண்ணினிது பேணி வழிபடிற் பண்ணினிது
பாட லுணர்வா ரகத்து.

இ-ள்; நட்டார் நடுவணிருந்து நகையினிது; பொருளின்கூட்டம் இனிது தொட்டுவழங்குவானாயின்; சிறப்புடைய பெண்ணினிது தன்கொழு

னைப் பேணி வழிபடின்; பண்ணினிது பாட்டின் ஜெழிலை அறிவாரிடத்து; எ-று. (௩௬)

௩௭ கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தலெஞ் ஞான்று
மிரப்பவர்க்குச் செல்சாரொன் றீவோர்—பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை யூனுண்டல்
செய்யாமை செல்சா ருயிர்க்கு.

இ-ள்; கரப்பவர்க்குப் பற்றுக்கோடு முகங்கவிழ்தல்; எஞ்ஞான்றும் இரப்பவர்க்குப் பற்றுக்கோடாவார் யாதானும் ஒன்றனைக்கொடுப்பார்; பரப்புநிரம்பிய சேனைக்குப் பற்றுக்கோடு தறுகண்மை; ஒருவனுயிருக்குப் பற்றுக்கோடு ஊனுண்ணாமை; எ-று. (௩௭)

௪௰ கண்டதே செய்பவாங் கம்மிய நுன்னெடைக்
கேட்டதே செய்ப புலனுள்வார்—வேட்ட
வினியவே செய்ப வமைந்தார் முனியாதார்
முன்னிய செய்யுந் திரு.

இ-ள்; தாங் கண்ணாற்கண்டதனையே செய்ய வல்லாராவர் கம்மியர்; உண்டென்ற நூலை நெறியாற்கேட்டதனையே செய்வர் அறிவினையாள்வார்; தாங் காதலித்தனவற்றுள் எல்லார்க்கும் இனியனவற்றையேசெய்வர் குணங்களானமைந்தார்; சினமில்லாதார் கருதினவற்றையே செய்யும் திருமகள்; எ-று. (௩௮)

௪௧ திருவுந் திணைவகையா னில்லா பெருவலிக
கூற்றமுங் கூறுப செய்துண்ணா—தாற்ற
மறைக்க மறையாதாங் காம முறையு
மிறைவகையா னின்று விடும்.

இ-ள்; செல்வங்களும் குடிப்பிறப்பி னன்மையான் நில்லா; பெருவலியையுடைய கூற்றமும் தானுண்ணப்படுகின்றவன் சொல்லுவனவற்றைச் செய்து உண்ணா; மிகவும் மறைப்ப மறைவுண்ணாது காமமும்; முறைமையும் அரசன் வகையானே நிற்பது; எ-று. (௩௯)

௪௨ பிறக்குங்காற் பேரெனவும் பேரா விறக்குங்கா
னில்லெனவு நில்லா வுயிரெனைத்து—நல்லா
ளுடம்படிற் றானே பெருகுங் கெடும்பொழுதிற்
கண்டனவுங் காணா கெடும்.

இ-ள்; உயிரெல்லாம் பிறக்கும் பொழுது தவிரெனவுந் தவிரா; இறக்கும் பொழுது நிற்கவெனவும் நில்லா; திருமடந்தை மனமகிழ்ந்து உடம்படிற் செல்வந் தானே பெருகும்; அச்செல்வங் கெடும்பொழுது காணப்பட்டுள்ளவாய்நின்ற பொருளுங் காணப்படாவாய்க் கெடும்; எ-று.

சக. போரின்றி வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரின்றி வாடு மரமெல்லா — நீர்பாய்
மடையின்றி நீணெய்தல் வாடும் படையின்றி
மன்னர்சீர் வாடி விடும்.

இ-ள்; போரின்றிவிடிற் பொருபடையாளர் சீர்மையழியும்; கீழ் வீழ்ந்த வேரறுமாயின் மரங்களெல்லாம் உலரும்; நீர்பாயும் மடையின்கண் நீரறின் நீண்ட நெய்தன்மலர்கள் உலரும்; சேனையின்றிவிடின் அரசர் சீர்மை வாடும்; எ-று. (சக)

சஉ ஏதிலா ரென்பா ரியல்பில்லார் யார்யார்க்குங்
காதலா ரென்பார் தகவுடையார் — மேதக்க
தந்தை யெனப்படுவான் றன்னுவாத்தி தாயென்பாள்
முந்துதான் செய்த வினை.

இ-ள்; ஒருவர்க்கு அயலாராவார் குணமில்லாதார்; யாவர்க்கும் அன்புபடப்படுவார் குணமுடையார்; விரும்பத்தக்க தாதை யெனப்படுவான் றன்னை ஓதுவித்தவன்; தாயென்பாண் முற்பிறப்பிற் றான்செய்த நல்வினை; எ-று. (சஉ)

சங பொறிகெடு நாணற்ற போழ்தே நெறிபட்ட
ஐவராற் றானே வினைகெடும் பொய்யா
நலங்கெடு நீரற்ற பைங்கூழ் நலமாறி
னண்பினார் நண்பு கெடும்.

இ-ள்; செல்வங்கெடும் ஒருவற்கு நாணின்றி ஒழிந்தபொழுதே; தன் வயத்தனவாய் வழிப்பட்ட ஐவகைப்பொறிகளாலும் பிறப்பிற்குக் காரணமாகிய வினைகெடும்; பழுதுபடாத விளைவினலங் கெடும் நீரற்ற பைங்கூழ்; மனத்தின்கண் உளதாம் ஈரந்துவரின் நண்புடையார் நண்பு கெடும்; எ-று.

அல்லதூஉம் 'பொறிகெடு நாணற்ற போழ்தே' என்பது *கயிறற்றபொழுதே †பாவையாகிய பொறிகெடும் என்றுமாம். (சங)

---

* யந்திரக்கயிறு. † மரப்பாவை. "மரப்பாவை, நாணா லுயிர்மருட்டி யற்று" என்புழிக் காண்க (திருக்குறள் - க0உ0). "பொறியறு பாவையிற் பொம்மென வ்வுமி" என்பது சிந்தாமணி (நாம - ௩௦௪).

சரு நன்றிசா நன்றறியா தார்முன்னர்ச் சென்ற
விருந்தும் விருப்பிலார் முற்சா மரும்புணர்ப்பிற்
பாடல்சாம் பண்ணறியா தார்முன்ன ரூடல்சா
மூட லுணரா ரகத்து.

இ-ள்; செய்த நன்றியை அறியாதாரிடத்துச் செய்த நன்றிகெடும்; விருப்பிலாரிடத்துச் சென்ற விருந்து வாடும்; அரிதாகப் புணர்ந்த புணர்ப்பினையுடைய பாடல்கெடும், பண்ணினையறியாதார்முன்பு; ஊடியவூடலுங் கெடும், ஊடியவற்றை உணராதொழிந்தார் மாட்டு; எ-று. (சச)

சள நாற்ற முரைக்கு மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலந் தூக்கி
னகம்பொதிந்த தீமை மனமுரைக்கு முன்ன
முகம்போல முன்னுரைப்ப தில்.

இ-ள்; மலருண்டென்பதனை அம்மலரினது நாற்றமே அறிவிக்கும்; ஒருவன் சொல்லியசொல்லே அறிவிக்கும் அவன் செய்கைநலத்தினை; ஆராயின் உட்கிடந்த தீமையை மனமே அறிவிக்கும்; மனத்தின்விளைவினை முகம்போல முற்படவறிவிப்பது மற்றொன்றில்லை, எ-று. (சரு)

சஅ மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையுந்
தவமிலா ரில்வழி யில்லை தவமு
மரசிய லில்வழி யில்லை யரசனு
மில்வாழ்வா ரில்வழி யில்.

இ-ள்; மழையின்றிவிட்டால் உலகத்தின் மக்கட்கு உணவில்லை; அம் மழைதானும் தவஞ்செய்யாதார் இருப்பிடங்களுள் இல்லையாம்; அத்தவஞ் செய்கைதானும் அரசின்முறைமை இல்லாத அரசரிருப்பிடங்களுள் இல்லை; அவைபோல, இல்லையாம்: அவ்வரசன்றானும் குடிகளில்லாத விடங்களுள்; எ-று. (சசு)

சகூ பூவினா னந்தும் புனைதண்டார் மற்றதன்
றாதினா னந்துஞ் சுரும்பெல்லாந்—தீதில்
வினையினா னந்துவர் மக்களுந் தத்த
நனையினா னந்து நறா.

இ-ள்; பூவினான் மிக்குப் பொலியும் புனையப்பட்ட தண்டார்; அப்பூவின் றாதினான் மிக்குப்பொலியும் வண்டுகளெல்லாம்; குற்றமில்லாத செய்

கைகளான் மிகுவர் மக்களும்; தத்த நிலைகொள்கையான் மிக்கு நல்லவாம் கள்; எ-று. (௪௭)

௫௦ சிறந்தார்க் கரிய செறுதலெஞ் ஞான்றும்
பிறந்தார்க் கரிய துணைதுறந்து வாழ்தல்
வரைந்தார்க் கரிய வகுத்தூ ணிரந்தார்க்கொன்
றில்லென்றல் யார்க்கு மரிது.

இ-ள்; தொடர்ச்சி மிக்கார்க்கு அரிய செறுதல்; எஞ்ஞான்றும் பிறந்தார்க்கு அரிய தம்மினத்தைத் துறந்து வாழ்தல்; உணவினை வரைந்தார்க்கு அரிய பிறர்க்குப் பகுத்தூண்டல்; இரந்து வந்தார்க்கு அரியதாமொன்றினை இல்லையென்றல் யாவர்க்கும் அரிது; எ-று. (௪௮)

௫௧ இரைசுடு மின்புறா யாக்கையுட் பட்டா
லுரைசுடு மொண்மை யிலாரை—வரைகொள்ளா
முன்னை யொருவன் வினைசுடும் வேந்தனையுந்
தன்னடைந்த சேனை சுடும்.

இ-ள்; இரை ...... பட்டால் எ-து பிணியினாற் றுன்பமுறுகின்ற உடம்பின்கட்பட்டவுணவு துன்பத்தைச் செய்யும் எ-று. உரை......யிலாரை எ-து அறிவின்றிண்மையிலாதார் தம்வாயிற் சொல்லே தங்களைத்துன்பம் உறுத்தும் எ-று. வரை .. சுடும் எ-து முற்காலத்துச் சீலங்களை வரைந்து கொள்ளாது நெறியைக்கடந்து செய்த தீவினைகள் பிற்காலத்து வந்து சுடும். வேந்தனை......சுடும் எ-து இதற்குமுன் சொன்ன வரைகொள்ளா என்னுஞ்சொல்லைவருவித்து, வரைகொள்ளாத தன்னடைந்த சேனை வேந்தனைச்சுடும் என்று பொருளுரைத்துக் கொள்க. (௪௯)

௫௨ எள்ளற் பொருள திகழ்த லொருவனை
யுள்ளற் பொருள துறுதிச்சொ—லுள்ளறிந்து
சேர்தற் பொருள தறநெறி பன்னூலுந்
தேர்தற் பொருள பொருள்.

இ-ள்; ஒருவற்கு இகழத்தக்கது பிறரை யிகழும் இகழ்ச்சி; ஒருவனை நட்பென்று உள்ளத்தகுவது அவன் சொல்லும் உறுதிச்சொல்லால்; உண்மையறிந்து அடையத்தக்கது அறநெறி; எப்பொழுதும் ஆராயத்தக்கன சகல நூல்களினுஞ் சொன்ன பொருள்கள்; எ-று. (௫௦)

ருக யாறு ளடங்குங் குளமுள வீறுசால்
மன்னர் விழையுங் குடியுள தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள.

இ-ள்; யாறுகள்புகுந்தாலும் புறம்போகாது உள்ளடங்கும் குளங்களுமுள; சிறப்பமைந்த அரசரான் விரும்பப்படுங் குடிகளுமுள; பழைய மரபினையுடைய வேதங்களைப்போலும் பாட்டுக்களுமுள; யாகம்போலும் ஈகைகளுமுள; எ-று. (ருக)

ருச எருதுடையான் வேளாள னேலாதான் பார்ப்பா
னொருதொடையான் வெல்வது கோழி—யுருவோ
டறிவுடையா ளில்வாழ்க்கைப் பெண்ணென்ப *சேனை
செறிவுடையான் சேனா பதி.

இ-ள்; எருதுடையான் வேளாளனாவான்; ஓரொற்றான்† வெல்வதாயுள்ள கோழிபோல ஒருவரோடு என்றும் மாறுபடாதான் பார்ப்பானாவான்; வடிவழகும் அறிவுமுடையாள் ஒருவற்கு இல்வாழ்க்கையுடைய பெண்ணாவாள்; சேனையொடு மேவியிருப்போன் சேனாபதியாவான்; எ-று. (ருஉ)

ருரு யானை யுடையார் கதனுவப்பர் மன்னர்
கடும்பரிமாக் காதலித் தூர்வர் கொடுங்குழை
நல்லாரை நல்லவர் நாணுவப்ப ரல்லாரை
யல்லா ருவப்பது கேடு.

இ-ள்; யானையுடையார் யானையினது சினத்தையுவப்பார்; அரசராயினோர் கடிய செலவினையுடைய குதிரையைக் காதலித்து மேற்கொள்வர்; கொடுங்குழையையுடைய நல்லாரை நல்லார் நாணுலுவப்பர்; நாணுடையரல்லாத மகளிரை அறிவுடையரல்லாதார் உவந்தாற் கேடாம்; எ-று. (ருங)

ருச கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானிற்
றுன்னிய கேளிர் பிறரில்லை மக்களி
னொண்மையவாய்ச் சான்ற பொருளில்லை யீன்றாளோ
டெண்ண கடவுளு மில்.

---

* 'சேனைச்செறிவு' என்பதும் பாடம்.

† எற்றுதல் - காலாற்றள்ளுதல்; 'ஓரொற்றான்' என்பதும் பாடம்.

இ-ள்; ஒருவற்குக் கண்போலச்சிறந்த உறுப்புப் பிறிதொன்றில்லை; தம்மைக்கொண்டானைப்போலச் செறிந்த கேளிர் மகளிர்க்கில்லை; புதல்வரைப்போல நன்மைநெறியமைந்த பொருளில்லை; தன்னை யீன்றாள்போல்வதோர் தெய்வம் எத்தெய்வத்துள்ளும் இல்லை; எ-று. (ருச)

ருஎ கற்றன்னர் கற்றாரைக் காதலர் கண்ணோடார்
செற்றன்னர் செற்றாரைச் சேர்ந்தவர்—தெற்றென
வுற்ற துரையாதா ருள்கரந்து பாம்புறையும்
புற்றன்னர் புல்லறிவி னோர்.

இ-ள்; கற்றாரையர் அக்கற்றாரைக் காதலிப்பவர்; ஒருயிர்க்குங் கண்ணோட்டமில்லார் இடும்பைசெய்வாரோடு ஒப்பர்; அவரைச்சேர்ந்தொழுகுவார் தெளியத்தங்கட்டார்க்கு உறுதியாயினவுரையாதார்; உள்கரந்து பாம்புறையும் புற்றேயனையர் புல்லறிவினோர்; எ-று. (ருரு)

ருஅ மாண்டவர் மாண்ட வினைபெறுப வேண்டாதார்
வேண்டா வினையும் பெறுபவே—யாண்டும்
பிறப்பார் பிறப்பா ரறனின் புறுவர்
துறப்பார் துறக்கத் தவர்.

இ-ள்; அறிவான் மாட்சிமைப்பட்டார் மாட்சிமைப்பட்ட செயல்களைப் பெறுவர்; அம்மாட்சிமையை வேண்டாதார் தமக்கு விருப்பமில்லாத வினைப்பயன்களையும் பெறுவர்; எக்காலமும் மக்கட்பிறப்பிற் பிறப்பாரெல்லாரும் அறத்தையே விரும்புவார்; துறக்கத்தை வேண்டுவார் துறப்பார்கள்; எ-று (ருசு)

ருஎ மன்று முளவாகு நாளு மிருசுடரு
மென்றும் பிணியுந் தொழிலொக்கு—மென்றுங்
கொடுப்பாருங் கொள்வாரு மன்னர் பிறப்பாருஞ்
சாவாரு மென்று முளர்.

இ-ள்; எக்காலத்தும் இடையறாது உளவாம் நாண்மீன்களும் இருசுடரும்; இறந்தநாள்களும் பிணிவருநாள்களும் உழவுமுதலான தொழில்களும் எல்லாமொக்கும்; எக்காலத்தும் கொடுப்பாருங் கொள்வாரு முளர்; பிறப்பாருஞ் சாவாரும் எக்காலத்தும் உளராவர்; எ-று.

என்வே உலகினது இடையறாமை யுணர்த்தியவாறு. (ருஎ)

௫0 இனிதுண்பா னென்பா னுயிர்கொல்லா துண்பான்
முனிதக்கா னென்பான் முகனொழிந்து வாழ்வான்
றனிய னெனப்படுவான் செய்தநன் றில்லா
னினிய னெனப்படுவான் யார்யார்க்கே யானு
முனியா வொழுக்கத் தவன்.

இ-ள்; இனிதாக உண்பானென்று சொல்லப்படுவான் ஓருயிரையுங் கொல்லாதே உண்பான்; எல்லாரானும் வெறுக்கத்தக்கானென்பான் முகந் திரிந்து வாழ்வான்; துணையிலானென்று சொல்லப்படுவான் தான்செய்த தொரு நல்வினையில்லாதான்; எல்லார்க்கும் இனியனெனப்படுவான் யாவர் யாவர்க்கேயாயினும் வெறுக்கத்தகாத செய்கையையுடையான்; எ-று. (௫௰)

௫௧ ஈத்துண்பா னென்பா னிசைநடுவான் மற்றவன்
கைத்துண்பான் * காங்கி யெனப்படுவான் றெற்ற
நகையாகு நண்ணார்முற் சேறல் பகையாகும்
பாடறியா தானை யிரவு.

இ-ள்; பிறர்க்குக் கொடுத்துண்பானென்று சொல்லப்படுவான் புகழை நிறுத்துவான்; கொடுத்துண்பவன் கைப்பொருளையுண்பான் அவாமிக்கா னெனப்படுவான்; தெளியவே இகழ்ச்சியாம் தன்னைவிரும்பாதார் முன்னர் ஒன்றனை நச்சிச்சேறல்; தகுதியறியானைச் சென்றிரந்தாற் பகையாகும்; எ-று.

௫௨ நெய்விதிர்ப்ப நந்து நெருப்பழல் சேர்ந்து
வழுத்த வரங்கொடுப்பர் நாகர் தொழுத்திறந்து
கன்றூட்ட நந்துங் கறவை கலம்பரப்பி
நன்றூட்ட நந்தும் விருந்து.

இ-ள்; நெய்யைப்பெய்ய நெருப்புச்சுடர் வளரும்; அடைந்துபோற் றத் தேவர் வரங்கொடுப்பர்; தொழுவைத்திறந்து கன்றுகளை யூட்டக் கறவைகள் நந்தும்; கலங்களைப்பரப்பி †மிகவூட்ட நந்தும் விருந்துகள்; எ-று.

௫௩ பழியின்மை மக்களாற் காண்க வொருவன்
கெழியின்மை கேட்டா லறிக பொருளி
னிகழ்ச்சியா னாக்க மறிக புகழ்ச்சியாற்
போற்றாதார் போற்றப் படும்.

---

* காங்கி வடமொழிச்சிதைவு.

† 'நன்குகவூட்ட' என்பதும் பாடம்.

இ-ள்; பழிபட வாழாமை ஒருவன்தன் மக்கட்பேற்றானே அறிக; ஒருவன் தனக்குநண்பல்லாமை கேடுவந்தால் அறிக; பொருள்வருகின்ற நன்மையானே அவனதாக்கம் அறிக; ஒருவன் புகழ்பட வழங்குமாயிற் றன் பகையாலும் போற்றப்படும்; எ-று. (சுக)

சுஉ கண்ணுள்ளுங் காண்புழிக் காதற்றம் பெண்ணினு
ளுருவின்றி மாண்ட வுளவா மொருவழி
நாட்டுள்ளு நல்ல பதியுள பாட்டுள்ளும்
பாடெய்தும் பாட்டே யுள.

இ-ள்; தன்கண்ணுள் வைத்துக் காணுமிடம் அவனாற் காதலிக்குங் காதலையுடைத்தாம்; பெண்களுள் வடிவின்றியே குணமாண்டன உளவாம்; ஒருவனாட்டுள் வைத்தும் ஒரு கூற்றுள்ளே நல்லபதி உளவாம்; பாட்டுக்கள் பலவற்றுள்ளும் பெருமையெய்தும் பாட்டுக்களுள; எ-று. (சுஉ)

சுங திரியழற் காணிற் றொழுப விறகி
னெரியழற் காணி னிகழ்ப—வொருகுடியிற்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்ற
னிளமைபா ராட்டு முலகு.

இ-ள்; திரியானெரியுஞ் சுடரைக்கண்டாற் றொழுவர்; விறகானெரியுஞ் சுடரைக்கண்டால் இகழ்வர்; அவைபோல, ஒரு குடிப்பிறந்து கல்வியின்றியே மூத்தானைக்கைவிட்டு இளையானாயினும் கற்றானையே பாராட்டுவர் உலகத்தார்; எ-று. (சுங)

சுச கைத்துடையான் காமுற்ற துண்டாகும் வித்தின்
முளைக்குழா நீருண்டே லுண்டாந் திருக்குழா
மொண்செய்யாள் பார்த்துறி னுண்டாகு மற்றவ
டுன்புறுவ ளாகிற் கெடும்.

இ-ள்; கைப்பொருளுடையான் காதலித்தது உளதாம்; வித்தின் முளைக்கூட்டம் நீருண்டாயின் உளதாம்; செல்வக்கூட்டம் ஒள்ளிய செய்ய பூமகள் பரிவுறின் ஒருவற்கு உளதாம்; மற்றவள் காதலியாது துன்புறுமாயின் அச்செல்வத்தின் றொகுதி அவர்க்குக் கெடும்; எ-று. (சுச)

சுரு ஊனுண் டுழுவை நிறம்பெறூஉ நீர்நிலத்துப்
புல்லினா னின்புறூஉங் காலேய நெல்லி
னரிசியா னின்புறூஉங் கீழெல்லாந் தத்தம்
வரிசையா னின்புறூஉ மேல்.

இ-ள்; ஊனையுண்டு புலி நிறம்பெறும்; நீருடைய நிலத்தெழுந்த புல்லினான் இன்புறூஉம் நிரைமுதலாயின; அதுபோல, நெல்லினரிசியாற் பசி தீர்ந்து இன்புறுவர் கீழாயினார்; மேலாயினார் தத்தந் தகுதிச்செயலான் இன்புறுவர்: எ-று. (௬௫)

௬௬ பின்னவாம் பின்னதிர்க்குஞ் செய்வினை யென்பெறினு
முன்னவா முன்ன மறிந்தார்கட் -- கென்னு
மவாவா மடைந்தார்கட் குள்ளந் தவாவா
மவாவில்லார் செய்யும் வினை.

இ-ள்; கருத்தான் ஆராய்ந்தறியாதார்க்குப் பின்பு நடுக்கத்தைச் செய்யும் வினைகள் தோன்றுவாய்; அறிந்தார்க்குப் பின்னதிர்க்கும் செய்வினைகள் என்பெறினும் முன்னவாகத் தோன்றும்; எல்லாவாற்றானும் அவாவேயாகும் யாதானும் ஒன்றனை அடைந்தார்க்கு உள்ளம்; கெடாவாம் அவாவில்லார் செய்யும் வினைப்பயன்கள்; எ-று. (௬௬)

௬௭ கைத்தில்லார் நல்லவர் கைத்துண்டாய்க் காப்பாரின்
வைத்தாரி னல்லர் வறியவர் —வைத்தெழுந்து
வைதாரி னல்லர் பொறுப்பவர் செய்தாரி
னல்லர் சிதையா தவர்.

இ-ள்; கைப்பொருள் இல்லாதார் கைப்பொருளுண்டாகிக்காப்பாரின் மிக நல்லர்; அப்பொருளை வைத்திழப்பாரின் வறியவர் மிக நல்லர்; வெகுண்டெழுந்து வைதாரின் மிக நல்லர் பொறுப்பவர்; உதவியைச் செய்தாரின் நல்லர் அதனை மறவாதார்; எ-று.

அல்லதூஉம் 'செய்தாரி னல்லர் சிதையா தவர்' என்பது அறஞ்செயதாரின் நல்லர் அவ்வறத்தை யழியாதார் என்றுமாம். (௬௭)

௬௮ மகனுரைக்குந் தந்தை நலத்தை யொருவன்
முகனுரைக்கு முண்ணின்ற வேட்கை—யகனீர்ப்
புலத்தியல்பு புக்கா னுரைக்கு நிலத்தியல்பு
வான முரைத்து விடும்.

இ-ள்; மகனது குணமே பிறர்க்கறிவிக்கும் தந்தையது நற்செய்கையை; ஒருவன் முகமே உரைக்கும் அவன் மனத்தின்கணுள்ள காதலை; அகன்ற நீர்மையினையுடைய புலத்தினது நன்மையைப் புலத்தின்கட் புக்கவன் உரைக்கும்; நிலத்தின் மக்களது தன்மையை மழை பெய்தும் பெய்யாதும் அறிவிக்கும்; எ-று. (௬௮)

௭௧ பதிநன்று பல்லா ருறைபி னொருவன்
மதிநன்று மாசறக் கற்பி—னுதிமருப்பி
னேற்றான்வீ றெய்து மினநிரை தான்கொடுக்குஞ்
சோற்றான்வீ றெய்துங் குடி.

இ-ள்; ஊர் நன்றாம் பலரும் உறைவாராயின்; ஒருவன் மதிநன்றாம் மாசற நூல் கற்றானாயின்; கூரிய கோட்டினையுடைய ஏற்றினானே சிறப்புப் பெறும் இனநிரைகள்; பிறர்க்குக் கொடுக்குஞ் சோற்றினானே சிறப்புப் பெறுந் தான்பிறந்த குடி; எ-று. (௬௯)

௭௨ ஊர்ந்தான் வகைய கலினமா நேர்ந்தொருவ
னாற்றல் வகைய வறஞ்செய றோட்ட
குளத்தனைய தூம்பி னகலங்க டத்தம்
வளத்தனைய வாழ்வார் வழக்கு.

இ-ள்; ஏறினான் வகையவாயிருக்கும் முகக்கருவியையுடைய புரவிகள்; தலைப்பட்டு ஒருவனாற்றுதல் வகையவாம் அறஞ்செய்கை; தோண்டின குளத்தினளவினவாம் தூம்பின்வாய்கள்; தத்தம் வருவாய்க்குத் தக்க வகையவாயிருக்கும் மனைவாழ்வார்செய்கை; எ-று. (௭௦)

௭௩ ஊழியும் யாண்டெண்ணி யாத்தன யாமமு
நாழிகை யானே நடந்தன—*தாழியாத்
தெற்றென்றார் கண்ணே தெளிந்தனர் வெட்கென்றார்
வெஞ்சொலா லின்புறு வார்.

இ-ள்; ஊழிகளும் யாண்டுகளானே எண்ணப்பட்டு யாப்புற்றுக் கழிந்தன; தெளிந்தார் மாட்டே நீட்டியாதே தெளிந்தனர் நல்லார்; வெள்ளிய அறிவினையுடையார் பிறர்க்கு இன்னாத வெஞ்சொற் சொல்லியே இன்புறுவர்; எ-று. (௭௧)

௭௪ கற்றான் றளரி னெழுந்திருக்குங் கல்லாத
பேதையான் வீழ்வானேற் கான்முரியு மெல்லா
மொருமைத்தான் செய்த கருவி தெரியுங்காற்
†பொய்யாவித் தாகி விடும்.

---

* "முரசு முழங்கு நெடுநக ரரசுதுயி லீயாது" (பதிற்றுப்பத்து ௨-௨) என்புழித் துயிலீயாது என்பது துயிலாது என்னும் வினைத்திரிசொல் என்றார் அதனுரைகாரர்; அதுபோல இதனையுங் கொள்க.

† 'வீயா வித்தாகி' எனவும் பிரதிபேதம்.

இ-ள்; கல்வியையுடையவன் கேடுற்றானாயின் அதனானிடர்ப்படான் எழுந்திருக்கும்; கல்லாத பேதையான் கேடுற்றானாயிற் கான்முரிந்தார் போல எறமாட்டான்; ஒருவன் ஒருபிறப்பிற்றான் செய்தனவெல்லாம் மறுபிறப் பின்கண் நுகருநுகர்ச்சிக்குக் காரணங்களாம்; மெய்யாகிய உணர்ச்சி பழுது படாத வீட்டுக்கு வித்தாம் ஆராயின்; எ-று. (௭௨)

௭௫ தேவ ரனையர் புலவருந் தேவர்
தமரனைய ரோரூ ருறைவார் தமருள்ளும்
பெற்றன்னர் பேணி வழிபடுவார் கற்றன்னர்
கற்றாரைக் காத லவர்.

இ-ள்; தேவரே போல்வர் அறிவுடையார்; தேவர் தமரேயனையர் அவ ருறையும் ஊரின்கண் வாழ்வார்; அந்தமருள் வைத்துத் தேவரால் அருள் பெற்றவரோடு ஒப்பர் அச்சொல்லியவரைப் பேணியொழுகுவார்; கற்றாரோடு ஒப்பர் கற்றாரைக் காதலித்தொழுகுவார்; எ-று. (௭௩)

௭௬ தூர்ந்தொழியும் பொய்பிறந்த போழ்தே மருத்துவன்
சொல்லென்ற போழ்தே பிணியுரைக்கு நல்லார்
விடுகென்ற போழ்தே விடுக வதற்குரியான்
றாவெனிற் றாயம் வகுத்து.

இ-ள்; ஒருவனோடு கொண்ட நட்புத் தூர்ந்துவிடும், பொய்பிறந்த பொழுதே; பிணிக்கு மருந்து செய்வோன் சொல்லுக என்ற பொழுதே பிணியுற்றவன் றானுற்ற பிணியைச் சொல்லும்; அதுபோல, அறிவுடைய நல்லார் இப்பெற்றிப்பட்ட தீவினைகளை விடுக என்றபொழுதே விட்டொழிக; ஒரு பொருட்குரியான் சாவென்றால் அவனுரிமையைக் கூறிட்டுவிடுக; எ-று. விடுகவென்னுஞ் சொல்லை இதற்கும் வருவித்துக் கொள்க. (௭௪)

௭௭ நாக்கி னறிப வினியதை மூக்கினான்
மோந்தறிப வெல்லா மலர்களு நோக்குள்ளுங்
கண்ணினாற் காண்ப வணியவற்றைத் தொக்கிருந்
தெண்ணினா னெண்ணப் படும்.

இ-ள்; நாவினானே அறிப இனிய பொருள்களை; மூக்கினானே மோந் தறிப எல்லாப் பூவினையும்; நோக்குண்டென்று கருதப்படுங் கண்ணினாற் காண்ப அணிய பொருள்களை; கண்ணாற் காணப்படாது செய்பொருள்க ளைப் பலருங் கூடியிருந்து அறிவானே ஆராயத்தகும்; எ-று. (௭௫)

௭௮ சாவாத வில்லை பிறந்த வுயிரெல்லாந்
தாவாத வில்லை வலிகளு—மூவா
திளமை யிசைந்தாரு மில்லை வளமையிற்
கேடின்றிச் சென்றாரு மில்.

இ-ள்; பிறந்த உயிரெல்லாவற்றுள்ளும் சாவாத உயிர்கள் யாவுமில்லை; வலிகளுள்ளுங் கெடாத வலிகளில்லை; மூத்துக்கழியாத இளமையைப் பெற்றாரும் இல்லை; செல்வத்தாற் கேடின்றிசென்றாருமில்லை எ-று.

௭௯ சொல்லா னறிப வொருவனை மெல்லென்ற
நீரா னறிப மடுவினை யார்கண்ணு
மொப்புரவி னானறிப சான்றாண்மை மெய்க்கண்
மகிழா னறிப நறா.

இ-ள்; ஒருவனது நன்மையையும் தீமையையும் அவன் சொல்லானே அறிப; மெல்லென்று நொயதாய நீரானறிப மடுவினதுநன்மையை; அதுபோல, யார்மாட்டுஞ் செய்யும ஒப்புரவினானே அறிப ஒருவனது சான்றாண்மையை; உடம்பின்கணுள்ள களிப்பானே அறிப நறாவுண்டமையை; எ-று.

௮௰ நாவன்றோ நட்பறுக்குந் தேற்றமில் பேதை
விடுமன்றோ வீங்கப் பிணிப்பி னவாஅப்
படுமன்றோ பன்னூல் வலையிற் கெடுமன்றோ
மாறுணிறுக்குந் துணிபு.

இ-ள்; நா நட்புக்கெடுக்குமன்றோ: ஆதலால் அதனைப் பாதுகாக்க; தெளிவில்லாத பேதை இறுகவே துன்பஞ்செய்து பிணிப்பிற் றங்கைப் பொருளை விடுமன்றோ; தன்னுசை அகப்பட்டுக்கெடுமன்றோ பலநூல்களையுங் கற்றுவல்ல வலையின்கண்ணே; ஒருவன் தன்னைக்கெடுக்குமன்றோ எல்லாரோடும் பகைகொள்ளும்பகைமையின்கட் டன்னைநிறுத்துந் துணிபுஎ-று.

௮௧ கொடுப்பி னசனங் கொடுக்க விடுப்பி
னுயிரிடை யீட்டை விடுக்க வெடுப்பிற்
கிளையுட் கழிந்தா ரெடுக்க கெடுப்பின்
வெகுளி கெடுத்து விடல்.

இ-ள்; ஒருவற்குக் கொடுப்பானாயின் றன்னுணவினைக் கொடுக்க; ஒன்றனை நீக்குவானாயின் ஒன்றனுயிர்க்கு இடையூறு வந்தனவற்றை நீக்குக; சிலரை எடுப்பானாயிற் றன்கிளைகளுட் டாழ்ந்தாரை எடுக்க; ஒன்றனைக்கெடுப்பானாயிற் றன்மனத்துள்ள வெகுளியைக் கெடுத்துவிடுக; எ-று. (எ௩)

அஉ நலனு மிளமையு நல்குரவின் கீழ்ச்சாங்
குலனுங் குடிமையுங் கல்லாமைக் கீழ்ச்சாம்
வளமில் குளத்தின்கீழ் நெற்சாம் பரமல்லாப்
பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு.

இ-ள்; வடிவழகும் இளமையும் வறுமைவந்தவிடத்திற் கெடும்; குலனுங் குடிப்பிறப்புங் கல்லாமையுளதாயின் அவ்விடத்துக் கெடும்; வருவாயில்லாத குளத்தின்கீழ் விளையுநெற் கெடும்; மிக்க பண்டத்தின்கீழ்ப் பகடு கெடும்; எ-று. (அ0)

அங நல்லார்க்குந் தமமூரென் றாரில்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றாரில்லை—யல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றாரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர்.

இ-ள்; கல்வியான் நல்லார்க்கும் தம்மூரென்று ஊரில்லை: எல்லாவூரும் பயன்படும்; நன்னெறிசெல்லும அருந்தவர்க்குத் தம்மூரென்று ஊரில்லை: எவ்வூரின்கண்ணும் பற்றுடையரல்லர்; கடையாயினோர்க்கும் தம்மூரென்று ஊரில்லை: பயன்படா; தங்கைப்பொருளுடையார்க்கும் எவ்வூரும் ஊராய்ப் பயன்படும்; எ-று. (அக)

அச கல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்ற
மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய்கூற்ற
† மல்லவை செய்வார்க் கறங்கூற்றங் கூற்றமே
‡ இலலத்துத் தீங்கொழுகு வாள்.

இ-ள்; கற்றறியா வொருவர்க்குத் தம்வாயிற்சொற் கூற்றமாம்; மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காயே கூற்றமாம்; மற்றைத்தீவினைகளைச் செய்வார்க்கு அறக்கடவுளே கூற்றமாம்; ஒருவன் மனையின்கணிருந்து தீதாக ஒழுகுவாள் அவற்குக் கூற்றமாம்; எ-று. (அஉ)

---

* குலம் ஈண்டுவருணம்.

† "அல்லவை செய்தார்க் கறங்கூற்ற மாமென்னும், பல்லவையோர் சொல்லும் பழுதன்றே' என்றார் இளங்கோவடிகளும் (சிலப்-வழக்குரை காதை).

‡ 'இல்லிருந்து தீக்கொழுகு வாள்' எனவும் பாடம்.

அங நீரான்வீ றெய்தும் விளைநில நீர்வழங்கும்
பண்டத்தாற் பாடெய்தும் பட்டினங் கொண்டாளு
நாட்டான்வீ றெய்துவர் மன்னவர் கூத்தொருவ
னாடலாற் பாடு பெறும்.

இ-ள்; நீரினாற் சிறப்புப்பெறும் விளைநிலம்; கடலான்வரும் பண்டத்தானே பெருமைபெறும் பட்டினங்கள்; தாங்கள் கொண்டு ஆளப்படுகின்ற நாட்டினாற் சிறப்புப்பெறுவர் அரசர்; நாடகங்கள் வல்லானொருவன் ஆடுதலாற் பெருமை பெறும்; எ-று.

'பாடலாற் பாடு பெறும்' என்று பாடமோதுவாருமுளர். (அங)

அச ஒன்றாக்கல் பெண்டிர் தொழினல மென்று
நன்றாக்க லந்தண ருள்ளம் பிறனாளு
நாடாக்கன் மன்னர் தொழினலங் கேடாக்கல்
கேளி ரொரீஇ விடல்.

இ-ள்; ஒருமைப்பட்ட மனத்தாற் றங்கொழுநர் வழியே முயன்றொழுகுதல் பெண்டிர்க்குத் தொழினலமாவது; எஞ்ஞான்றும் அறத்தினையே முயன்றொழுகுதல் மறையவர்க்குக் கருத்தாவது; பிறனொரரசன் ஆளும் நாட்டினைக் கொள்ள முயறல் மன்னரது தொழினலமாவது; தமக்குக் கேட்டினை முயன்றொழுகுதலாவது தங்கேளிரை நீக்குதல்; எ-று. (அச)

அரு கள்ளாமை வேண்டுங் கடிய வருதலாற்
றள்ளாமை வேண்டுந் தகுதி யுடையன
நள்ளாமை வேண்டுஞ் சிறியரோ டியார்மாட்டுங்
கொள்ளாமை வேண்டும் பகை.

இ-ள்; களவு காணாமை வேண்டும்; அஞ்சத்தகுந் துன்பத்தொடு வருதலாற் றனக்குத் தகுதியுடைய ஒழுக்கத்தை நீங்காமை வேண்டும்; சிறியாரோடு நட்புக்கொள்ளாமை வேண்டும்; யாவர்மாட்டும் பகைகொள்ளாமை வேண்டும்; எ-று. (அரு)

அசு பெருக்குக நட்டாரை நன்றின்பா லுய்த்துத்
தருக்குக *வொட்டாரைக் கால மறிந்தாங்
கருக்குக யார்மாட்டு முண்டி சுருக்குக
செல்லா விடத்துச் சினம்.

* 'மாற்றாரை' எனவும் பிரதிபேதம்.

இ-ள்; நட்டாரை நன்மையின்கட் செலுத்திப் பெருக்குவிக்க; பகைவரைக் காலமறிந்து வலிசெய்க; யாவர் மனையகத்தும் உண்டலைத் தவிர்க; தனக்குச் செல்லாவிடத்திற் சினத்தைச் சுருக்குக; எ-று. (அசு)

அகூ மடிமை கெடுவார்க ணிற்குங் கொடுமைதான்
பேணாமை செய்வார்க ணிற்குமாம் பேணி
ஞாணின் வரைநிற்பர் நற்பெண்டிர் நட்டமைந்த
தூணின்வரை நிற்குங் களிறு.

இ-ள்; கெடக்கடவார் மாட்டு முயற்சியின்மை நிற்கும்; பிறர் விரும்பாதன செய்வார்மாட்டுக் கொடுமை நிற்கும், விரும்பப்பட்ட நாணெல்லையின்கண் நிற்பர் நற்பெண்டிர்; நட்டு அமைவுடைத்தாய தூணின்கண் நிற்பது களிறாவது; எ-று. (அஎ)

கூ0 மறையறிப வந்தண் புலவர் முறையொடு
வென்றி யறிப வரசர்க ளென்றும
வணங்க லணிகலஞ் சான்றோர்க்கஃ தன்றி
யணங்கல் * வணங்கின்று பெண்.

இ-ள்; மறைநூலை அறிவர் அந்தணராய புலவர்; நடுவு செய்கையொடு பகைவரை வெல்கையை அறிவர் அரசர்; எஞ்ஞான்றும் எல்லார்க்கும் பணிந்தொழுகுதல் சான்றோர்க்கு அணிகலமாவது; அப்பெற்றியின்றித் தெய்வத்தைச் சார்ந்தொழுகுதலின்றியே கொழுநனையே தொழுவது பெண்ணாவது; எ-று. (அஅ)

கூக பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள் காப்பி
பெட்டாங் கொழுகும் †பிணையிலி—முட்டினுஞ் [னும்
சென்றாங்கே சென்றொழுகுங் காமங் கரப்பினுங்
கொன்றான்மே னிற்குங் கொலை.

இ-ள்; பெண்டிர்க்குச் சொல்லிய ‡கற்புடைமைநெறியின்கண்ணே யுளளாய் ஒழுகும் குணமுடையாள்; எல்லாக்காவலும் உளவாயினும் தானினைத்தபடியே ஒழுகும் நல்லாரான் விரும்பப்படாதாள்; இடையூறுபட்டு முடியாதாயினும் சென்றவிடத்தே சென்றொழுகுங் காமமானது; மறைக்கினுங் கொன்றான்மேலே வெளிப்படுங் கொலையானது; எ-று. (அகூ)

* 'வணங்குவ' எனவும் பாடம்.
† 'பிணியிலி' எனவும் பாடம். பிணி - பிணிப்பு.
‡ 'உண்மைநெறியின்கண்ணே' எனவும் பாடம்.

௬உ வன்கண் பெருகின் வலிபெருகும் பான்மொழியா
ரின்கண் பெருகி னினம்பெருகுஞ் சீர்சான்ற
மென்கண் பெருகி னறம்பெருகும் வன்கட்
கயம்பெருகிற் பாவம் பெரிது.

இ-ள்; ஒருவர்க்கு அஞ்சாமை பெருகின் வலிபெருகும்; பால்போன்ற மொழியினையுடைய மனைவியர் கண்ணோட்டம் பெருகிற் சுற்றம் பெருகும்; புகழமைந்த *அருள்பெருகின் அறவினை பெருகும்; வன்கண்மையுடைய கீழ்மைக்குணம் பெருகிற் பாவம் பெரிது; எ-று. (௬௦)

௬௩ இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றங் குற்றந்
தமரல்லார் கையகத் தூண்.

இ-ள்; இளமைக்காலத்துக் கல்லாதொழிதல் குற்றமாம்; வருவாயில்லாத காலத்து வண்மை குற்றமாம்; தனக்குச் சுற்றத்தாரில்லாத காலத்துப் பிறரொடு வெகுடல் குற்றமாம்; தமரல்லாதார் கையகத்து உணவையுண்டலுங் குற்றமாம்; எ-று. (௬௧)

௬௪ மல்லா விடத்துங் கொலைதீது மக்களைக்
கல்லா வளர விடறீது—நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பிற் குலந்தீது
கொள்கை யழிந்தக்†கடை.

இ-ள்; நன்மை பயந்ததாயினும் எல்லாவிடத்துங் கொல்கைதீதாம்; புதல்வரைக் கல்லாது வளரவிடுதல் தீதாம்; நல்லாருடைய வடிவழகு தீதாம் நாணில்லாராய் நிற்பின்; தாம் பிறந்த குலந்தீதாம் குலத்துக்குத்தக்க ஒழுக்கமழிந்தவிடத்து; எ-று. (௬உ)

௬௫ ஆசார மென்பது கல்வி யறஞ்சேர்ந்த
போக முடைமை பொருளாட்சி‡யார்கண்ணுங்
கண்ணோட்ட மின்மை முறைமை தெரிந்தாள்வா
னுண்ணோட்ட மின்மையு மில்.

---

* 'வளம்பெருகின்' எனவும் பாடம்.
† 'யழிந்தவிடை' எனவும் பாடம்.
‡ "ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந், தேர்ந்துசெய் வஃதே முறை" (திருக்குறள்-௫௪௧.)

இ-ள்; ஒருவற்குக் கல்வியின் பயனாவது ஆசாரமென்று சொல்லப்படுவது; பொருளாட்சியின் பயனாவது அறத்தைச்செய்து இன்பத்தை நுகர்தல்; எவர்மாட்டுங் கண்ணோடாமை நடுவுசெய்தன் முறைமையாவது; ஆராய்ந்து அரசினையாள்வான் *மனத்தாலாராயாது ஒன்றனையுஞ் செய்தலில்லை; **எ-று.** (௩௩)

௩௪ கள்ளி னிடும்பை களியறியு நீரிடும்பை
புள்ளினு ளோங்க லறியு நிரப்பிடும்பை
பல்பெண்டி ராள னறியுங் கரப்பிடும்பை
கள்வ னறிந்து விடும்.

இ-ள்; கட்பெருமையான்வரும் இடும்பையைக் கள்ளுண்டு களிப்பவன் அறியும்; நீர்பெருமையான் வரும் இடும்பையைப் புள்ளினுள்வைத்துச் சாதகப்புள்ளறியும்; பொருளைத்தேடும் இடும்பையைப் பல்பெண்டிராளன் அறியும்; கரத்தலருமையின்கண்வரும் இடும்பையைக் கள்வன் அறியும்; **எ-று.** (௩௪)

௩௫ வடுச்சொ னயமில்லார் வாய்த்தோன்றுங் கற்றார்வாய்ச்
சாயினுந் தோன்றா கரப்புச்சொற் றீய
பரப்புச்சொற் சான்றோர்வாய்த் தோன்றா கரப்புச்சொற்
கீழ்கள்வாய்த் தோன்றி விடும்.

இ-ள்; பிறர்க்குப் பழியாயின கூறுதல் ஈரமில்லாதார்வாயிற் றோன்றும்; கற்றார்வாயின்கட் சாயினும் உளவாகா வஞ்சனைச்சொல்; தீயவற்றைப்பரப்புஞ்சொல் அமைந்தாரவாயின்கட் டோன்றா, இரந்தார்க்கு இல்லையென்னுங் கரப்புச்சொற் கீழ்மக்கள்வாயின்கட் டோன்றும், **எ-று.** (௩௫)

௩௬ வாலிழையார் முன்னர் வனப்பில்லார் பாடிலர்
சாலு மவைப்படிற் கல்லாதான் பாடிலன்
†கற்றா னொருவனும் பாடிலனே கல்லாதார்
பேதையார் முன்னர்ப் படின்.

இ-ள்; வாலிய அணியையுடைய மகளிர்முன்னர் அழகில்லாதார் பெருமையிலர்; நிரம்பிய அறிவினையுடைய அவையிற்புக்காற் கல்லாதான் பெருமையிலன், கற்றவனும் பெருமையிலன் கல்லாதார் முன்னரும்: பேதையார் முன்னரும்; **எ-று.** (௩௬)

---

* 'கருத்துள்நாடாது' எனவும் பாடம்

† கற்றானொருவனும் கல்லாதார் முன்னர்ப்படிற் பாடிலனே எனவும், கற்றானொருவனும் பேதையார்முன்னர்ப்படிற்பாடிலனே எனவும் பிரித்து முன்னவற்றோடு நான்காக்குக.

கூகூ மாசு படினு மணிதன்சீர் குன்றாதாம்
பூசிக் கொளினு மிரும்பின்கண்—மாசொட்டும்
†பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும்.

இ-ள்; நன்மணி மாசுபட்டனவாயினுந் தன்விழுப்பங் குன்றாதாம் கழுவிக்கொள்ளினும் இரும்பின்கண் மாசடையும்; தளைமுதலாயினவற்று ள்ளிட்டு ஒறுப்பினும்: அறிவுகொளுத்தி அவனறிவை விளக்கினும் கீழாயி ஞன் றன்செய்கைகளாங்கீழ்மையைக் காட்டிவிடும்; எ-று. (கூஎ)

௱௦௦ எண்ணொக்குஞ் சான்றோர் மரீஇயாரிற் றீராமை
புண்ணொக்கும் போற்றா ருடனுறைவு—பண்ணிய
யாழொக்கு நட்டார் கழறுஞ்சொல் பாழொக்கும்
பண்புடையா ளில்லா மனை.

இ-ள்; அறிவினையொக்கும் மருவியமைந்தாரை நீங்காமை; புண்ணி னையொக்கும் பகைவருடன் உறைந்தொழுகுதல்; பண்ணிய யாழோசை யை யொக்கும் நட்டார்கழறுஞ்சொல்: குணமுடையமனையாளை இல்லாத மனை பாழினையொக்கும்; எ-று. (கூஅ)

௧௦௧ ஏரி சிறிதாயி னீருர மில்லத்து
வாரி சிறிதாயிற் பெண்ணூர் மேலைத்
தவஞ்சிறி தாயின் வினையூரு மூரு
முரன்சிறி தாயிற் பகை.

இ-ள்; குளஞ்சிறிதாயின் நீர்போம்; மனையிற்புகும் வருவாய் சிறிதா யின் மனையாள் கொழுநனை மதியாது மேற்கொள்ளும்; முன்னுட்செய்த தவஞ்சிறிதாயிற் றீவினைவந்து மேற்கொள்ளும்; ஒருவன் வலி சிறிதாயிற் பகைவந்தடரும்; எ-று. (கூகூ)

நான்மணிக்கடிகை மூலமும் உரையும்

முற்றின

---

* கீழ் தன்னைப்பாசத்துளிடினும் மாசுடைமை காட்டிவிடும் எனவும் கீழ் தன்னைவிளக்கினும் மாசுடைமை காட்டிவிடும் எனவும் பிரித்து முன் னவற்றோடு நோக்குக.

கடவுள்துணை.

மதுரைத்

தமிழாசிரியர் மகனார்

பூதஞ் சேந்தனார்

அருளிச்செய்த

இனியது நாற்பது.*

மூலமும் உரையும்.



க. கண்மூன் றுடையான்றாள் சேர்தல் கடிதினிதே
தொன்மாண் டுழாய்மாலை யானைத் தொழலினிதே
முந்துறப் பேணி முகநான் குடையானைச்
சென்றமர்ந் தேத்த லினிது.

என்பது—கண்மூன்றுடையான் பாதங்களையடைதல் மிகவினிது; பழைய மாட்சிமையுடைய துழாய்மாலையைப் புனைந்தானை தொழலினிது; எல்லாரினும் பேணி முந்துற முகநான்குடையானைச் சென்றமர்ந்தேத்தல் இனிது என்றவாறு. (க)

உ. பிச்சைபுக் காயினுங் கற்றன் மிகவினிதே
நற்சவையிற் கைக்கொடுத்தல் சாலவு முன்னினிதே
முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே
தெற்றவு மேலாயார்ச் சேர்வு.

எ-து—இரந்துண்டாயினுங் கற்றல் மிகவினிது; கல்விகள் நல்லவை முன்னர்த் தமக்கு வந்துதவுதன் மிகவினிது; முத்தையொக்கும் நகையினையுடையார் மெல்லியசொல் இனிது; அதுபோலத் தெளியவும் இனிது மேலாயாரைச் சேர்தல்; எ-று. (உ)

* இஃது சங்கத்தாராற் றொகுக்கப்பட்ட பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

ங. உடையான் வழக்கினி தொப்ப முடிந்தான்
மனைவாழ்க்கை முன்னினிது மாணாதா மாயி
னிலையாமை நோக்கி நெடியார் துறத்த
றலையாகத் தானினிது நன்கு.

எ-து—பொருளுடையானது வண்மை இனிது; மனையாளுள்ளமுங் கொழுநனுள்ளமும் வேறுபடாதுபொருந்தின் மனைவாழ்க்கை மிகவினிது; மாட்சிமைப்படாதாயின் நிலையாமையை ஆராய்ந்து நீட்டியாதே துறத்தல் தலைப்பட மிகவினிது; எ-று. (ங)

ச. ஏவது மாறா விளங்கிளைமை முன்னினிதே
நாளு நவைபோகான் கற்றன் மிகவினிதே
யேருடையான் வேளாண்மை தானினி தாங்கினிதே
தேரிற்கொ ணட்புத் திசைக்கு.

எ-து—ஏவியது செய்யும் இளங்கிளைமை ஒருவற்கு மிகவினிது, குற்றங்களிற் செல்லாது நாடோறுங் கற்றல் மிகவினிது; ஏருடையான் வேளாண்மை இனிது, அதுபோல இனிது தான் செல்லுந் திசைக்கு ஆராயின் நட்புக்கோடல்; எ-று. (ச)

ரு. யானை யுடைப்படை காண்டன் மிகவினிதே
யூனைத்தின் றூனை பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினி தாங்கினிதே
மான முடையார் மதிப்பு.

எ-து—யானைகளையுடைய சேனையைக் காண்டல் மிகவினிது; பிறிதொன்றூனைத் தின்று தன்னூனைப் பெருக்காமை மிகவினிது; கர்டியாற்றுக் கரைமருங்கினூர் இனிது, அவைபோல இனிது மானமுடையார் நினைப்பு; எ-று. (ரு)

சா. கொல்லாமை முன்னினிது கோல்கோடி மாராயன்
செய்யாமை முன்னினிது செங்கோல னாகுத
லெய்துந் திறத்தா லினிதென்ப யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு.

எ-து—ஒருயிரைக் கொல்லாமை மிகவினிது; அரசன் கோல் செய்யாமை மிகவினிது; மற்றவன் செங்கோலனாகுதல் மிகவினிது மாட்டும் எய்துந்திறத்தாற் பொல்லாங்குரையாமை மிகவினிது; எ-

எ. ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிதே
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே
வாய்ப்புடைய ராகி வலவைக ளல்லாரைக்
காப்படையக் கோட லினிது.

எ-து—தமக்கியலுமளவினால் அறஞ்செய்கை மிகவுமினிது; நெறிப்பட்டார் சொல்லும் பயனையுடைய சொல்லினினிமை இனிது; பழுதிலராகி நாணிலிகளல்லாதாரைக் காப்பாகப் பொருந்தக்கோடல் இனிது; எ-று. (எ)

அ. அந்தண ரோத்துடைமை யாற்ற மிகவினிதே
பந்த முடையான் படையாண்மை முன்னினிதே
தந்தையே யாயினுந் தானடங்கா னாகுமேற்
கொண்டடையா னாக லினிது.

எ-து—மறையவர்க்கு ஓத்துடைமை நிரம்ப மிகவினிது; சுற்றமுடையான் படைகொண்டு செயயும் ஆண்மை மிகவினிது; தாதையேயாயினும் அவனடங்கானாயின் அவனைக் கொண்டடையானாகல் இனிது; எ-று. (அ)

௯. ஊருங் கலிமா வுரனுடைமை முன்னினிதே
தார்புனை மன்னர் தமக்குற்ற வெஞ்சமத்துக்
கார்வரை யானைக் கதங்காண்டன் முன்னினிதே
யார்வ முடையவ ராற்றவு நல்லவை
பேதுறார் கேட்ட லினிது.

எ-து—தான் நடாத்துகின்ற மிக்கமா வலியுடைமை மிகவினிது; தார்புனையுமன்னர் தமக்குற்ற செருக்களத்துக் கார்வரையைப்போன்ற யானையினது வெகுளியைக் காண்டல் அவர்க்கு மிகவினிது; எல்லா உயிர்கண்மேலும் மிகவும் அன்புடையார் நல்லகேள்விகளை மயக்கமுறாது கேட்டல் இனிது; எ-று. (௯)

௧0. தங்க ணமர்புடையார் தாம்வாழ்தல் முன்னினிதே
யங்கண் விசும்பி னகனிலாக் காண்பினிதே
பங்கமில் செய்கைய ராகிப் பரிந்தியார்க்கு
மன்புடைய ராத லினிது.

எ-து—தம்மாட்டுச் சேர்வுடையார்தாஞ் செல்வமுடையராதல் மிகவினிது; அங்கண் விசும்பின்கண்விரிந்த நிலாக்காண்டல் இனிது; குற்றமில் செய்கையராகிப் பரிந்தியாவர்க்கும் அன்புடையராதல் இனிது; எ-று.

கக. கடமுண்டு வாழாமை காண்ட லினிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்க லினிதே
மனமாண் பிலாதவரை யஞ்சி யகற
லெனைமாண்புந் தானினிது நன்கு.

எ-து—தனிசுகொண்டு உண்டுவாழாமை காண்டல் இனிது; நிறையி ஞன் மாட்சிமையில்லாத பெண்டிரை நீக்கல் இனிது; மனத்தின்கண் மாட்சிமையில்லாதவரை அஞ்சிநீங்குதல் எல்லா மாட்சிமையினும் மிக இனிது; எ-று. (கக)

கஉ. அதர்சென்று வாழாமை யாற்ற வினிதே
குதர்சென்று கொள்ளாத கூர்மை யினிதே
யுயிர்சென்று தாம்படினு முண்ணார்கைத் துண்ணாப்
பெருமைபோற் பீடுடைய தில்.

எ-து—வழிபோய் முயன்று வாழாமை மிகவினிது; யாதானும் ஒரு நூற்குப் பொருளைக் கோட்டிக்கொள்ளாத கூர்மை யினிது; பசியான் உயிர் இறந்துபடினும் உண்ணப்படாதார் கையினுணவை உண்ணாத பெருமைபோலப் பெருமையுடையதில்லை; எ-று. (கஉ)

கங. குழவி பிணியின்றி வாழ்த லினிதே
கழறு மவையஞ்சான் கல்வி யினிதே
மயரிக ளல்லாதார் மாண்புடையார்ச் சேருந்
திருவுந்தீர் வின்றே லினிது.

எ-து—குழவிகள் பிணியுறாது வாழ்தல் இனிது; செவ்விய பொருள் சொல்லினுங் கழறுமவையத்தாரை அஞ்சாதுநின்று சொல்லுங் கல்வி இனிது; மயக்கமுடையாரல்லாராய் மாட்சிமையுடையாரை அடையுஞ் செல்வமும் நீங்காதாயின் இனிது; எ-று. (கங)

கச. மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே
தான மழியாமைத் தானடங்கி வாழ்வினிதே
யூனமொன் றின்றி யுயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லா மினிது.

எ-து—தனக்கு மானமழிந்தபின் உயிர்வாழாமை இனிது; தானிருந்துவாழும் இருப்புச்சிதையாவகை தானடங்கிவாழ்தல் இனிது; குற்றமொன்றின்றி மிக்க பொருளுடைமை எல்லாமக்கட்கும் இனிது; எ-று (கச)

௧௫. குழவி தளர்நடை காண்ட லினிதே
யவர்மழலை கேட்ட லமிழ்தி னினிதே
வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்து
மனனஞ்சா னாக லினிது.

எ-து—குழவிகள் தளர்நடையைக் காண்டல் இனிது; அவர் மழலைச் சொல்லைக் கேட்டல் அமிழ்துபோல மிகவும் இனிது; வினைகிழவன் வந்து சேர்ந்து தான் வெம்மையுறும்பொழுது மனத்தின்கண் அஞ்சாது நிற்றல் இனிது. எ-று; (௧௫)

௧௬. பிறர்மனை பின்னோக்காப் பீடினி தாற்ற
வறனுழக்கும் பைங்கூழ்க்கு வான்சோர் வினிதே
மறமன்னர் தங்கடையுண் மாமலைபோல் யானை
மதமுழக்கங் கேட்ட லினிது.

எ-து—பிறனுடைய மனையாளைப் பின்பு பாராத பெருமை மிகவும் இனிது; நீரின்றி வருந்தும் பைங்கூழ்க்கு மழைசொரித லினிது; வீரத்தையுடைய மன்னர்தம் வாயிற்கடைப் பெரிய மலைபோன்றிருந்த யானைகளது களிப்பான முழக்கங் கேட்டன் மன்னர்க்கினிது; எ-று (௧௬)

௧௭. கற்றார்முற் கல்வி யுரைத்தன் மிகவினிதே
மிக்காரைச் சேர்தன் மிகமாண முன்னினிதே
யெட்டுணை யானு மிரவாது தானீத
லெத்துணையு மாற்ற வினிது.

எ-து—கற்றார் முன்பு தங்கல்வியைச் சொல்லி எற்றுதல் மிகவினிது; மிக்க அறிவுடையாரைச் சேர்தன் மாட்சிமைப்பட இனிது; எள்ளளவாயினும் இரவாது தான் பிறர்க்கீதல் எல்லாவாற்றானும் இனிது; எ-று. (௧௭)

௧௮. * நட்டார்க்கு நல்ல செயலினி தெத்துணையு
மொட்டாரை யொட்டிக் கொளலதனின் முன்னினிதே
பற்பல தானியத்த தாகிப் பலருடையு
மெய்த்துணையுஞ் சேர வினிது. (௧௮)

௧௯. மன்றின் முதுமக்கள் வாழும் பதியினிதே
தந்திரத்தின் வாழுந் தவசிகண் மாண்பினிதே

* இச்சங்கத்திற்குக் கிடைத்த பிரதியில் இப்பாட்டிற்கு உரை காணப்படவில்லை.

யெஞ்சா விழுச்சீ ரிருமுது மக்களைக்
கண்டெழுதல் காலை யினிது.

எ-து—அம்பலத்தின்கண் அறிவுடையார் வாழும் பதி இனிது; தத்தம் நூல்களிற் சொன்ன நெறியானே வாழும் அருந்தவரது மாட்சியினிது; குறையாத விழுமிய சீரையுடைய இருமுதுமக்களைக் காலையின்கட் டொழுதெழுதல் இனிது; எ-று. (௧௯)

௨௦. நட்டார்ப் புறங்கூறான் வாழ்த னனியினிதே
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகன் முன்னினிதே
முட்டில் பெரும்பொரு ளாக்கியக்கான் மற்றது
தக்குழி யீத லினிது.

எ-து—உற்றாரைப் பழிகூறாது வாழ்தல் மிகவினிது; உண்மையாய நெறியினை விரும்பி யாவரையும் பணிந்தொழுகுதல் மிகவினிது; குறையிலாத பெரும்பொருள்களைத் தேடியவிடத்து அஃபொருளைத் தகுதியுடையார்க்குக் கொடுத்தல் இனிது; எ-று. (௨௦)

௨௧. சலவரைச் சாரா விடுத லினிதே
புலவர்தம் வாய்மொழி போற்ற லினிதே
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாந்
தகுதியால் வாழ்த லினிது.

எ-து—வஞ்சகரை அடையாதொழுகுதல் இனிது; அறிவுடையார் வாய்மொழியைப் போற்றிக்கோடல் இனிது; அகன்ற இடத்தையுடைய ஞாலத்து வாழுமுயிர்க்கெல்லாம் தகுதிப்பட ஒழுகுதல் இனிது; எ-று.
சலவர்—வஞ்சகர் (௨௧)

௨௨. பிறன்மனைப் பொருள்வெளவான் வாழ்த லினிதே
யறம்புரிந் தல்லவை நீக்க லினிதே
மறந்தேயு மாணா மயரிகட் சேராத்
திறந்தெரிந்து வாழ்த லினிது.

எ-து—பிறன்கைப் பொருள் வெளவாது வாழ்தல் இனிது; அறத்தைச் செய்து பாவங்களை நீக்குதல் இனிது; மறந்தாயினும் மாட்சிமைப்படாத அறிவில்லாரைச் சேராத் திறங்களைத் தெரிந்துவாழ்தல் இனிது; எ-று. (௨௨)

உ௩. வருவா யறிந்து வழங்க லினிதே
யொருவர்பாங் காகாத வூக்க மினிதே
பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்
திரிபின்றி வாழ்த லினிது.

எ-து—தனக்குப் பொருள்வருவாயை அறிந்துகொடுத்தல் இனிது; ஒருவர்க்குச் சார்வாகாத ஊக்கம் இனிது; பெரிய பயனையுடைத்தாயினும் தாம் நினைந்தவற்றை ஆராயாதுசெய்யாது இயற்கையான் வாழ்தல் இனிது; எ-று. (உ௩)

உ௪. காவோ டறக்குளந் தொட்டல் மிகவினிதே
யாவோடு பொன்னீத லந்தணர்க்கு முன்னினிதே
பாவமு மஞ்சாராய்ப் பற்றுந் தொழின்மொழிச்
சூதரைச் சோர்த லினிது.

எ-து—காவினையும் ஆக்கிக் குளத்தினையுந் தொட்டல் மிகவும் இனிது; ஆவும் பொன்னும் அந்தணர்க்கீதல் மிகவும் இனிது; பாவத்தையுமஞ்சாது பொருண்மேற்பற்றுந் தொழிலையும் மொழியையுமுடைய சூதரை நீக்கல் இனிது; எ-று. (உ௪)

உ௫. வெல்வது வேண்டி வெகுளாதா னோன்பினிதே
யொல்லுந் துணையுமொன் றுய்ப்பான் பொறையினிதே
யில்லது காமுற் றிரங்கி யிடர்ப்படார்
செய்வது செய்த லினிது.

எ-து—தான் வெல்வதனைவேண்டிப் பிறரோடு வெகுளாதான் பொறை இனிது; தனக்கியலுமளவு மேற்கொண்டதொன்றை நடாத்து வானாற்றல் இனிது; தனக்கில்லையதனைக் காதலித்து இரங்கியிடர்ப்படாது இயல்வதனைச்செய்தல் இனிது; எ-று. (உ௫)

உ௬. ஐவாய வேட்கை யவாவடக்கன் முன்னினிதே
கைவாய்ப் பொருள்பெறினுங் கல்லார்கட் டீர்வினிதே
நில்லாத காட்சி நிறையின் மனிதரைப்
புல்லா விடுத லினிது.

எ-து—ஐம்பொறியுடைய வேட்கையையும் அவாவினையும் அடக்கல் மிகவினிது: கைவயின்கண்ணே பொருள் பெறினும் கல்லாதாரை

விடுதலினிது; நிலையில்லாத அறிவையுடைய திண்மையில்லாத மக்களை மேவாது விடுதல் இனிது; எ-று. (உசு)

உஎ. நச்சித்தற் சென்றார் நசைகொல்லா மாண்பினிதே
யுட்கில் வழிவாழா வூக்க மிகவினிதே
யெத்திறத் தானு மியைவ கரவாத
பற்றினிற் பாங்கினிய தில்.

எ-து—தன்னை நச்சிச்சென்றார் நசையைச் சிதையாத மாண்பினிது; தன்னை மதிப்பில்லாதவிடத்து வாழாத வுள்ளம் மிகவினிது; எப்பெற்றியாயினுங் பிறர்க்குக் கொடுக்கப்பொருந்துவதனைக் கரவாத மனைவாழ்வு போல நன்றாகவினியது பிறிதில்லை; எ-று. (உஎ)

உஅ. தானங் கொடுப்பான் றகையாண்மை முன்னினிதே
மானம் படவரின் வாழாமை முன்னினிதே
யூனங்கொண் டாடா ருறுதி யுடையவை
கோண்முறையாற் கோட லினிது.

எ-து—தானஞ் செயவானது தகுதியது தலைமை இனிது; மானங் கெடவந்ததாயின் உயிர் வாழாமை மிக வினிது; குற்றங்கொண்டாடாது நன்மையுடையனவற்றை மனத்திற் கொள்ளு முறைமையாற் கோடல் இனிது; எ-று. (உஅ)

உகூ. ஆற்றானை யாற்றென் றலையாமை முன்னினிதே
கூற்றம் வரவுண்மை சிந்தித்து வாழ்வினிதே
யாக்க மழியினு மல்லவை கூறாத
தேர்ச்சியிற் றேர்வினிய தில்.

எ-று—ஒன்றனைச் செய்யமாட்டாதானைச் செய்யென்றலையாமை மிகவுமினிது; கூற்றத்தின் வரவுண்டென்று நினைத்துவாழ்தல் இனிது; செல்வமழியினும் பாவமானவைகூறாத ஆராய்ச்சிபோல ஆராய்தன்மிக வினியதில்லை; எ-று. (உகூ)

௩0. கயவரைக் கைகழிந்து வாழ்த லினிதே
யுயர்வுள்ளி யூக்கம் பிறத்த லினிதே
யெளிய ரிவரென் றிகழ்ந்துரையா ராகி
யொளிபட வாழ்த லினிது.

எ-று—கீழாயினாரைக் கைகடந்து வாழ்தல் இனிது; உயர்ந்த செய்கைகளை நினைந்து ஊக்கமெழுதல் இனிது; எளியரிவரென்று இகழ்ந்து பேசாராகிப் புகழ்பட வாழ்தல் இனிது; எ-று. (௩௰)

௩௧. நன்றிப் பயன்றூக்கி வாழ்த லினியினிதே
மன்றக் கொடும்பா டுரையாத மாண்பினிதே
யன்றறிவா ரியாரென் றடைக்கலம் வெளவாத
நன்றியி னன்கினிய தில்.

எ-று—ஒருவன் செய்த நன்றியைப் பயன்றூக்கிவாழ்தல் மிகவினிது; மன்றத்தின்கணின்று வழக்கழிவு சொல்லாமை மிகவினிது; அடைக்கலம் வைத்தவன்று அறிவார்யார் என்றுசொல்லி அதனை வெளவாத நன்றியேபோல மிகவுமினியதில்லை; எ-று. (௩௧)

௩௨. அடைந்தார் துயர்கூரா வாற்ற லினிதே
கடன்கொண்டுஞ் செய்வன செய்த லினிதே
சிறந்தமைந்த கேள்விய ராயினு மாராய்ந்
தறிந்துரைத்த லாற்ற வினிது.

எ-று—தம்மையடைந்தார் துயர்கூராதவாறு ஆற்றல் இனிது; தனிசுகொண்டாயினுஞ் செய்யத்தகுவன செய்தல் இனிது; மிகவடைந்த கேள்வியராயினும் ஆராய்ந்தறிந்தே ஒன்றைச் சொல்லுதல் இனிது; எ-று.

௩௩. கற்றறிந்தார் கூறுங் கருமப் பொருளினிதே
பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்னினிதே
தெற்றென வின்றித் தெளிந்தாரைத் தீங்கூக்காப்
பத்திமையிற் பாங்கினிய தில்.

எ-று—நூல்களைக் கற்றுணர்ந்தார் சொல்லுங் கருமப்பொருள் இனிது; பற்றுக் கோடாயமையாத வேந்தன்கீழ் வாழாமை மிகவும் இனிது; தன்மையின்றியே எளியாராய்த் தம்மைத் தேறியடைந்தாரைத் தீங்குசெய்யாத காதலினன்றாக இனியதில்லை; எ-று. (௩௩)

௩௪. ஊர்முனியா செய்தொழுகு மூக்க மிகவினிதே
தானே மடிந்திராத் தாளாண்மை முன்னினிதே
வாண்மயங்கு மண்டமருண் மாறாத மாமன்னர்
தானை தடுத்த லினிது.

எ-து—தானிருக்குமூர் வெறுக்கத்தகாத செயல்களைச் செய்யும் மடிந் திராதான் முயற்சி மிகவு மினிது; வாண்மிடைந்து மண்டியவமருள் மீளாத ஆக்கத்தினையுடைய மன்னரது தானையை ஒருவன் விலக்குதல் இனிது; எ-று (௩௪)

௩௫. எல்லிப் பொழுது வழங்காமை முன்னினிதே
சொல்லுங்காற் சோர்வின்றிச் சொல்லுதன் மாண்பினிதே
புல்லிக் கொளினும் பொருளல்லார் தங்கேண்மை
கொள்ளா விடுத லினிது.

எ-து—இரவின்கண் வழிபோகாமை மிகவினிது; ஒன்றைச்சொல்லும் பொழுது சோர்வுபடாமற் சொல்லுதன்மாண்பு இனிது; வலியத்தாங்கள் வந்து பொருந்தி நட்புக்கொளினும் ஒரு பொருளாக மதிக்கப்படாதார் கேண்மையைக் கொள்ளாதே நீக்குதல் இனிது; எ-று (௩௫)

௩௬. ஒற்றினா னொற்றிப் பொருடெரிதன் முன்னினிதே
முற்றான் றெரிந்து முறைசெய்தன் முன்னினிதே
பற்றிலனாய்ப் பல்லுயிர்க்கும் பாத்துற்றுப் பாங்கறிதல்
வெற்றல்வேல் வேந்தர்க் கினிது.

எ-து—ஒற்றராலே புறம்புள்ள செய்கைகளை ஒற்றுவித்தாராயுமாட்சி மன்னர்க்கினிது; செய்வதற்கு முன்னே ஆராய்ந்து முறைசெய்தன் மிக வு மினிது; ஒருவர்க்குப்பற்றிலனாய் எல்லாவுயிர்க்கும் பரிவுற்று நன்மையறி தல் வென்றியையுடைய வேந்தர்க்கு இனிது; எ-று. வெற்றல்—வென்றி.

௩௭. அவ்வித் தழுக்கா றுரையாமை முன்னினிதே
செவ்வியனாய்ச் செற்றுச் சினங்கடிந்து வாழ்வினிதே
கவ்வித்தாங் கொண்டுதாங் கண்டது காமுற்று
வவ்வார் விடுத லினிது.

எ-து—மன்னர் மனக்கோட்டஞ்செய்து அழுக்காறு சொல்லாமை மிகவினிது; தன் மனஞ் செவ்வியனாய்ச் சினத்தைவெகுண்டு நீக்கியொழு குதல் இனிது; யாப்புறக்கொண்டு தாங்கண்டபொருளைக் காதலித்து வௌவாதொழித னன்று; எ-று. (௩௭)

௩௮. இளமையை மூப்பென் றுணர்த லினிதே
கிளைஞர்மாட் டச்சின்மை கேட்ட லினிதே

தடமென் பணைத்தோட் டளிரிய லாரை
விடமென் றுணர்த லினிது.

எ-து—தமக்குள்ள இளமையை மூப்பாகக்கருதி மகிழாமை இனிது; நட்டார்மாட்டு அஞ்சத்தகும் துன்ப மில்லாமை கேட்டல் இனிது; மெல்லியதாய்ப் பெருத்த தோளையுடைய தளிரியலாரை நஞ்சென்று கருதல் இனிது; எ-று. கிளைஞர்மாட்டசசின்மை கேட்டல்—நட்டார்மாட்டு அஞ்சத்தகுந் துன்பமில்லாமை கேட்டல். (௩அ)

௩௯. சிற்றா ளுடையான் படைக்கல மாண்பினிதே
நட்டா ருடையான் பகையாண்மை முன்னினிதே
யெத்துணையு மாற்ற வினிதென்ப பால்படுங்
கற்றா வுடையான் விருந்து.

எ-து—சிற்றாளுடையான் படைக்கலமுடையனாதல் மாட்சிமைப்பட இனிது; சுற்றத்தாரை யுடையான் தன் பகைவரோடு பொருதல் இனிது; பாலையுடைய கற்றாவை யுடையான் விருந்து மிகவு மினிது; எ-று (௩௯)

௪0. பிச்சைபுக் குண்பான் பிளிற்றாமை முன்னினிதே
துச்சி லிருந்து துயர்கூரா மாண்பினிதே
யுற்றபே ராசை கருதி யறனொரூஉ
மொற்க மிலாமை யினிது.

எ-து—பிச்சைபுக் குண்பான் வெகுளாமை மிகவினிது; ஒதுக்கிருந்து துன்பமுறாத மாட்சிமை இனிது; மிக்கவூதியங்கருதி அறத்தை நீங்கு மனத்தின்கட்டளர்ச்சியில்லாமை இனிது; எ-று. (௪0)

௪க. பத்துக் கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே
வித்துக்குற் றுண்ணா விழுப்ப மிகவினிதே
பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றலிற் காழினிய தில்.

எ-து—தானிறுக்கும் இறையிற் பத்துமடங்கிறுத்தும் தம் பதியின் கணிருந்து வாழ்தல் இனிதே; நன்மையாய விளைவிற்குக் காரணங்களைச் சிதைத்துண்ணாத விழுப்பம் மிகவினிது; பலநாளும் நன்மையுடைய நூல்களைப் பழுதுபடாமே கற்றலிற் காழினியதில்லை; எ-று (௪க)

இனியது நாற்பது முற்றிற்று.

உ

இனியதுநாற்பது.

செய்யுண் முதற்குறிப்பு அகராதி.

கடவுள் துணை.

மாறன்பொறையனார்

அருளிச்செய்த

ஐந்திணையைம்பது

மூலமும் உரையும்.

பாயிரம்.

பண்புள்ளி நின்ற பெரியார் பயன்றெரிய
வண்புள்ளி மாறன் பொறையன் புணர்த்தியாத்த
வைந்திணை யைம்பது மார்வத்தி னோதாதார்
செந்தமிழ் சேரா தவர்.

க.—முல்லை.

க மல்லர்க் கடந்தா னிறம்போன் றிருண்டெழுந்து
செல்வக் கடம்பமர்ந்தான் வேன்மின்னி—நல்லா
யியங்கெயி லெய்தவன் றார்பூப்ப வீதோ
மயங்கி வலனேருங் கார்.

தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறுத்தியது.

இதன்பொருள். மல்லரைவென்றவ னிறம்போல இருளைச்செய்தெழுந்து செல்வக் கடப்பந்தாரினை விரும்பினான் வேல்போல மின்னி விசும்பின் இயங்குகின்ற முப்புரங்களை யெய்தவன் கொன்றைத்தார் பூப்ப மிடைந்து எழாநின்றது நல்லாய்! இக்கார் என்றவாறு. (க)

---

* இஃது சங்கத்தாரால் றொகுக்கப்பட்ட பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று

உ *அணிநிற மஞ்ஞை யகவ விரங்கி
மணிநிற மாமலைமேற் றாழ்ந்து—பணிமொழி
கார்நீர்மை கொண்ட கலிவானங் காண்டொறும்
பீர்நீர்மை கொண்டன தோள்.

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(இ-ள்) அழகிய நிறத்தையுடைய மயில்களழைக்க முழங்கி நீலமணி நிறத்தையுடைய மாமலைகளின்கட் படிந்து, மெல்லிய மொழியையுடையாய்! கார்காலத்துத் தன்மையைக் கொண்ட மிக்க முகில்களைக் காணுந்தோறும் என்றோள்கள் பீரின் தன்மையைக் கொண்டன எ-று. (உ)

ங மின்னு முழக்கு மிடியுமற் றின்ன
கொலைப்படை சாலப் பரப்பிய முல்லை
முகைவென்ற பல்லினா யில்லையோ மற்று
நமர்சென்ற நாட்டுளிக் கார்.

பருவங்கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது.

(இ-ள்) நமர்சென்ற நாட்டின்கண் மின்னும் முழக்கும் இடியும் என்றுசொல்லப்பட்ட இக்கொலைப் படைகளை நிரம்பப் பரப்புதற்கு இக்காரில்லையோ முல்லை முகை வென்ற பல்லினாய்! எ-று. (ங)

உள்ளார்கொல் காதல ரொண்டொடி நந்நிறம்
வள்வார் முரசின் குரல்போ லிடித்துராறி
நல்லார் மனங்கவரத் தோன்றிப் பணிமொழியைக்
கொல்வாங்குக் கூர்ந்ததிக் கார்.

இதுவுமது.

(இ-ள்) நந்நிறத்தைக் காதலர் உள்ளார் கொல்லோ ஒண்டொடி! தோலார்ந்த முரசின் குரலின்ஓசைபோல இடித்து முழங்கித் தங்கொழுநரைப்

* இச்செய்யுளைப் பருவங்கண்டு பெருமகள் புலம்பற்கு உதாரணங் காட்டுவர் அகப்பொருள்விளக்கவுரைகாரர். (களவியல், ருங.)

பிரிந்த காலத்து மனங்கவரும்படி தோன்றி நங்காதலர் சொன்ன நின்சொல்லை நினைப்பிப்பதுபோல மிக்கது முக்கார் எ-று. (௪)

௫ கோடியர் தோற்ற மலைமேல் விருந்தொண்டிறந்
கூடி நிரந்து கலைவிளைக்கி—யோடி
வளிகலந்து வந்துறைக்கும் வானங்காண் டோறுந்
துளிகலந்து வீழுங்கண்.

இதுவுமது.

(இ-ள்) குவடுகளையாக்கத் தோற்றத்தையுடைய மலைகண்மேற் பெருமுகில்கள் திரண்டு மிடைந்து ஒன்றோடொன்று பிணங்கி யோடிக் காற்றொடு கலந்து பெய்கின்ற விசும்பு காணுந்தோறும் துளிகலந்து பெய்யாநின்றன என்கண்கள் எ-று. (௫)

முல்லை நறுமலர் ஊதி யிருந்தும்பி
செல்சார் வுடையார்க் கினியவாய்—நல்லாய்மற்
றியாருமில் நெஞ்சினேம் யாமுறைவேமை
யீர்க திருண்மாலை வந்து.

இதுவுமது.

(இ-ள்) நல்லாய்! இருந்தும்பி முல்லைநறுமலரை ஊதுதலாற் றமக்குச் செல்சார்வாகிய கொழுநரையுடையார்க்கு இன்பத்தைச் செய்வனவாய் யாருந் துணையில்லாத நெஞ்சினேமாகி உறைவேமை இருண்மாலை வந்து ஈராநின்றது எ-று. (௬)

௭ தேரோன் மலைமறைந்த செக்கர்கொள் புன்மாலை
யாரான்பி னாயனுவந்தூதுஞ்—சீர்சால்
சிறுகுழ லோசை செறிதொடீ வேல்கொண்
டெறிவது போலு மெனக்கு.

இதுவுமது.

(இ-ள்) தேரினையுடைய பகலவன் மலையின்கண் மறைந்த செக்கர் கொண்ட புன்மாலையின்கண் அரிய ஆனிரையின் பின்னே ஆயன் விரும்பி ஊதுஞ் சீரமைந்த சிறுகுழல் இன்னோசை, வேல்கொண்டு எறிவது போலாநின்றது செறிதொடீ! எனக்கு எ-று. (௭)

அ பிரிந்தவர் மேனிபோற் புல்லென்ற வள்ளி
பொருந்தினர் மேனிபோற் பொற்ப—திருந்திழாய்
வானம் பொழியவும் வாரார்கொ லின்னாத
கானங் கடந்துசென் றார்.

இதுவுமது.

(இ - ள்) துணைவரைப் பிரிந்தார் மேனிபோலப் புற்கென்ற வள்ளிகள், துணைவரோடு பொருந்தியிருந்தார் மேனிபோலப் பொலிவு தோன்றும் வகை வானம் பொழியவும் வாரார்கொல்லோ, திருந்திழாய்! இன்னாத கானங்களைக் கடந்துசென்றார் எ-று. (அ)

கூ வருவர் வயங்கிழாய் வாளொண்க ணீர்கொண்
டுருகி யுடன்றழிய வேண்டா—தெரிதியேற்
பைங்கொடி முல்லை யவிழரும் பீன்றன
வம்ப மழையுறக் கேட்டு.

பருவமென்றழிந்த கிழத்தியைத்
தோழி பருவமன்றென்று வற்புறுத்தியது.

(இ - ள்) விளங்கிய இழைகளையுடையாய்! நங்காதலர் பருவம் வந்தால் வருவர்; வாளினை ஒக்கும் நின்கண்கள் நீர்கொள்ள நீயுருகி மாறுபட்டு அழியவேண்டா; ஆராய்வாயாயிற் றன்பருவமல்லாமையின் நிலையில்லாத முழக்கங் கேட்டுப் பைங்கொடி முல்லைகள் அவிழரும்பு ஈன்றனகாண் எ-று. (கூ)

கο நூனவின்ற பாகதேர் நொவ்விதாச் சென்றீக
தேனவின்ற கானத் தெழினோக்கித்—தானவின்ற
கற்புத்தாள் வீழ்த்துக் கவுண்மிசைக் கையூன்றி
நிற்பா ணிலையுணர்கம் யாம்.

வினைமுற்றிய தலைமகன்
தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

(இ - ள்) நூல்பயின்ற பாகனே! நின்றேர் கடிதாகச் செல்வதாக; தேன் பயின்ற காட்டினது அழகை நோக்கித் தான்பயின்ற கற்பென்னுகின்ற தாளினைச் செறித்து உயிர்காத்துக் கவுளின்மிசைக் கையூன்றி நிற்பாளது நிலைமையை நாம்சென்று அறிவாம் எ-று. (கο)

முல்லைமுடிந்தது.

உ.—குறிஞ்சி.

கக பொன்னிணர் வேங்கை கவினிய பூம்பொழிலு
ணன்மலை நாட னலம்புனைய—மென்முலையாய்
போயின சின்னாள் புனத்து மறையிரு
ளேயிடை யின்றி யினிது.

பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி
தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் செறிப்பறிவுறீஇயது.

(இ - ள்) பொன்போன்ற பூங்கொத்தையுடைய வேங்கைகள் அழகு பெற்ற பூம்பொழிலின்கண் வந்து நன்மலைநாடன் நினது நலத்தினைப் புனையக் கழிந்தன சிலநாள்; புனத்தின்கட் களவினுண் எதிர்ப்பட்டோ ரின்றி இடையூறின்றியே யினிதாக எ-று. (க)

கஉ மாலவரை வெற்ப வணங்கு குரலேனல்
காவ லியற்கை யொழிகநாம்—தூவருவி
பூக்கண் கழூஉம் புறவிற்றாய்ப் பொன்விளையும்
பாக்க மிதுவெம் மிடம்.

பகற்குறிவந்து பெயர்கின்ற தலைமகனைக்
கண்ணுற்றுத் தோழி செறிப்பறிவுறீஇயது.

(இ - ள்) பெரிய குவடுகளையுடைய வெற்பனே! வளைத்த கதிர்களையுடைய பசுந்தினையைக் காத்தல் யாமொழிந்தேம்; தூவருவிகள் பூவின் கண்களைக் கழுவுகின்ற காட்டினை யுடைத்தாய்ப் பொன்விளையும் இப்பாக்கம் எம்முடைய இடமாதலான், நீயிங்கே வரக்கூடின் வருவாயாக எ-று. (உ)

கங கானக நாடன் கலவானென் றோழியென்று
மானமர் கண்ணாய் மயங்கனீ—கானங்
கலந்திழியு நன்மலைமேல் வாலருவி யாடப்
புலம்பு மகன்றுநில் லா.

சிறைப்புறத்தானாகத் தலைமகனை யியற்பழித்த
தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

(இ - ள்) கானகநாடன் என்றோழியைப் புணரானென்று சொல்லி, மான் போன்ற மதர்த்த கண்ணினையுடையாய்! அறிவு கெடா தொழிவாயாக;

பலநறுவிரைகளையுங் கலந்து இழியாநின்ற நன்மலையின்கண் உள்ள வாலிய அருவியையாட என்றோள்களின்கட் புலம்பும் நீங்கி நில்லாது எ-று (௩)

கச புனைபூந் தழையல்குற் பொன்னன்னாய் சாரற்
றினைகாத் திருந்தேம்யா மாக—வினைவாய்த்து
மாவினவு வார்போல வந்தவர் நம்மாட்டுத்
தாம்வினவ லுற்றதொன் றுண்டு.

தோழி தலைமகட்கு மெலிதாகச்
சொல்லிக் குறைநயப்புக்கூறியது.

(இ - ள்) செய்யப்பட்ட பூந்தழைகளான் அணியப்பட்ட அல்குலினையுடைய பொன்னன்னாய்! மலைச்சாரலின்கட் டினையைக் காத்து நாம் இருந்தேமாக, வினையை வாய்க்கச்செய்து ஒருமாவினவுவார்போல வந்தாரொருவர் நம்மாட்டுத் தாம் வினவலுற்ற பிறிதொன்று உண்டு எ-று. (௪)

கரு * வேங்கை நறுமலர் வெற்பிடை யாங்கொய்து
மாந்தளிர் மேனி வியர்ப்பமற்—றியாங்கெனைத்தும்
பாய்ந்தருவி யாடினே மாகப் பணிமொழிக்குச்
சேந்தனவாஞ் சேயரிக்கண் டாம்.

பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகத்
தோழி தாய்கேட்டதற்கு மறுமாற்றஞ் சொல்லுவாள்
போலப் படைத்துமொழிகிளவியான் வரைவுகடாயது.

(இ- ள்) வெற்பின்கண் வேங்கைமலரையுங் கொய்து நின்மகள் மாந்தளிர்மேனி வியர்த்தலான் அவ்விடத்து எல்லாவருவியும் பாய்ந்தாடினேமாகப் பணிமொழியையுடையாட்குச் சேயரிக்கண்டாம் சிவந்தன காண் எ-று. (௫)

கசு கொடுவரி வேங்கை பிழைத்துக்கோட் பட்டு
மடிசெவி வேழ மிரீஇ—யடியோசை
யஞ்சி யொதுங்கு மதருள்ளி யாரிருட்
டுஞ்சா சுடர்த்தொடி கண்.

* இதனை "ஐயச் செய்கை தாய்க்கெதிர் மறுத்துப், பொய்யென மாற்றி மெய்வழி கொடுப்பினும்" என்பதற்கு உதாரணங்காட்டுவர் நச்சினார்க்கினியர். (தொல், பொரு, கள, உ௩.)

இரவுக்குறிவந்து பெயருந் தலைமகனைக் கண்ணுற்றுநின்ற தோழி வரைவுகடாயது.

(இ - ள்) கொடுவரிவேங்கையாற் கோட்பட்டுப் பிழைத்து மடிந்த செவியையுடைய வேழம் பிரிந்து தன்னடியோசையைப் புலி கேட்குமென்று அஞ்சி மெல்ல நடக்கும் வழியை நினைந்து, கங்குலின்கட் சுடர்த்தொடியையுடையாள் கண் துயிலா எ-று. (சு)

கஎ மஞ்சிவர் சோலை வளமலை நன்னாட
வெஞ்சாது நீவருதி யென்றெண்ணி—யஞ்சித்
திருவொடுங்கு மென்சாயற் றேங்கோதை மாத
ருருவொடுங்கு முள்ளுருகி நின்று.

இதுவுமது.

(இ - ள்) முகில் படாநின்ற சோலையையுடைய வளமலைநாடனே! ஒருநாள் ஒழியாது இரவின்கண் நீ வாராநின்றாய் என்று எண்ணித், திருவொடுங்கு மென்சாயற் றேங்கோதை மாதர் அஞ்சி யுள்ளுருகி நின்று தன்மேனி மெலியாநின்றாள் எ-று. (எ)

கஅ *எறிந்தெமர் தாமுழுத வீர்ங்குர லேனன்
மறந்துங் கிளியினமும் வாரா—கறங்கருவி
மாமலை நாட மடமொழி தன்கேண்மை
நீமறவ னெஞ்சத்துக் கொண்டு.

தோழி செறிப்பறிவுறீஇத் தலைமகனை வரைவுகடாயது.

(இ - ள்) காடெறிந்து எமர்தாமுழுத ஈர்ங்குரல் ஏனலின்கண் மறந்தாயினுங் கிளியினமும் நாங்களும் வாரோம்; கறங்கருவியினையுடைய மாமலைநாடனே! மடமொழியோடு நீ கொண்ட கேண்மையை நின்னெஞ்சத்துக் கொண்டு மறவாயாக எ-று. (அ)

கக † நெடுமலை நன்னாட நீள்வே றுணையாக்
கடுவிசை வாலருவி நீந்தி—நடுவிரு

---

* இதனை "ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்" என்புழி எடுத்தோதினார் நச்சினார்க்கினியர். (தொல், பொரு, களவு, உங.) அகப்பொருள் விளக்கவுரைகாரரும் பாங்கி தலைமகனை முன்னின்று செறிப்புணர்த்தி ஓம்படைசாற்றற்கு உதாரணங்காட்டுவர். (களவியல், நுயஅ.)

† இது இரவுக்குறி விலக்கியது என்றார் நச்சினார்க்கினியரும். (தொல், பொரு, களவு, உங.)

வின்று வதர்வர வீர்ங்கோதை மாதரா
ளென்னுவா ளென்னுமென் னெஞ்சு.

தோழி இரவுக்குறியின்கண்
நெறிவிலக்கி வரைவுகடாயது.

(இ - ள்) நெடுமலை நன்னுடனே! நீள்வேலே துணையாகக் கடிய விசையையுடைய வாலருவியை நீந்தி, நடுவிருளின்கண் இன்னாத வழியின்கண் நீவர, ஈர்ங்கோதை மாதராள் எப்பெற்றியாவாளோ என்று தடுமாறுநிற்கும் என்னெஞ்சு எ-று. (௯)

௨௦ * வெறிகமழ் வெற்பனென் மெய்ந்நீர்மை கொண்ட
தறியாண்மற் றன்னோ வணங்கணங்கிற் றென்று
மறியீர்த் துதிரந்தூய் வேலற் றரீஇ
வெறியோ டலம்வரும் யாய்.

தலைமகள் தோழிக்கு அறத்தொடுநின்று
வெறிவிலக்கவேண்டும் உள்ளத்தாளாய்ச் சொல்லியது.

(இ - ள்) விரைகமழாநின்ற வெற்பன் எனதுமெய்யின்கண் உள்ள நீர்மையைக் கொண்டது அறியாளாய், ஆங்தோ தெய்வம் என்னை வருத்திற்று என்று வேலனைத் தந்து மறியை யறுத்து உதிரத்தைத் தூவி வெறியோடே வருந்தாநின்றாள் அன்னை எ-று. (௧௦)

குறிஞ்சி முடிந்தது.

௩.—மருதம்.

௨௧ கொண்டுழிப் பண்டம் விலையொரீஇக் ‡ கொற்சேரி
நுண்டுளைத் துன்னூசி விற்பாரி—ன்றொன்றுனும்
வேறல்லை பாண வியலூரன் வாய்மொழியைத்
தேற வெமக்குரைப்பாய் நீ.

பாணற்குத் தலைமகள் வாயின்மறுத்தது.

---

* இது வெறியச்சுறுத்தியது என்பர் நச்சினார்க்கினியர். (தொல், பொரு, கள, ௨௩.) அகப்பொருள்விளக்கவுரைகாரரும் வெறிவிலக்கிற்கு உதாரணம் காட்டுவர். (களவியல், ௬அ.)

‡ "வைகொண்ட வூசிகொற் சேரியின் விற்றெம்மில் வண்ணவண்ணப், பொய்கொண்டு நிற்கலுற் றோபுலை யாத்தின்னி போந்ததுவே" என்றார் திருச்சிற்றம்பலக்கோவையினும். (௩அ௬)

(இ - ள்) பண்டங் கொண்ட விலையை வேறுபடுத்துக் கொற்சேரியின் கண் நுண்ணிய துளையையுடைய ஊசியை விற்றுத்திரிவாரின் யாதானும் வேறல்லை; பாண! வியலூரான் வாய்மொழியைத் தெளிய எமக்கு உரைக்கின்ற நீ எ-று. (க)

௨௨ போதார்வண் டூதும் புனல்வய லூரற்குத்
தூதாய்த் திரிதரும் பாண்மகனே—நீதா
னறிவயர்ந் தெம்மில்லு ளென்செய்ய வந்தாய்
நெறியது காணெங்கையர் இற்கு.

இதுவுமது.

(இ - ள்) மலர்களை நுகராநின்ற வண்டுகள் ஊதும் புனல்வயலூரற்குத் தூதாய் உழல்கின்ற பாண்மகனே! நீதான் அறிவு கலங்கி எங்கள் மனையுள் என்செய்யவந்தாய்? எங்கையர் மனைக்கு வழி அதுகாண் எ-று. (௨)

௨௩ யாணர கல்வய லூரன் அருளுதல்
பாண பரிந்துரைக்க வேண்டுமோ—மாண
வறிவ தறியு மறிவினார் கேண்மை
நெறியே யுரையாதோ மற்று.

இதுவுமது.

(இ - ள்) வளமையுடைய அகல்வயலூரான் எமக்கு அருளுடையன் என்பதனைப், பாணனே! நீ காதலித்து உரைக்க வேண்டுமோ? மாட்சிப்பட அறியக்கடவதனையறியும் அறிவினையுடையார் செய்யும் நட்புநெறியை அவர் அருளுடைமையே உரையாதோ? எ-று. (௩)

௨௪ கோலச் சிறுகுருகின் குத்தஞ்சி யீர்வாளை
நீலத்துப் புக்கொளிக்கு மூரற்கு—மேலெலாஞ்
சார்தற்குச் சந்தனச்சாந் தாயினே மிப்பருவங்
காரத்தின் வெய்யமென் றோள்.

இதுவுமது.

(இ - ள்) அழகிய சிறுகுருகின் குத்தினையஞ்சிக் குளிர்ந்தவாளை நீலமலரின்கட் புக்கு ஒளிக்கும் ஊரினையுடையாற்குப், பண்டெல்லாம் புணர்தற்

குச் சந்தனக்குழம்பாயினேம்; இக்காலம் புண்ணிற்கு இடும் காரம் போல வெய்யவாம் எம்முடைய தோள் எ-று. (௪)

௨௫ அழலவிழ் தாமரை யாய்வய லூரன்
விழைதகு மார்ப முறுநோய்—விழையிற்
குழலுங் குடுமியென் பாலகன் கூறு
மழலைவாய்க் கட்டுரை யால்.

வாயில்வேண்டிச் சென்றார்க்குத்
தலைமகள் வாயின்மறுத்தது.

(இ-ள்) அழல்போல அவிழுந் தாமரைகளையுடைய ஆய்வயலூரனுடைய கண்டார் விழையப்பட்ட மார்பம் துன்புறுகிற்கும்; குழலுங குடுமியென் பாலகன் கூறும் மழலைவாய்க் கட்டுரையான் எம்மை விரும்பிப் புணருமாயின் எ-று. (௫)

௨௬ பெய்வளைக் கையாய் பெருநகை யாகின்றே
செய்வய லூரன் வதுவை விழவியம்பக்
கைபுனை தேரேறிச் செல்வானைச் சென்றிவ
னெய்தி யிடருற்ற வாறு.

புதல்வனை முனிந்து தலைமகன் மறுத்தாளைப் போலத்
தோழிக்கு வாயினேர்ந்தது.

(இ-ள்) பெய்வளையினையுடைய கையாய்! எனக்குப் பெரியநகையாகாநின்றது; செய்த வயல்களையுடைய ஊரன், பரத்தையர் புதுமணங்களின் உள்ள முழவு ஒலித்தலாற் கைபுனை தேரேறிச் செல்வானை இப்புதல்வன் கண்டு சென்று எய்த, அவ்வூரன் புதுமணம் புணரப் பெறாது இடருற்றவாறு எ-று (௬)

௨௭ தண்வய லூரற் புலக்குந் தகையமோ
நுண்ணறல் போல நுணங்கிய வைங்கூந்தல்
வெண்மரற் போல நிறந்திரிந்து வேறாய
வண்ண முடையேமற் றியாம்.

வாயில் வேண்டிச் சென்றார்க்குத்
தலைமகள் வாயின்மறுத்தது.

(இ-ள்) தண்வயல் ஊரனை ஊடுந் தகையமோ? நுண்ணிய அறல் மணற்

போலும் நுணுகிய ஐவகைப்பட்ட கூந்தல் வெள்ளை மாற்போலத் தன்னிறந் திரிந்து வேறுபட்ட நிறத்தையுடையேம் ஆதலான் எ-று (எ)

உஅ ஒல்லென் றொலிக்கு மொலிபுன லூரற்கு
வல்லென்ற தென்னெஞ்சம் வாட்கண்ணாய்—நில்லென்னா
தேக்கற்றாங் கென்மகன் றாணிற்ப வென்னானு
னோக்கான்றே ரூர்ந்தது கண்டு.

தலைமகள் தோழிக்கு வாயின்மறுத்தது.

(இ-ள்) ஒலிபுனலையுடைத்தாய்ப் பிறவோசையானும் ஒல்லென்றொலிக்கும் ஊரற்கு என்னெஞ்சம் நெகிழாது வலிதாயிற்று; வாட்கண்ணாய்! புதல்வன் தன்னை விரும்பிநிற்பக் கண்டுவைத்துப் பாகனை நில்லென்று சொல்லாதே என் புதல்வனையும் பின்பாராதே தேரூர்ந்து பரத்தையர் மனைக்குச் சென்றது கண்டு எ-று. (அ)

உக ஒல்லென் றொலிபுன லூரன் வியன்மார்பம்
புல்லேன்யா னென்பேன் புனையிழையாய்—புல்லே
னெனக்கோர் குறிப்பு முடையெனோ வூரன்
றனக்கேவல் செய்தொழுகு வேன்.

ஆற்றாமையே வாயிலாகப்புக்க தலைமகன் புணர்ந்து நீங்கியபின்பு சென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

(இ-ள்) ஒலிபுனலையுடைத்தாய்ப் பிறவோசையான் ஒல்லென்னும் ஊரனுடைய அகன்ற மார்பத்தினை யான் முயங்கேன் என்றுசொல்லி அவனைக் காணாதமுன் நினைத்திருப்பேன்; புனையிழையாய்! அவனைக்கண்டபின் முயங்கேனாதற்கு எனக்கெனப் பெற்ற கருமம் உடையேனோ? ஊரன்றனக்கு ஏவல் செய்து ஒழுகுவேன் ஆதலான் எ-று. (க)

௩௦ குளிரும் பருவத்தே யாயினுந் தென்றல்
வளியெறியின் மெய்யிற் கினிதா—மொளியிழா
யூடி யிருப்பினு மூரன் நறுமேனி
கூட லினிதா மெனக்கு.

(இ-ள்) குளிருங் காலத்தேயாயினும் தென்றற்காற்று எறியின் உடம்பிற்கு இனிதாம்; அதுபோல, ஒளியிழாய்! யான் அவனைப் புலந்திருந்தேன் ஆயினும், அவ்வூரன் அழகிய நாற்றத்தினையுடைய மேனியைக்கூடுதல் இனிதாம் எனக்கு எ-று (௩0)

மருதம் முடிந்தது.

௪.—பாலை.

௩௧ * உதிரந் துவறிய வேங்கை யுகிர்போ
லெதிரி முருக்கரும்ப வீர்ந்தண்கார் நீங்க—வெதிருநர்க்
கின்பம் பயந்த விளவேனில் காண்டொறுந்
துன்பங் கலந்தழியு நெஞ்சு.

பருவங்கண்டழிந்த தலைமகள்
தோழிக்குச் சொல்லியது.

(இ-ள்) உதிரத்தையளைந்து துவறிய புலியினது உகிர்போலப் பருவத்தையெதிர்ந்து முருக்குக்கள் அரும்ப, ஈர்ந்தண் முகில் நீங்கக், காதலர்

---

* இவ்வெண்பாவினுள் இரண்டாமடி ஐஞ்சீரான் வந்தமைக்கிலக்கணம், "வெண்டளை விரவியு மாசிரியம் விரவியும், ஐஞ்சி ரடியு முளவென மொழிப" என்னுந் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்துப் பேராசிரியர், "வெண்டளை விரவியும், ஆசிரியம் விரவியும் என்றது என்னையெனின்— அவ்வைஞ்சீரடி வெண்பாவோடு விராயும், ஆசிரியப்பாவோடு விராயும் வரும் என்றவாறு" எனவும், "கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க, வொண்செங் குருதியி னோடு கிடப்பதே—கெண்டிக், கெழுதகை யில்லேன் கிடந்தூடப் பன்று, ளழுதகண் ணீர்துடைத்த கை" என்னும் வெண்பாவினுள் இரண்டாமடி ஐஞ்சீரான் வந்தது" எனவும் கூறியவாற்றானும், நச்சினார்க்கினியர், "வெண்பாவோடுங் கலிப்பாவோடும் விராயும், ஆசிரியப்பாவோடு விராயும் வரும் ஐஞ்சீரடிகளுமுள என்று கூறுவர் புலவர் எ-று." எனவும், "கண்டகம் பற்றி..........கை" "கிடங்கிற் கிடங்கிற் கிடந்த கயலைத், தடங்கட் டடங்கட் டளிரியல்கொள்ளாள்—கிடங்கில், வளையாற் பொலிந்தகை வையெயிற்றுச் செவ்வா, யிளையாடன் கண்ணொக்கு மென்று" இவற்றுள் இரண்டாமடி ஐஞ்சீரடி வந்த வாறுகாண்க" எனவும் கூறியவாற்றானும் உணர்க.

தம்முட்டலைப்பட்டார்க்கு இன்பத்தைக் கொடுத்த இளவேனிலைக் காணுந் தோறுந் துன்பத்தோடு புணர்ந்து அழியாநின்றது என்னெஞ்சு. எ-று. (க)

கஉ விலங்கல் விளங்கிழாய் செல்வாரோ வல்ல
ரழற்பட் டசைந்த பிடியை—யெழிற்களிறு
கற்சுனைச் சேற்றிடைச் சின்னீரைக் கையாற்கொண்
டுச்சி யொழுக்குஞ் சுரம்.

தலைமகனது பிரிவுக்குறிப்பறிந்தாற்றுளாய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது.

(இ - ள்) அவர் செலவினை விலங்காதொழிக; விளங்கிய இழையினையுடையாய்! செல்லமாட்டார்; காட்டழற்பட்டு வருந்திய பிடியினை அதனது எழிற் களிறு கற்சுனைச் சேற்றிடையுள்ள சின்னீரைத் தன் கையாலே கொண்டு அப்பிடியின் உச்சியின்கண் ஒழுக்குஞ் சுரத்தை எ-று. (உ)

கங பாவையும் பந்தும் பவளவாய்ப் பைங்கிளியு
மாயமு மொன்று நினைந்திலாள்—பால்போலு
மாய்ந்த மொழியினாள் செல்லுங்கொல் காதலன்பின்
காய்ந்து கதிர்தெறூஉங் காடு

மகட்போக்கியநற்றாய் கவன்று சொல்லியது.

(இ - ள்) பாவையையும், பந்தையும், பவளம்போன்ற வாயையுடைய பசுங்கிளியையும், ஆயத்தையும் இவற்றை ஒன்றும் நினையாளாய்ப், பால் போலும் சின்மொழியையுடையாள், தன் காதலன்பின் செல்லுங்கொல் லோ! கனன்று பகலோன் சுடுகின்ற காட்டினை எ-று. (ங)

கச கோட்டமை வல்விற் கொலைபிரியா வன்கண்ண
ராட்டிவிட் டாறலைக்கு மத்தம் பலநீந்தி
வேட்ட முனைவயிற் சேறிரோ வையநீர்
வாட்டடங்கண் மாதரை நீத்து.

தோழி தலைமகனைச் செலவழுங்கியது.

(இ - ள்) கோட்டுகின்ற மூங்கில்விற்கொலையை இடையறாத வன்கண் மையையுடையார் ஆறலைத்து ஓட்டி வழியின்கண் நின்று அலைக்குங் கடறு கள் பலவற்றையு நீந்தி, வேட்டினையுடைய வெம்முனையின்கட் செல்வீரோ? ஐய! நீர் வாட்டடங்கண் மாதரைத் துறந்து எ-று. (ச)

௩௫ கொடுவி லெயினர்தங் கொல்படையால் வீழ்ந்த
தடிநிண மாந்திய பேஎய்—நடுகல்
விரிநிழற் கண்படுக்கும் வெங்கான மென்பர்
பொருள்புரிந்தார் போய சுரம்.

தலைமகன் பொருள்வயிற் பிரிந்த காலத்து ஆற்றளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றுவலென்பதுபட மொழிந்தது.

(இ - ள்) கோட்டிய வில்லினையுடைய வேட்டுவர் தங்கொல்படையானே வீழ்ந்த தசையையும் நிணத்தையுந் தின்ற பேய்கள், போரின்கட்பட்டார் பெயர்பொறித்து நட்ட கல்லின் விரிநிழற்றுயிலும் வெய்ய காடென்று சொல்லுவர்; தோழி ! பொருள் விரும்பினர் போகிய கடறு எ-று. (ரு)

௩௬ கடிதோடும் வெண்டேரை நீராமென் றெண்ணிப்
பிடியோ டொருங்கோடித் தாள்பிணங்கி வீழும்
வெடியோடும் வெங்கானஞ் சேர்வார்கொ னல்லாய்
தொடியோடி வீழத் துறந்து.

பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது.

(இ - ள்) விரைந்தோடும் பேய்த்தேரை நீராமென்று கருதிக் களிறுகள் பிடியோடே கூட ஓடித் தாள்ஓய்ந்து பிணங்கிவீழும் பிளவோடிய வெங்கானத்தைச் சென்று நங்காதலர் சேர்வார்கொல்லோ ? நல்லாய் ! நங்கையிற் றொடி யோடிவீழத் துறந்து ; எ-று (சு)

௩௭ தோழியர் சூழத் துறைமுன்றி லாடுங்கால்
வீழ்பவள் போலத் தளருங்கா—றாழாது
கல்லத ரத்தத்தைக் காதலன் பின்போதல்
வல்லளோ மாதர் நடை.

உடன்போய தலைமகட்கு நற்றாய் கவன்றுரைத்தது.

(இ-ள்) தோழியர் சுற்றம் முற்றத்திற்றுறையின் விளையாடும்பொழுதும் வீழ்பவளேபோலத் தளருங் கால்கள் ஓய்ந்து தாழாதே கல்வழியையுடைய அத்தத்துத் தன்கொழுநன்பின் போதலைவல்லளோ ? காதலையுடையாள் நடை எ-று. (எ)

௮ சுனைவாய்ச் சிறுநீரை யெய்தாதென் றெண்ணிப்
பிணைமா னினிதுண்ண வேண்டிக்—கலைமாத்தன்
கள்ளத்தி னூச்சுஞ் சுரமென்பர் காதல
ருள்ளம் படர்ந்த நெறி.

பிரிவின்கண் ஆற்ருளாயின தலைமகளைத் தோழியாற்றுவித்தது.

(இ-ள்) சுனையின்கண் உள்ள சிறியநீரைப் பிணைக்கு உண்ண நிரம்பாது என்று எண்ணிப் பிணைமான் இனிதாக உண்ணவேண்டிக், கலையாகியமாத் தனது கள்ளத்தினுனே பொய்யே உறுஞ்சும் சுரமென்று சொல்லுவர்; நங்காதலர் தம் அகத்திலுற் போயினநெறி என்று (அ)

௯ மடவைகா ணன்னெஞ்சே மாண்பொருண்மாட் டோடப்
புடைபெயர் போழ்தத்து மாற்ருள்—படர்கூர்ந்து
விம்மி யுயிர்க்கும் விளங்கிழையா ளாற்றுமோ
நம்மிற் பிரிந்த விடத்து.

தலைமகன் பொருள்வலித்த நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.

(இ-ள்) அறியாய்காண், மிக்கநெஞ்சே! மாட்சிமைப்பட்ட பொருளின் மாட்டுச் சேறலான், முயங்கி நாம் புடைபெயருங்காலத்தும் ஆற்றமாட்டாளாய்த் துன்பமிக்கு விம்மி உயிராநின்ற விளங்கிழையாள் ஆற்றவல்லளோ? நம்மை நீங்கியவிடத்து என்று (௯)

௰ இன்றல்க லீர்ம்படையு ளீர்ங்கோதை தோடுணையா
நன்கு வதிந்தனை நன்னெஞ்சே நாளைநாங்
குன்றத ரத்த மிறந்து தமியமா
யென்கொலோ சேக்கு மிடம்.

இதுவுமது.

(இ-ள்) இன்று இரவின்கட் குளிர்ந்த சேக்கையுள் ஈர்ங்கோதையையுடையாள் தோள் நமக்குத் துணையாக மிகவுந்தங்கினை; நன்னெஞ்சே! இவ்வின்பத்தைவிட்டு நாளையிரவின்கண் யாம் மலைவழியேயிறந்து தமியேமாய் எவ்விடந் தங்குமிடம்? என்று (௰)

ரு.—நெய்தல்.

௪௧ தெண்கடற் சேர்ப்பன் பிரியப் புலம்படைந்
தொண்டடங்கண் டுஞ்சற்க வொள்ளிழாய்—நண்படைந்த
சேவலுந் தன்னருகிற் சேக்குமா லென்கொலோ
பூந்தலை யன்றில் புலம்பு.

அல்ல குறிப்பட்ட தலைமகற்குச் சொல்லுவாளாய்த்
தோழி தலைமகட்குச் சொல்லியது.

(இ-ள்) தெண்கடற் சேர்ப்பன் பிரிதலாற் றனிமையையடைந்து நின்னுடைய ஒள்ளியகண் துயிலாதொழிக; ஒள்ளிய இழைகளையுடையாய்! நண்பினையடைந்த சேவலும் தன்னருகே உறையாநின்றதாதலான், என்னைகொல்லோ? செம்பூப்போலுஞ் சூட்டினையுடைய பெடையன்றில் புலம்புதல் எ-று. (௧)

௪௨ கொடுந்தா ளலவ குறையா மிரப்பே
மொடுங்கா வொலிகடற் சேர்ப்ப—னெடுந்தேர்
கடந்த வழியையெங் கண்ணாரக் காண
நடந்து சிதையாதி நீ.

காமமிக்க கழிபடர்கிளவி.

(இ-ள்) கோடியிருந்த தாளினையுடைய அலவனே! ஒரு காரியம் நின்னையிரப்பேம்; ஒலியாநின்ற அடங்காத கடற்சேர்ப்பன் நெடுந்தேர் போயினவழியை எம்முடைய கண் நிரம்பக்காணும்வகை அதன்மேல் நடந்து அழியாதொழிவாயாக எ-று. (௨)

௪௩ * பொரிப்புறப் பல்லிச் சினையீன்ற புன்னை
வரிப்புற வார்மணன்மே லேறித்—தெரிப்புறத்
தாழ்கடற் றண்சேர்ப்பன் றூரகல நல்குமே
லாழியாற் காணுமோ யாம்.

இதுவுமது.

---

* இதனைப், "பிரிந்த வழிக்கலங்கினும்" என்பதற்குதாரணங்காட்டுவர் **நச்சினார்க்கினியர்** (தொல், பொரு, கள, ௩௦.)

(இ-ள்) பொரிந்த புறத்தையுடைய பல்லிமுட்டைபோல அரும்பினை யீன்ற புன்னைப்பூக்களையுடைய வரிப்பட்ட புறத்தினையுடைய உயர்ந்த மணற்குன்றின்மேல் ஏறியிருந்து, தெளிவுறத் தாழ்கடற் றண்சேர்ப்பனு டைய தார்அகலத்தை நமக்கு நல்குமாயிற், * கூடல் இழைப்பாற் காண் பேம் யாம் எ-று. (௩)

சச கொண்கன் பிரிந்த குளிர்பூம் பொழினோக்கி
யுண்கண் சிவப்ப வழுதே னொளிமுகங்
கண்டன்னை யெவ்வம்யா தென்னக் கடல்வந்தென்
வண்டல் சிதைத்ததென் றேன்.

பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகப் படைத்து
மொழிகிளவியாற் றோழி தலைமகட்குச் சொல்லுவா
ளாய்ச் செறிப்பறிவுறீஇ வரைவுகடாயது.

(இ-ள்) நம்மைஇற்செறிக்கையாற் கொண்கன் பிரிந்த குளிர்பூம்பொ ழிலை நோக்கி உண்கண்சிவப்ப அழுத என்னுடைய ஒளிமுகத்தைக்கண்டு, அன்னை நினக்கு வந்த இடும்பை யாது என்னைக் கடல்வந்து என்னுடைய விளையாட்டுச சிற்றிலைச் சிதைத்தது என்று சொன்னேன்; எம்பெருமாட்டி! எ-று. (ச)

சரு ஈர்ந்தண் பொழிலு ளிருங்கழித் தண்சேர்ப்பன்
சேர்ந்தென் செறிவளைத்தோள் பற்றித் தெளித்தமை
மாந்தளிர் மேனியாய் மன்ற விடுவனவோ
பூந்தண் பொழிலுட் குருகு.

தலைமகனைத் தோழி வரைவுகடாதற்பொருட்டுத்
தலைமகள் வரைவுவேட்டுச் சொல்லியது.

---

* இதனைக், "கூடலாவது வட்டமாகக் கோட்டைக்கீறி அதுக்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ்சுழித்து இவ்விரண்டு சுழியாகக் கூட்டினால், இரட் டைப்பட்டாற் கூடுகை; ஒற்றைப்பட்டாற் கூடாமையென்று ஸங்கேதம்" என நாச்சியார்திருமொழி உரையினும், (கூடற்றிருப்பதிகம்) "மணற்குன் றினீத்தகன்றூர் வருகென், றூழிதிருத்திச் சுழிக்கணக்கோதி" எனத் திருச் சிற்றம்பலக்கோவையினும் (கஅ௬) "வளைத்துக்கிடந்த வரிமணற்கூட லும்" என அம்பிகாபதிகோவையினும் (௩உஉ) வருவனவற்றான் உணர்க.

(இ - ள்) குளிர்ந்த தண்பொழிலின்கண் இருந்து பெரிய கழியையுடைய தண்சேர்ப்பன் புணர்ந்து என் செறிவளைத்தோள்பற்றி என்னைத் தெளிவித்த வஞ்சினத்தை, மாந்தளிர்மேனியாய்! மெய்யாக மறந்துவிட வல்லவோ? அப்பூந்தண்பொழிலுள் வாழுங் குருகுகள் எ-று. (ரு)

சசு ஓதந் தொகுத்த வொலிகடற் றண்முத்தம்
பேதை மடவார்தம் வண்டல் விளக்கயருங்
கானலஞ் சேர்ப்ப தகுவதோ வென்றோழி
தோணலந் தோற்பித்த னீ.

பகற்குறிவந்து புணர்ந்து நீங்குந் தலைமகனைக்
கண்ணுற்றுநின்று தோழி வரைவுகடாயது.

(இ-ள்) ஓதம் எறித்திரட்டிய ஒலிகடற் றண்முத்தங்களைப் பேதைமையுடைய மடவார் தம்வண்டற்சிறுமனைக்கு விளக்காக விருப்புச்செய்யும் கானலஞ் சேர்ப்பனே! நினக்குத் தகுவதொன்றோ? என்னுடைய தோழியுடைய தோள்களின் நலத்தை நீ தொலைவித்தல் எ-று. (சு)

சஎ பெருங்கட லுள்கலங்க நுண்வலை வீசி
யொருங்குடன் றன்னைமார் தந்த கொழுமீ
னுணங்கல்புள் ளோப்பு மொளியிழை மாத
ரணங்காகு மாற்ற வெமக்கு.

தோழிக்குத் தலைமகன் சொல்லியது.
தோழற்குச் சொல்லியதூஉமாம்.

(இ - ள்) பெரிய கடல் உள்ளெல்லாங் கலங்க நுண்ணிய வலைகளாலே வீசி ஒருங்குடனே தமையன்மார் கொண்டுவந்த கொழுத்த மீன் உணங்கல்களைக் கவரும் புட்களை ஓப்புகின்ற ஒளியிழைமாதர் மிகவும் எமக்கு வருத்துந் தெய்வமாம் எ-று. (எ)

சஅ எக்க ரிடுமணன்மே லோதந் தரவந்த
நித்தில நின்றிமைக்கு நீள்கழித் தண்சேர்ப்ப
மிக்க மிகுபுகழ் தாங்குபவோ தற்சேர்ந்தா
ரொற்கங் கடைப்பிடியா தார்.

தலைமகனைத் தோழி வரைவுகடாயது.

(இ - ள்) திரைவந்து இட்ட இளமணன்மேல் ஓதம் தரவந்த முத்தங்கள் நின்று விளங்காநின்ற நீண்ட கழியினையுடைய தண்சேர்ப்பனே! உலகத்தின்கண் விளங்கிய மிகுபுகழைத் தாங்கவல்லரோ? தம்மைச் சேர்ந்தாருடைய தளர்ச்சியைக் கடைப்பிடித்துத் தீராதார் எ-று. (அ)

சக * கொடுமுண் மடற்றாழைக் கூம்பவிழ்ந்த வொண்பூ
விடையுளி ழுதொப்பத் தோன்றிப்—புடையெலாந்
தெய்வங் கமழுந் தெளிகடற் றண்சேர்ப்பன்
செய்தான் றெளியாக் குறி.

அல்லகுறிப்பட்டுப் பெயர்ந்தமை அறியத் தலைமகன்
சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது.

(இ - ள்) கொடிய முள்ளையுடைய மடற்றாழையினது மொட்டவிழ்ந்த ஒள்ளிய பூக்கள் நடுவுள்ள சோற்றுள் வெண்ணெய்போலத் தோன்றி மருங்கெல்லாம் தெய்வமணம்போலக் கமழாநின்ற தெளிந்த கடற்றண்சேர்ப்பன் நம்மாற் றெளிக்கப்படாத குறியைச் செய்தான்; ஆதலால் அல்ல குறிப்பட்டேம் எ-று. (க)

ருo ‡ அணிகடற் றண்சேர்ப்பன் றேர்ப்பரிமாப் பூண்ட
மணியரவ மென்றெழுந்து போந்தேன்—கனிவிரும்பும்
புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தே னொளியிழா
யுள்ளுருகு நெஞ்சினே னாய்.

இதுவுமது.

(இ-ள்) நிலத்தைச் சூழ்ந்த கடற்றண்சேர்ப்பன் தேர்பூண்ட பரிமா அணிந்த மணியரவம் என்று கருதிச் சென்றேன்; கனிகளை விரும்புகின்ற புள்ளரவங்களைக் கேட்டு மணியரவம் அன்று என்று போந்தேன்; ஒளியிழாய்! உள்ளுருகும் நெஞ்சினேனாகி எ-று. (கo)

நெய்தல் முடிந்தது.

ஐந்திணையைம்பது முற்றிற்று.

---

* இது "பாங்கி தலைமகன் தீங்கெடுத்தியம்பியது" எனக் கொள்வர் அகப்பொருள் விளக்க உரைகாரர். (களவியல், சச.)

‡ இஃது "தான் குறிமருண்டமை தலைவி பாங்கிக்கு உணர்த்தியது" எனக்கொள்வர் அகப்பொருள் விளக்க உரைகாரர் (ஷை ஷை.)

ஐந்திணையைம்பது.

செய்யுண் முதற்குறிப்பு அகராதி.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
௩	௧௫	மாயு றைவேமை	மாகி யுறைவேமை
௮	௧	மருதம்	ஐந்திணையைம்பது

திருச்சிற்றம்பலம்.

அட்டாங்க யோகக்குறள்.

பாயிரம்.

வெண்கோட்டன் செய்யன் கரிமுகனுள் வீற்றிருந்தென்
*னெண்கோட்டந் தீர்த்தளிப்பா னின்பு. (௧)

உலகம் படைப்பித் தளிப்பித் தொழிப்பித்
திலகுமுயி ருள்ளெம் மிறை. (௨)

†ஐந்தொழிற்கு ‡மைந்துவித முற்றமல னோடமரும்
மைந்தொடிபொற் பாதநினைப் பாம். (௩)

இவர்புதல்வர் தாள்கணத்துக் கீசர் முனிவ
ரவர்பதமுஞ் சென்னியில்வைப் பாம். (௪)

செந்தமிழ்வே தாகம மாதி தெருட்டினர்தாள்
வந்தனை செய்வா மகிழ்ந்து. (௫)

ஆய்ந்தா கமத்தறைவா மட்டாங்க யோகமதை
யாய்ந்தார்தீர்ப் பாரிந்நூற் காசு. (௬)

நூல்.

இமய நியமமிணங் காதனமா $யாம
மயர்வில் பிரத்தியாகா ரம். (௧)

தாரணை யோடு தியானஞ் சமாதியுமென்
றோரிருநான் கங்கமும்யோ குள். (௨)

---

*எண் கோட்டம்—மனக்கோட்டம்.

†ஐந்தொழில்—பஞ்சகிருத்தியம்.

‡ஐந்துவிதம்—ஐந்துவித சத்தி.

$ஆயாமம்—பிராணயாமம்.

அட்டாங்க யோகக்குறள்.

க. இயமம்.

*அயிங்கிதைமெய் யாதி யியம மவற்றை
யியம்புவங் கேளா யினி. (ந)

பிழைநூறு செய்தார்க்கும் †பீழையினைச் செய்யா
வழகே யயிங்கிதை யாம். (ச)

பொருளறச் ‡சொல்லுஞ்சொற் பொய்யாச்சொல் லாதே
பொருளுறச் சொல்க $புரிந்து. (ரு)

தேசிகர்க்குந் தேவர்க்கு மாக்கமுறச் செப்பும்பொய்
வாசகமு மெய்யெனுமெய் வாக்கு. (சு)

தனக்கு மிடியுறினுந் தக்காரல் லார்கைத்
தனத்தினைத் தாங்காமை சால்பு. (எ)

உண்பானு முண்ணு துடல்வெறுப்பா னுமிகழ்சோ
றுண்பா னலனே லுவந்து. (அ)

பெண்ணுசை மண்ணுசை யற்றும் பெரியனல
னெண்ணுதுண் பானிழிந்தா ரில். (கூ)

தனக்கருக மில்லா வினைத்துந் தணப்பான்
வனத்துமுனி யேமனைவாழ்ந் தும். (க0)

ஏந்திழையார் தன்சயன மெய்தித்தன் மெய்தொடினுங்
காய்ந் §துவர்த்த லேவிரத்தி காண். (கக)

இல்வாழ்வா னுந்துறவி தன்னேந் திழைதன்னை
யல்லார்பா ¶லாதரவற் றால். (கஉ)

---

* அயிங்கிதை—பிறவுயிர்க்கு இமிசை செய்யாமை.

† பீழை—துன்பம்.

‡ சொல்லுஞ்சொல்—பொருளறப்பொய்யாச்சொல்லாது எனக்கூட்டுக

$ புரிதல்—விரும்புதல்.

§ உவர்த்தல்—வெறுத்தல்.

¶ ஆதரவு—விருப்பம்.

தணந்திடுக தன்மனைவி தோளிணையுந் தான்றா
*னிணங்கவொண்ணா நாள்களெண்ணி யே. (கங)

மனத்தூய்மை யென்றார் வயிர மறுகை
தனைப்பிழைத்தார் தம்பாலுந் தான். (கச)

இயமமிவை யெல்லா மினிப்பொறை யாதி
நியமமுஞ்சொல் வாங்கேளாய் நீ. (கரு)

உ. நியமம்.

அறுத்திடுக கோப மறிவிலர்பாற் றம்மை
யொறுத்திடுவார் தம்பாலி னும். (கசா)

மண்ணாலு நீராலு மாற்றியுடன் மாசகன்பின்
றெண்ணீராற் றர்ப்பணமுஞ் செய். (கஎ)

தேசிகர்க்கு மாதவர்க்கு மேவலினைச் செய்கசிவ
பூசனையுஞ் செய்க புரிந்து. (கஅ)

†ஆக்கத்தி னுற்ற வசமகிழ்ச்சி செய்திடுக
வாக்க மழியினுநோ வற்று. (ககூ)

ஈர்ந்திடி னுந் தன்னை யெதிர்மகிழ்ந்தே யெம்பாவந்
தீர்ந்ததெனக் காண்க தெளிந்து. (உ0)

நியமமிவை யெல்லா மினிநிகழ்த்து வாங்கே
ளயர்வுளறுத் தேயா தனம். (உக)

ங. ஆதனம்.

அச்சமிலா வெல்லை யகந்தானு மாதனத்துக்
‡கெச்சமிலா நல்லிடமென் றெண். (உஉ)

---

*இணங்க வொண்ணா நாள்கள்:—“பூத்துநீ ராடியநாண் முதலாகப் பன்னிருநாள் பூவை மார்க்கு, வாய்த்தசூ லுறுங்கால மாதலின் லந்நாளுண் மகமே மூலம், பாத்தசீர் விரததினந் தனக்காகா நாள்பஞ்ச பருவமெல்லா, நீத்துநூல் விதித்ததினம் புணரானேற் கருவொன்று நீக்கி னுனல்” எனத் திருவானைக்காப் புராணத்தினும், “பூவையே யனையார் தம்மிற் பூத்தநாண் முதனா ணன்கு, மேவிடார் புணர்ச்சி பின்னை விரும்புநாள் பன்னி ரண்டி, லேவுறு கருப்ப மூண்டா மிங்கிதி லிரட்டி நாளாண், பாவின தொற்றை நாளேற் பெண்ணெனப் பகரு நீயே” என உள்ளமுடையாணிலுங் கூறின மை காண்க.

†ஆக்கம்—செல்வம்.

‡எச்சம்—குறை.

ஆதனந்தா னேபதும மாதியவற் றுட்பதும
வாதனஞ்சொல் வாமேகே ளாய். (உரு)

வலக்காற் புறமிடக்கா லுள்ளுறக் *கவான்வை
வலக்கைப் புறமிடத்து வை. (உச)

பதுமா தனமதுதான் †மற்றையவும் பாட்டுள்
விதியறிந்து செய்க விழைந்து. (உரு)

அன்றித்தன் னாகத் ‡தினுக்கிசைந்த வாதனத்
தொன்றிப் புரியலுமா கும். (உசு)

வரிப்புலித்தோ $லிற்கரிய மானி னதளி
னிருக்கையது வாமென்றே யெண். (உஎ)

இயற்றாய் வடதிசையை நோக்கி யிருந்தே
யியற்றலுமாம் §பூருவதிக் கின். (உஅ)

உரைத்தாமெய் யாதனந் தன்னை யினியா
முரைப்பாமா யாமாதி யும். (உகூ)

௪. பிராணயாமம். (பிராணவாயுவொடுக்கம்)

¶புகவுள் ளுயிரிடையிற் பூரித்துக் கும்பித்
தகவலத்தி னாலே யொழி. (௩௦)

---

*கவான்—தொடை.

†மற்றைய—பத்திராசனம், சிங்காதனமுதலியன.

‡ஆகம்—தேகம்.

$அதள்—தோல்.

§பூர்வதிக்கு—கீழ்த்திசை.

¶இக்குறளின் பதவுரை—உயிர்-பிராணவாயுவை, இடையில்-இடைகலை யாகிய இடமூக்கினிற்கும் நாம்பின்வழியால், உள்புக-உந்தியினுள்ளேசெல்ல பூரித்து-பூரகஞ்செய்து, (பூரகஞ்செய்தல் பிராணவாயுவை யுள்ளேவாங்குதல்) கும்பித்து - சுழுமுனைநாடியாகிய நடுநாடியிற் செலுத்தியடக்கி, வலத்தினால் - பிங்கலையாகிய வலமூக்கினிற்கு நாடியால், உகஒழி - நீங்கவிடுவாயாக என்றவாறு. "பிராணவாயுவின் குணமாவது இடைகலை பிங்கலை சுழுமுனை யென்னுமூன்று நாடிகளில் நடுநின்ற சுழுமுனையொழிய இரண்டின் வழியே மூலாதாரத்தினின்று மேனோக்கியேறி இரண்டுமூக்கானும் ஓரோர் பாரிசத்

*புடைவலத்தாற் பூரித்துக் கும்பித்துப் போக்கா
யிடையாலிவ் வாறியற்றென் றும். (௩க)

†எண்ணிரண்டு பூரிக்க வெட்டெட்டுக் கும்பிக்க
வெண்ணான் கிரேசிக்க வே. (௩உ)

‡எழுத்துக் கியம்பிய மாத்திரைகொ ளீது
மொழித்தியம்பு மாத்திரையு மூண்டு. (௩௩)

சகற்ப [illegible]தா னிரண்டா யாமஞ்
சகற்ப மதிகபலந் தான். (௩ச)

சகற்பந் தியானசெபந் தன்னோ டியற்ற
லகற்பமிவை யன்றியியற் றல். (௩ரு)

ஐந்தெழுத்துஞ் சூத்திரால் லார்மூவ $ரோங்கார
மந்திரத்துச் செய்க வழக்கு. (௩சா)

§இயற்றலுமாங் கும்பகமும் ரேசகமு மின்றி
யியற்றுநீங் கெல்லா மிறும். (௩எ)

துக்கு ஐந்துநாழிகையாகக்கொண்டு ஒருமாத்திரையில் கஉரு சுவாசமாய் ஒருசுவாசத்திலே கஉ அங்குலி வாயுப்புறப்பட்டு நாலங்குலி தேய்ந்து எண் விரல் உள்ளே அடங்குகின்றது" எனவும், "ஒருமாத்திரையாவது இரண்டரை நாழிகையை எட்டுக்கூறிட்டு ஒருகூறென்றறிக" எனவும், "மூலாதாரமாவது சரீரத்தளவு தன்கையாற் றொண்ணூற்றாறங்குலம்; இதன்மேலே நாற்பத்தேழரையங்குலமுங் கீழேநாற்பத்தேழரையங்குலமும் விட்டு நடுநின்ற ஓரங்குலம்" எனவும் சிலப்பதிகாரவுரையிற் கூறப்பட்டது.

* இக்குறளால் முன்னர்க்கூறியதனைமாற்றிப் பிங்கலையாற்பூரகமும் சுழுமுனையாற் கும்பகமும் இடைகலையால் ரேசகமும் செய்யவேண்டுமென்றுரைக்க.

†இக்குறளிற் சொல்லப்பட்ட எண்கள் மாத்திரையைக்குறிக்கின்றன.

‡எழுத்துக்கியம்பிய மாத்திரையாவது கண்ணிமைப்பொழுதுங் கைந்நொடிப்பொழுதுமாம்.

$ஓங்காரத்தோடு என உருபு விரித்துரைக்க.

§'கும்பகமும் ரேசகமும் இன்றி' என்றதனால் இயற்றலுமாம் என்பதற்குப் பூரகமாத்திரஞ்செய்தலுமாகும் எனப்பொருள்கொள்க;

¶திரண்டபால் கைப்புத்தித் திப்புப் புளிப்பு
முருண்ட||சுரை யாதியுநீத் துண். (௩௯)

அருந்திய வன்னத் தளவுறும் பாவ
மருந்துவித்தான் பாவ மறும். (௩௯)

ஆதலினு லற்ப மருந்திடுக வாவியுறச்
சாதிக்க யோகந் தனை. (௪0)

*உதரபந்தம் வீக்கிடையி லுண்டவன முண்ட
†வுதகஞ் சிறுகூ டுற. (௪௧)

ரு. பிரத்தியாகாரம்.

பிரத்தியா காரமினிக் கேள்பிரித்தோ ‡வைந்தும்
விருப்பத்தின் $மீட்க விரைந்து. (௪௨)

சு. தாரணை.

§மனந்தன்னை யிந்திரியந் தன்னை மடக்கி
யனந்தனடி வைதா ரணை. (௪௩)

எ. தியானம்.

ஏற்றதியா னஞ்சிதமப ரேச னடிநினைவு
¶மாற்றவே நிற்கும் ||வரம். (௪௪)

ஒண்டொடியைக் காமுகன்று னூதல்போ லுள்ளத்துக்
கண்டிருகங் காளன் கழல். (௪ரு)

¶திரண்டபால் - வற்றக்காய்ச்சித் திரட்டிய பாலென்க.

||சுரை - சுரைக்காய்.

*வஸ்திரமுதலானவற்றால் வயிற்றைச்சுற்றியிறுக்குங்கட்டு.

†உதகம் - நீர்.

‡ஐந்து - பஞ்சேந்திரியம்.

$மீட்க எனவே உண்ணேக்குக என்பது கருத்தாயிற்று.

§மனந்தன்னை அனந்தனடிவை எனக்கூட்டுக; அனந்தன் -சிவபிரான்.

¶வினையவற்றிலே நினைவு மாற்ற எனவருவித்துரைக்க; நினைவு- மத்தி மதீபம்.

||வரம் - மேன்மை.

அரிது சமாதி யடைகை யதனு
லெளிது தியான மியற்று. (சசு)

எளிததியா னப்பலமென் றெண்ணித் தியானம்
*வெளிற விருப்பார் விரைந்து. (சஎ)

பரிய வுடைகளைவர் பட்டாடை பெற்றூர்
பரியவுடை †யில்லார்க்குப் பட்டு. (சஅ)

ஆதார மென்னநிரா தாரமென்ன ‡யோகமிரண்
டாதாரஞ் சொன்னதியா னம். (சகூ)

பரமசிவன் முனுபிருட் பார்க்கைநிரா தார
மிரவுபக லற்றவிடத் தின். (ருo)

அ. சமாதி.

இந்தநிலை தானே சமாதிபிந னைப்பெற்றூர்க
§ஐகைந்தொடுநான் கும்மடங்கு மாங்கு. (ருக)

அட்டாங்க யோக சமாதி யடைந்தாருக்
கட்டமா சித்திகளுண் டால். (ருஉ)

ஆதலினுற் செக்க ரருககரொரு கோடியென
நாதனை நீ நெற்றிநடு நாடு. (ருங)

நெஞ்சந் தனினு நினைநினக்கு வேண்டுமுரு
§வஞ்சஞ் செனுஞ்சகளந் தாய்ந்து. (ருச)

அருர்ச்சனைசெ யன்பா லிதைய வலரிற்
றரித்துச் சதாசிவனைத் தான். (ருரு)

---

*வெளிற - இலேசாக என்பது கருத்து.

†இல்லார் - தரித்திரர். இல்லார்க்குப் பரியவுடையேபட்டு என்பது கருத்து.

‡யோகம் - தியானம்.

§ஐந்து - பஞ்சேந்திரியம்; நான்கு - அந்தக்கரணம் நான்கு.

§அஞ்சஞ்செனுஞ் சகளம் - சிவபிரான்கொண்ட சகளவடிவமென்னு மிருபத்தைந்து மூர்த்தம்.

நின்று மிருந்துங் கிடந்து நடந்துநினை
யென்றுஞ் சிவன்று ளினை. (ரு௬)

முத்திசமா திக்காகு மற்றையவே மும்முறையாற்
*புத்திவிதம் வாய்க்கும் பொருள். (ரு௭)

அடங்கினர்க்கிவ் வட்டாங்க மாரியன்போ திக்க
விடம்பர்க் குணர்த்தின் விழும். (ரு௮)

தீர்வார்†ரா சுத்தமர்க்குத் தேற்றினர்தேர்ந் தாருமிந்நூல்
சேர்வார் பரம சிவம். (ரு௯)

அட்டாங்கயோகக்குறண்முற்றிற்று.

☞ இந்நூல் திருக்கைலாயபரம்பரைத்திருவாவடுதுறை ஆதீனத்திற் கிடைத்தது. இந்நூலாசிரியர் பெயர் முதலியன விளங்கவில்லை. இங்கே இவ்வட்டாங்கயோகக்குறளை "ஆய்ந்தாகமத்தறைவாம்" என முன்னர்க்கூறியிருத்தலால், இது சைவசமயத்தவர்க்கு ஞானசாதனமாய் மிக்கபயன்றருவதெனக் கருதி இச் 'செந்தமிழ்' வாயிலாக வெளியிடுவித்தேன்.

இங்ஙனம்,
திருவாவடுதுறை ஆதீன வித்வான்
சேற்றூர்—சுப்பிரமணியக்கவிராயர்
சைவநூற் பரிசோதகர்
மதுரைத் தமிழ்ச்சங்கம்
மதுரை.

---

*புத்தி - போகம்.

†ஆசு - குற்றம்.

உ

திருச்சிற்றம்பலம்.

வருத்தமறவுய்யும்வழி.

செப்பவள வாயன் சிவன்மக னைங்கரன்று
ணைப்பவள பாதமே நமக்கு. (௧)

கருத்தினிற்கண் டீசனடி கட்டுரைப்பாம் பத்தர்
வருத்தமற வுய்யும் வழி. (௨)

விருத்தர் பிணியாளர் மெல்லியலார் பாலர்
கருத்தினருச் சிக்கவே கண்டு. (௩)

உதையத் திரவி யொளியனைய லிங்க
மிதையத் தலர்மீ திருத்து. (௪)

ஆட்டுகவான் பாலாதி பட்டணிந்தா ரக்குழமுஞ்
சூட்டுகவில் வாதிக் கொடை. (௫)

நிகழுமன்பாற் [1]போனக யாதி நிவேதி
கமழ்தூப தீபாதி காட்டு. (௬)

அஞ்செழுத்தாற் சொன்ன [2]வனைத்தினையுஞ் செய்யடைவே
யஞ்செழுத்தே மந்திரமெல்லாம். (௭)

[3]நெஞ்சத் தருச்சி நினைவுதவி லாகுதிசெ
யஞ்செழுத்தா [4]னாபியழ லார்ந்து. (௮)

பாவனையிற் பட்ட கருடனாற் பாம்பொழியும்
பாவனைமெய் செய்யும் பலம். (௯)

உள்ளேவல் செய்வானைக் [5]காந்தன் மிகவுவப்ப
னுள்ளேசெய் பூசை யுவந்து. (௰)

---

1 போனகம் - அன்னம்.

2 அனைத்தினையும் - ஆன்பாலாதியனைத்தையும்.

3 நெஞ்சத்தைப் பூசைத்தானமென்றும், 4நாபியையோமத்தானமென்றுஞ் சிவஞான சித்தியாருரையிற் கூறியவாறு காண்க.

5 காந்தன் - நாயகன்.

அலைவாக்கைக் கில்லை யருவருப்பு மில்லை
கொலையுமிலை [1]யுட்பூசை கூட்டு. (௰க)

புறத்துஞ் சிவபூசை பூவாற் புரியா
[2]யறத்தின் மலையிலக்கே யாம். (௰உ)

முட்டாதே தொட்டான் முடிக்க சிவபூசை
விட்டா னரகின் விழும். (௰௩)

நெஞ்சத்துன் னிச்சிவன்று ணிண்ட [3]வடங் கைபூண்டே
யஞ்செழுத்தை நாவினுஞ்சொ லாய்ந்து. (௰௪)

வாக்கினொலி மந்தவொலி மானதமென் றிம்மூன்று
மாக்குங்காற் [4]றர்ச்சனிமுன னும். (௰௫)

வாக்கொலியின் மந்தம் [5]விசிட்ட மதன்விசிட்ட
மாக்கு மொலிமனத்தி னால். (௰௬)

மேலியற்றும் போகம் வெறுத்தால் விரும்பினால்
மாலையைக் கீழே மறி. (௰௭)

கண்டி விசிட்டங் [6]கநிட்டங் [7]குசைக்கிரந்தி
[8]புண்டரிக முன்மணியும் பூண். (௰௮)

சிவஞ்சத்தி யான்மாத் [9]திரோதமல [10]மைந்துஞ்
[11]சிவமுதலைந் திற்சிந்தை செய். (௰௯)

---

1 உட்பூசை - அந்தரியாகபூசை.
2 அறத்தின்மலை - என்றது சிவபிரானையென்க.
3 வடம் என்றது உருத்திராக்கமாலையை.
4 தர்ச்சனி - சுட்டுவிரல்.
5 விசிட்டம் - மேன்மை.
6 கநிட்டம் சிறுமை.
7 குசைக்கிரந்தி - தருப்பைமுடிச்சு.
8 புண்டரிகமணி - தாமரைக்கொட்டையாகியமணி.
9 திரோதம் - திரோதானசத்தி.
10 மலம் என்றது ஈண்டு ஆணவ மலமென்க.
11 சிவ - என்றது சிகரவகரங்களை.

முத்தி [1]வலநாடி மொழி [2]சுழுனை முற்றிரண்டிற்
[3]புத்திக் [4]கிடையிற் புகல். (௨௰)

[5]நெற்றிநடு மன்று ணிருமலன்ற னுடன்பாற்
பற்லறுப்பா னுன்பாலன் பால். (௨௧)

அருக்கன் சிவனென் றலிறு லர்ச்சி
யிருப்பாய் சிவபுரத்து ளின்பு. (௨௨)

தூவியினைக் கோபுரத்தை யீசனெனக் கண்டுதொழு
பாவமறும் வாயாதுன் பம். (௨௩)

[6]நின்று மிருந்துங் கிடந்து நடந்துநினை
யென்றுஞ் சிவன்ற ளிணை. (௨௪)

வறுத்தமற வுய்யும் வழிமொழிக பத்தர்க்
கிரக்கத்தா லாசாரியன். (௨௫)

வருத்தமறவுய்யும்வழிமுற்றிற்று.

☞ இந்நூல், திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற் கிடைத்தது. இந்நூலாசிரியர் பெயரிடங்கால முதலியன விளங்கவில்லை. அட்டாங்கயோகக் குறளிற் கூறிய 'நின்றுமிருந்து' மென்னு முதற்குறிப்புடைய குறளை மீண்டுங் கூறியிருத்தலால் அந்நூலாசிரியரே இந்நூலாசிரியரென்றும் அவர் மாணாக்கரே இந்நூலாசிரியரென்றுங் கூறுவர். இதில், அந்தரியாக பூசை, ஓமம், தியான முதலியவற்றைக் கூறியிருத்தலாற் சைவசித்தாந்திகட்குப் பெரும்பிரயோசனமாயுள்ளதென்று வெளிப்படுவித்தேன்.

இங்ஙனம்
சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயர்.

---

1 வலநாடி - பிங்கலைநாடி.
2 சுழுனை - நடுநாடியாகிய சுழுமுனைநாடி.
3 புத்தி - போகம்,
4 இடை இடைகலைநாடி.
5 நெற்றியைத்தியானத் தானமெனச் சிவஞான சித்தியாருரையிற் கூறியவாறு காண்க.
6 இவ்விருபத்து நான்காவது குறளை அட்டாங்க யோகக் குறளினுங் கூறியவாறு காண்க.

ஸ்ரீ:

புலவராற்றுப்படை.

முகவுரை.

இவ்வாற்றுப்படை இயற்றியவர் திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரியிலிருந்த சிறிய இரத்தினகவிராயர் என்பார். இவர் இற்றைக்கு முந்நூறு வருடங்கட்கு முன்விளங்கிய செந்தமிழ்ப்புலவரும், மாறனலங்கார வுரையாசிரியருமாகிய திருமேனி, இரத்தின கவிராயரின் வழித்தோன்றலாவர். இவர் இருநூறுவருஷங்கட்கு முன் கல்வியுஞ் செல்வமும் ஒருங்கெய்தி விளங்கிய வள்ளலும், மச்சபுராணம், நீடூர்த்தலபுராணமுதலிய பல நூல்களியற்றியோருமாகிய இரசை-வடமலையப்ப பிள்ளை அவர்கள் பேரில் இவ்வாற்றுப்படை பாடினர். இந்நூல் திருச்சிராப்பள்ளியிலே கோல்லமாண்டு அகூஅ-ல் அரங்கேற்றப்பட்டதாக அவ்வேட்டில் எழுதப்பட்டுள்ளது. வடமலையப்பவள்ளலின் மரபினர் திருநெல்வேலியில் இன்றும்சிறப்புற்றிருக்கின்றனர். இவ்வாற்றுப்படை சொற்சுவை பொருட்சுவை பெரிதுடைத்தாய்ப் படிப்போர்க்குப் பேரானந்தம் பயப்பது.


பத்திராசிரியர்.

திருக்குருகூர்

சிறிய இரத்தின கவிராயர்

இயற்றிய

புலவராற்றுப்படை.



காப்பு.

வேற்றுப் படையை நரிப்படை யாக்கித்தன் வேற்படைக்குங்
கூற்றுப் படைக்கும் விருந்தூட்டும் வீரன் கொழுங்கருணை
யூற்றுப் படைக்கும் வடமலை மாலிறை யூர்ப்புலவ
ராற்றுப் படைக்குமுன் னிற்பான் சௌந்தரி லறுமுகனே

அரச வடமலையே யாதுலர்தம் வாழ்வே
யிரசையர சேயரச ரேறே—முரசப்
புலவராற் றுப்படையும் போர்வேலோய் நின்மேற்
புலவராற் றுப்படைபொற் பூண்

பாயிரம்.

* கன்ன னநவரத கல்யாணன் பார்புரக்கு
மன்ன னிரசை வடமலைமேற்—பன்னுதமி
ழேற்றுப் படைக்கு மிரத்நகவி ஞன்புலவ
ராற்றுப் படைபாடி னான்

நூல்.

பார்புகழ் தெய்வப் பசுந்துழாய் பூத்த
கார்முகின் மேனிக் கருணையங் கடவு
ளண்டமு மகண்டமு மனைத்தும் பூத்த
முண்டக நாபி முளைத்தெழும் பிரம

* இச்செய்யுள் 'வடமலையப்பன் கவிராயர் பாடியது' என இ
ழுதப்பட்டுள்ளது.

னிசைமுகப் பழமறை யீர்ந்தே னுவட்டெறி
திசைமுகப் பரிமளச் செந்தா மரையினு
மேனிலா வியமுகை மென்முலைக் குடைந்த
பானிலா வெள்ளிதழ்ப் பங்கே ருகத்தினும்
வெண்டுகில் வெண்பணி வேய்ந்துவீற் றிருந்த
பெண்டகை வெண்ணிறப் பேடை யோதிம
மறுபா னென்கென வமைத்தசொற் கலையா
யுறுபாற் கடலக டுதித்தெழுந் திங்க
ளல்வழிப் புகுமென தகவிருண் மாற்றுபு
நல்வழி காட்டிய நந்தா விளக்கங்
காவிளை யாடுங் களிமயில் கடுப்ப
நாவிளை யாடு நற்றமிழ்க் கவிஞன்
கவியொடு வாதி கமகன் வாக்கியெனப்
புவியிடம் பழிச்சிய புலமை யாள
னறம்பொரு ளின்பம்வீ டாமெனு நான்குந்
திறம்பட வுணர்ந்து செப்புநூ லறிஞ
னெண்பெயர் முதலா வீரைந் தெழுத்தும்
பண்புற வகுத்த பதங்க ளிரண்டு
மொருமூன்று புணர்ச்சியு மிருமூன்று விகாரமும்
வேற்றுமை யாறுந் தோற்றிய வல்வழி
தொழின்முத லாகத் தழுவுமீ ரேழுஞ்
சாரியை யுருபுஞ் சேருமிரு திணையுஞ்
செய்யுளும் வழக்குமென் றெய்துமிரு திறனு
மொருவகை தழீஇய விருவகை யெச்சமும்
வினைமுற்றுக் குறிப்புமுற் றெனுமிரு குறிப்பு
மூவகை யிடனு மூவகைக் காலமு
நால்வகைச் சொல்லும் பாலோ ரைந்துந்
தொகையோ ராறு மிகைவழு வேழுந்
தொகுத்திடு மெட்டு வகைப்பொருள் கோளு
மிடைச்சொ லுரிச்சொலென் றடுத்தசொல் லிரண்டுங்
காட்சி முதலாங் கைக்கிளைப் பகுதியு

மாட்சி யியற்கை மணத்தன் முதலாக்
களவிற் குரிய கிளவித் தொகையு
முற்புணர் மகிழ்ச்சி முதலா வுரைத்த
கற்பின் வகையுங் கட்டுரை யொழிபு
மெழுத்தசை சீர்தளை யியைந்த வடிதொடை
வழுத்துபாப் பாவினம் வண்ணமீ றாகக்
கோப்புற வகுத்த யாப்பின் விதியு
முத்தகங் குளக மெய்த்தொகை தொடர்நிலை
யென்னநால் வகைத்தாய் மன்னிய செய்யுளுஞ்
செறிவுமுத லாக நிறைகுணம் பத்துடை
வைதற்ப பாகமு மெய்திய கவுடமுந்
தன்மை யுவமை தானமுத லாக
வன்மையில் பாவிகம் வரைபொரு ளணியுந
தேமூற் றிருந்த கோமூத் திரமுத
லக்கரச் சுதகமீ றானசொல் லணியு
மிக்குள மடக்குமென வேறுவே றிசைத்த
தொல்காப் பியமுத லொல்காப பனுவலுட்
கருவி செய்கையென் றிருவகைத் தாய
வெழுத்துச் சொற்பொரு ளியாப்பணி யெனாந்துறை
பழுத்த விலக்கணப் பவ்வங் கடந்து
மிலக்கிய மெனுங்கட லெளிதினிற் கடந்துங்
கலக்கும்வெங் கலிக்கடல் கடப்பரி தாகி
யீகை யென்னு மிரும்புணை யேற்றி
யோகைசேர் செல்வமென் றோர்பெருந் தீவினிற்
சேர்த்தியுயிர் காக்குந் தியாகி யென்றோர்
கீர்த்திபெறு மீகான் கிடைத்தலின் மையினாற்
றொல்லையூழ் வினையாஞ் சுழிசுழித் தலைப்பச்
செல்லல்கூ ரவாவெனுந் திரையெடுத் தெறிய
வன்பசி யென்னு மகரமீன் விழுங்கத்
துன்ப மென்னுஞ் சுறவெதிர் பாயக்
கவலை யென்னுங் கடுங்கரா மீர்ப்பத்

துவளுபு மேனி சோர்ந்துநடு நடுங்கியு
மன்புள சிந்தைய ராகுநட் டோரெனும்
வன்பிலா வோட்டை வங்கத் தேறலு
மப்புறத் தியங்கா தலைதலை மீதுறக்
குப்புறத் தாழ்ந்து கூட வமிழ்ந்தியு
மெவ்வழி யேனு மினிமுயன் றய்துமென்
றவ்வழி யுளுற்று மருநதொழிற் பாசியைப்
பற்றெனப் பற்றிப் படர்தலு நைந்துநைந்
தற்றிடை சிதைப்ப வலக்கணுற் றிரங்கியு
மாக்க மென்னு மக்கரை சேர்துமென்
றாக்கமி லிரவெனு மோர்பசு மட்குடங்
கைக்கொடு நீந்தக் கரைநதுகரைந் தேகலு
மக்குடம் போல வகங்கை கரைந்து
நல்குர வென்னு நடுக்கான் புகுந்து
மல்குவெந் துயராம் வனத்தீ வளைப்பக்
கிளையெனுந் தூறுகாற் றளையெனச் சுற்ற
மாயா விரவெனும வன்பேய் தொடர
வீயா வன்கண ரெனுநச்தேள் கொட்ட
நெடும்பசி யென்னுங் கொடும்புலிக் கிரையாய்
மானமுங் குலமும் வண்மையும் பொறையு
ஞானமுந் தருமமு நன்மையுங் குடிபோய்க்
கருத்துறு பயமுங் கவ்வையும் பழியும்
வருத்தமும் பிணியும் வதியுமா லயமாய்ப்
படல்கொடு சாத்து மிடனிலா மனையுங்
காய்ந்தபுத் தோலை வேய்ந்திடாக் கூரையும்
வெளியறக் கற்றை விரித்துவான் முகட்டிற்
றுளிவிழா திறுக்கிச் சுற்று முகடும்
பொருக்கறத் தெளித்துப் பெருக்கா முன்றிலும்
புரையறத் தீற்றிப் புதுக்காச் சுவருந்
தரையலான் மெத்தை தழுவாச் சேக்கையு
மெழுகிமென் கோல மெழுதாத் திண்ணையுங்

கழுநீர் களைந்து பொழியாத் தொட்டியும்
பொங்கா வடுப்பும் புகையா வட்டிலு
மங்கார் பதம்வைத் தடுக்காக் குழிசியு
மயன்மனை புகுதாச் செயன்மனை யாட்டி
மஞ்சணீ ராடி வயங்கா மேனியு
மஞ்சனந் தீட்டா வயில்விழிக் கடையுஞ்
செம்பஞ் செழுதா வம்புயப் பாதமும்
வரிவளை புனையா விருகைக் காந்தளுந்
திலகம் பொறியாத் திங்கள்வா ணுதலு
மிலகுவெண் டுகில்பொறா திடுகுநூ லிடையு
மைம்முகிற் காடென வகிர்ந்துசிக் கறுத்து
மொய்ம்மலர் செருகி முடியாக் கூந்தலு
நயனிலா நடையு நகையிலா முகமும
பயனிலா மொழியும் பரிவிலா வுளமும்
பாலொடு வறந்து பசியொடு வெதுமபித்
தோலொடு திரங்கிச் சுருங்கிய முலையு
மம்முலை நெருடி யரும்பசி பொறாது
விம்முசெங் கனிவாய் மென்பசுங் குழவி
சுவைத்தலு மொருபாற் சுவைத்துளி பெறாது
நெடிதுயிர்த் தயர்ந்து துடிதுடித் தேங்கி
நோய்முக நோக்கிய தாய்முக நோக்கி
யிரித முண்க ணீர்கரைந் தொழுக
மூரல்வெள் ளெயிற்றின் முளைநிலா வொழுக
மழலையந் தொணிவிடுத் தழுமிளங் குரலு
முற்பட முதிர்ந்த பொற்புடைச் சிறாஅ
ரொருபொழு தாயினு மூண்சுவை காணா
திருபொழு தேமாந் திணைக்கவு ளதைப்ப
வெண்ணெய் காணாது தண்முடி காய
மிளகு காணா தொளிமுக மழுங்க
நரம்பெழுந் தென்பு நிரம்பமெய் தோன்ற
வெக்கிய வயிறு மிலைபோற் குழைய

பலபல பிதற்றிக் கலகலென் றொலித்துச்
சட்டஞ்செய் துலகைத் திட்டஞ்செய் பவர்போன்
முன்னிறை யிரட்டி பின்னிறை யேற்றி
யடுங்கோ லென்னக் கொடுங்கோல் செலுத்தி
யடியடி யென்ன வடித்தடித் தெளிய
குடியலைத் தோட்டுங் கொடியபா தகரை
யப்பிறப் பினிலே யளித்தன மதனா
லிப்பிறப் பினிலே யிப்பொருள் படைத்தே
முற்றவர்க் கின்னு முதவின் மேன்மேலு
மற்றுள பிறப்பினும வருநமக் கென்று
சொல்லவந் தவர்மனச் சூழ்ச்சி யறியாது
செல்வநிலை யன்றெனுஞ் செய்கை குறியா
தீதலே யறமெனு நீதி கருதா
துரனார் பகுவா யுணர்விலாக காகமுங்
கரவா கரைந்துணக் கண்டு தெளியாது
வாரறப் புடைத்து வட்டமிட் டெழுந்து
பூரண குடம்போற் புளகிதஞ் செறிந்த
கொங்கையும் வால்வளைச் செங்கையுங் காட்டி
வாடையு மருந்து மஞ்சளுங் கூட்டி
மேடைமே னின்று வெண்ணகை கோட்டிச்
சொக்கிடு மாய மைக்கணான் மருட்டும
பாசிழை யல்குல் வேசையர்க் கலது
தனம்பெரி தளிக்க மனங்கூ டாது
படிறுபல விளைத்துக் கொடிறுக வுடைக்குங்
கூர்ங்கை யல்லவர்க் கீர்ங்கை விதிராது
வறியவர்க் காணின் மொறுமொறுத் திகழ்ந்து
பகைத்தவ ரென்னத் திகைத்தெதிர் நோக்கி
யிஞ்சி தின்ற வெஞ்சினக் குரங்கென
வகங்கெட வாளா முகங்கடு கடுத்துக்
கல்லெறிந் தன்ன வல்லுரை கூறி
நாய்போற் குரைத்துப் பேய்போற் குதித்துத்

தள்ளெனத் தள்ளித் தலைக்கடை யடைத்துத்
தண்டிய குண்டோ தரன்போற் றெருந்தியும்
பண்டியும் பாவமும் பருக்கப் பருத்து
நமரிவர் நமக்கிவர் நண்பின ருரிய
தமரென வடுத்தோர் தமக்கு மெள்ளளவும்
பாத்துணு தலில் பழம்பொருள் புதைத்துவைத்
தீத்தொகு தேன்போ லிழக்கு மூடரை
வேனிலிற் றளர்ந்து விடாய்கெட நுகர்வான்
கானலை நீரெனக் கருதுபு சென்றெனக்
கற்பசு முலைப்பால் கறப்பான் புக்கென
வற்புறு மணனெய் வடிப்பா னிசைந்தென
வறிதினி லடித்துப் பெறுபயன் வேண்டி
யிரவலர்க் கொருகா சீயாக் கைகளை
வரைவிலா தளிக்கு மழைமுகி லென்றும்
பொய்யொழிந் துரையாப் புரைகொள்பாழ் முகத்தை
மையொழிந் திலங்கும் வாண்மதி யென்று
மொருவரைத் தாங்கா வரணிலாப் புயங்களை
யிருவரைச் சிகரத் திகலுடைத் தென்றும்
வழுவறத் தேர்ந்து வடித்துநன் மதுரந்
தழுவிய நவரசத் தண்டமிழ்ப் பாகைக்
காட்டுக் கெறித்த கதிர்நிலா வென்ன
மேட்டுக் கிறைத்த விழுப்புன லென்னப்
போதமில் செவிடர்முன் னூதுசங் கொலியெனக்
கமரிடை யுகுத்த வமிர்தென வாங்கவர்
தொள்ளார் மரச்செவி யுள்ளே தூஉய்
வேளையன் றின்று நாளை வம்மென்ன
வழிபல தேய்ந்து குழிபட நடந்து
நூல்கொளுந் தமிழை நுவன்றிடும் வாய்போற்
கால்களுஞ் சலித்துக் கருந்தழும் பேற
வூர்தரு சகடத் துருளே போலவும்
பேர்தரு மூசற் பிறழ்வடம் போலவும்

போவதும் வருவது மாவதே தொழிலாய்
நாட்செல நாட்செலத் தாழ்ச்சியாய்ப் பலமும்
பஞ்சியாய்க் கழிய விஞ்சிநீள் கலியா
விரைமுகக் கீரிமுன் வருபொறிப் பாந்தளப்
பாந்தள்வாய்ப் பட்டு மாந்து தேரை
கொடிச்சிறு தூண்டில்வாய்த் துடித்தெழு கெண்டை
பருந்துவாய்க் கவ்வ வருந்தும் பார்ப்புத்
தொகப்படு மொட்டில்வந் தகப்படும் பறவை
யாலைவாய்க் கரும்பு வேலைவாய்த் துரும்பு
வலைவாய்ப் புகுமொரு மானெனத் தியங்கி
யுலைவாய் மெழுகென வுருகிவெய் துயிர்த்துச்
சிதலை தின்ற முதுமரம் போலவும்
புல்லுரீஇ படர்ந்த சில்லி போலவு
மிளங்களி றுண்ட விளங்கனி போலவுந்
தும்பி குடைந்த தம்பம் போலவு
முள்ளூற மெலிந்து வெள்ளுடற் கோதாய்ச்
சலமதி யெனமதிச் சஞ்சலம் பெரிதுற
நாழிகை யொருநா ளுளொரு மாதம்
வாழிய மாதமோர் வருடமாய் நீடத்
திரிதரு நாளோ ரிரவிடைச் சலியா
வொடுங்கிய மெய்யன் கொடுங்கை யணையாக
வொருசிறி தாங்கே யிருவிழி முகிழ்ப்பக்
கனவுகண் டிதுவோர் நனவென விழித்தனன்
யாதோ வென்னின் மாதே கேளாய்
குடதிசைப் புறத்தோர் நெடுவரை முகட்டி
லாறாப் பசிக்கனன் மாறா துழன்று
தாகமுந் துயருஞ் சோகமும் பெருகித்
தளர்வுறு மஞ்சிறைச் சாதகச் சேவல்
கிளையொடும் பார்ப்பொடுங் கீழ்த்திசை நோக்கி
யெழுந்துசெல் பொழுதி லினவளை கொழிக்குங்
கொழுந்திரைப் படுகரைச் செழுந்திணை மருதத்

திங்கிலங் குளிர்ப்புற மின்னரம் பெழுசூற்
கருமழைக் கொழுந்து பெருமழை பொழிய
வருந்துளி யமுதம் விருந்துகூட் டருந்தி
யெல்லையின் மகிழ்வொடு மொல்லையி னீண்டன
னீண்டிவண் வரும்வழி யாண்டொரு நெறிக்க
ணறைமலர்க் கூந்தற் பிறைமலி வாணுதற்
பவளமென் கனிவாய்க் குவளையங் கடைக்க
ணிணைத்தடக் திரண்டு பணைத்தெழு கொங்கை
யிறுமிறு மென்ன மறுகுநூன் மருங்குற்
சிலம்புபொற் சதங்கை பலமலுஞ் சீறடித்
தாயினு மன்பிற் சேயிழை யொருத்தி
கருநிறப் புயல்போன் மருவுமோர் தலைவன்
நன்மொழி மாறு தென்முன மெய்தி
விளங்குதங் கையின்மா துளங்கனி பொன்று
நன்கொடு பெறுகென வென்கையி லீந்தனன்
வாங்கினன் வல்லையி லீங்குவந் தடைந்தே
னங்கதற் குறுபய னிங்குநின் றெளியே
னத்திரைக் கேக வவனியேழ் புரக்கு
மைத்தகு நிறத்தோர் மன்னர்மன் னவனு
மின்புறு பெருவள மெய்துவ துளதென
வன்புறு மனையாட் கறிவுறப் பகர்ந்து
களிப்பொடு மெழுந்து வெளிப்புறப் படுதலு
மந்தண ரிருவர் வந்தது கண்டனன்
பிறைவடந் திகழ்முலைப் பெண்ணணங் கனையவர்
நிறைகுடஞ் சுமந்து நேர்வரக் கண்டனன்
கரிக்குரீஇ யிடம்பாய்ந் திருக்குதல் கண்டனன்
கருடன்வந் திடமா யருடரக் கண்டனன்
நன்றிகூர் நிமித்தமீ தென்றுகொண் டாடினன்
றிகழும்வெண் டரளமுஞ் செம்பொனும் வரன்றி
மொகுமொகென் றருவி முழங்கிவீழ் குன்று
மாரமுந் தேக்கு மசோகமு நாகமும்

வேரலு மைவனம் விளையுஞ் சாரலுஞ்
சிறையடித் தகவுஞ் செழுங்களித் தோகையுங்
கறையடித் திரளுங் கடும்போர் மடங்கலு
முறப்புலி யெதிர்பாய் மறப்புலிக் குழாமும்
விடாவடி வள்ளுகிர்க் குடாவடித் தொகுதியும்
பெறுகுடிக் குறவர் சிறுகுடிக் குரம்பையு
நிரம்பிய குறிஞ்சிப் பெரும்புலங் கடந்தனன்
விராவரும் பராரைக் குரவு மராவுங்
காரையுங் கரிந்த சூரையு மிருப்பையுஞ்
சருகுபட் டுலர்ந்த கருகுபைங் கள்ளியும்
விடரெழுந் தெங்கணும் படர்வெயிற் கானலு
முரிசிறைக் கழுகும் விரிசிறைப் பருந்து
முன்னாய் வெருண்டிகல் செந்நாய்க் கணமு
மிடைந்தவெம் பாலைக் கொடுந்திணை கடந்தனன்
பைங்குலை முல்லையுஞ் செங்குலைக் காந்தளு
நறுஞ்சினைக் குருந்துங் குறுஞ்சுனைக் கலுழியுந்
தாற்றுக்கதிர் வரகு மேற்றுத்தொறு நிரையு
மதுவியல் கூத்தற் பொதுவியர் குரவையு
மன்னிய முல்லை நன்னிலங் கடந்தனன்
றடம்பணைச் செந்துண ரடம்பின் கானமும்
விரும்புவெண் முகைமுத் தரும்புபுந் நாகமுந
தாங்குபைங் குடக்காய் தூங்குமுட் கைதையுந்
திவள்சினைப் பணிலமுந் தவழ்கழிக் கானலு
முடைப்புலால் பகருங் கடைப்படு களமு
மப்பள வளாய வுப்பள வளமுஞ்
சைவலப் படலையுங் கைவலத் திமிலரும்
பாய்மரம் விரித்து வேய்மரக் கலமும்
பட்டின வளாகமு மட்டிலா திசைந்த
நெய்தலஞ் சூழ னெய்தினிற் சாருமுன்
மற்றதன் மருங்கில் வான்முக டளந்து
சுற்றிய பளிக்குச் சுவர்மணி மாடமுந்

தோரண நாற்றுந் துகிற்கொடி மறுகு
மாரண வேதியர்க் கக்கிர காரமுஞ்
சித்திர முகப்புந் தேவரா லயமு
நித்திலப் பெருந்தூ ணிறைத்தகா வணமு
நித்தலும் பொழியன சத்திர சாலையு
பாடகத் திரண்முலைப் பாடகச் சிறடிச்
சூடகக் கையினர் நாடகத் தரங்கும்
வாழையும் பலாவு மடற்பசும் பூகமுந்
தாழையு மாவுந் தழைத்தபூங் காவுங்
குவளையுங் கமலமுங் குமுதமுஞ் செறிந்த
தவளையுங் கயலுந் தாவும்வா விகளு
மடைகரைப் புளினமுங் குடையுநீர் மதகு
மாற்றுநீர்ப் பிறைகளு மூற்றுநீர்க் கேணியுங்
கன்னலம் படப்பையுஞ் செந்நெலங் கழனியு
முழுதொழின் மாரு மழவ ரோதையு
மாலையு மிளமரச் சாலையு மெங்கணுஞ்
சூழ்ந்துவின் னிமையவர் வாழ்ந்தபொன் னுலக
நவந்தி யொடுபோந் தவணியில் வந்தெனத்
தரையூர் சிறப்புடை யிரையூர் புகுந்தனன்
திருந்துபொற் கோயிற் செழுமணி முகப்பிடை
யிருந்தன னக்கணத் தெறிகடன் முழக்கென
வல்லியங் குறுங்கண் வார்ப் பல்லியங் கறங்கத்
தண்கதிர் மதியென வெண்குடை கவிப்பத்
தேமரு மெல்லிதழ்த் தாமரை முகத்தியர்
காமரு கற்றைவெண் சாமரை யிரட்ட
வெள்ளடை நாசியர் வெள்ளடை யுதவ
வாளஞ்சு கண்ணியர் காளஞ்சி யேந்த
வொருதனித் தடக்கை யிருபிறைக் கோட்டு
மும்மதஞ் சொரியும் வெம்மத நால்வாய்
முகபட மிலகிய புகர்முக விகடப்
போதகக் கழுத்தின் மீதிலோர் புலவ

னெதிர்ந்தனன் மன்னோ வெதிர்ந்தனன் மன்னோ
வதிர்ந்தன யானையிண் டடைகுநர் யாரென
வத்திசை நோக்கலு மித்திசை நோக்கினன்
யானெதிர் செலவவன் றானெதி ரணுகின
னொருவ ரோருட லோருயி ரிவரென
விருவரு மிருமார் பிசைந்துறத் தழுவினம்
மிள்ளருங் காதன்மீ தூரமீ தூர
வுள்ளமும் வாய்மையு மொன்றுபட் டெந்தன
நலிந்தவெங் கலியா றொடோறும் புலவ
மெலிந்தனை கொல்லோ மெலிந்தனை கொல்லோ
முற்றிய வன்றுயர் முழுவது நீங்குதற்
குற்றது கால முரைக்குவல் கேளாய்
மாரிசூழ் குடுமி நேரிமால் வரையான்
கரைபொரு தரங்கத் தரளமா நதியா
னியலிசை முத்தமிழ் யாவரு முணர்ந்து
பயிலிருங் கோளப் பாண்டியன் றொட
னிறையூர் வளைதவ ழிறையூர்க் கதிப
னுரங்கெழு நடன துரங்க மிவர்ந்தோன்
மருவலர் வயிர மணிமுடி யிடறுங்
கருநிறக் கரடக் கடாக்களிற் றுகைய
னலமு மழகமு மளவிய மாதர்கண்
ணீலமு நீலமு நீங்கா மார்பினன்
பரசிய மூவகை முரசதிர் முன்றில
னாழிசூழ் புவிபுகழ் பேழியந் துவசன்
பொருதிரைத் தலறுந் திரைதிரைத் தெறிந்த
நந்தூர் கடல்வாய்ச் செந்தூர் முதலாந்
தலமோ ராறுஞ் சிரமோ ராறு
மின்னவிர் முடியும் பன்னிரு கரமு
மழகுறப் பொலிந்த மழகளி றனைய
கந்தனை யுமையாண் மைந்தனைக் குறமான்
மோகன வடிவேன் முருகனை மயூர

வாகனை யநுதினம் வழுத்துபே ராணையன்
றெள்ளிய கலைபயில் பள்ளியி லறிவரி
கற்குழு னேகொடை கற்றறி நிபுணன்
சற்குண லளிதன் சரசசல் லாபன்
செவியினுங் கையினுஞ் செல்பவர்க் கினியநாற்
கவியெனு மமுதமுங் கனகமு மிறைப்போன்
றன்முகங் கண்டவர் தாங்கள்பின் புல்லர்பேய்
வன்முகங் கண்டு மலங்கா தருள்வோ
னருமையும் பெருமையு மடுத்தவெளிமையு
முரிமையும் பழமையு முண்மை மறிந்தோன்
மருண்டுசொப் பனத்து மிரண்டுரை யாத
சாத்திய வசன னித்திய கல்யாணன்
வரையா தெவர்க்கும் வழங்குபொன் மேகங்
கரைகடந் தொழுகுங் கருணைத் தடங்கட
லியலளப் பரிய நயகுணக் குன்ற
மன்பு கனிந்த வின்பக் கொழுங்கனி
பெருமைக் களஞ்சியந் தருமக் கொள்கல
மாதுலர் திரவியம் வேதியர் தாபரங்
கற்றவர் கண்மணி யுற்றவர் பிராண
னாவலர் கற்பக மேவலர் கூற்ற
மேற்றவர் கலிநோய் மாற்றுசஞ் சீவி
தரைமுழு தாளுந் துரைகள் சிகாமணி
தந்திர விவேகி மந்திர யூகி
யொருதனி வீரப் பொருதிறற் சேவகன்
பொருமையி லுயர்ந்த பூமி பாலகன்
சிறுமையில் பெருநிதி சேரள கேசன்
சைவசித் தாந்தங் கைவரு குரிசின்
முல்லையம் பதிசூழ் நெல்லையம் பதிவாழ்
பிடிநடைப் பூரணக் குடமுலைச் சீறடித்
துடியிடைக் கோதையெம் வடிவுடைத் தாயொடும்
வரைவனப் பெருமா னரசுவீற் றிருப்ப

மனைத்தளங் கண்ட மணிநெடுங் கோயி
லனைத்தழ குங்கண் டமைத்தது மன்றிப்
பாவியற் றமிழ்தேர் காவியப் புலவர்
கரகம் பிதத்துடன் சிரகம் பிதஞ்செயத்
தேனூற் றிருந்து செவிதொறுங் கனிய
நானூற் றுக்கோவையு நாற்கவி வண்ணமும்
பலர்புகழ் நீரேர்த் தலபு ராணமு
மிருநிலம் புகழு மொருகலம பகமு
நீடுல குவப்பப் பாடிநிலை நிறுத்துங்
கூறுசொற் கவிதா சாருவ பௌமன்
வாரணக் கொடைபயில் காரணக் கொடையான்
றருவொப் பெனவெழு தாரணி புரக்கு
மிருவப் பன்பெறு மிராச குமாரன்
றெரிதமிழ்க் கூடற் பெரியகர்த் தாக்கள்
வரிசைப் பெயர்பெறும் வரிசைத் துரைமகன்
சிங்காச னத்துரை மங்கா மைக்குமுன்
சூரிய மூர்த்திதன் காரண வரததாற்
பேர்பெற வுதித்த சூரிய மூர்த்தியோ
டரசர்க் கரசென வவனியேழ் புரக்கு
மிருவப் பனுக்கு மின்னுயிர்த் தாதை
கருவுடை மேகக் கடுஞ்சிறை தவிர்த்த
பருவுடைப் பெருமான் றிருமலைக் கொழுந்துதன்
ஒருதவக் கொழுந்தென வருசிவக் கொழுந்து
ஞானா கரனபி மானா பரணன்
செந்தமிழ்க் குதவுந தியாக வாரிதி
வந்தவினை தீர்த்த மகரா சனுக்கும்
வாரிசூழ் கிடந்த மகிதலம் புரக்குங்
காரிகூ டற்றுரை கல்விக் களஞ்சியந்
தாயகத் துணையெனு நாயகப் பெருமாள்
மேகவார் குழலியர் விழிமனங் கவரு
மோகனா யகனெனு மேகனா யகவேள்

வீறுள மணிய காரர்சட் டம்பி
வைத்தவா ரமுமபி மானமும் பொறுமையுஞ்
சத்தியவா சகமுந் தமிழறி புலனும்
புத்திசா துரியமும் பொலிவுறு நிபுணன்
முத்துநா யகமலர் மூவேந் தருக்கும்
பெருமைபெற் றுயர்ந்த வருமைமைத் துனவேள்
இரசைப் பதிவள ரிருவப் பனையருள்
வரிசைப் பெரியவன் வடமலை யப்பனைத்
தஞ்சமென் றடைந்தே னஞ்சலென் றளித்தா
னித்திறம் பாரவன் கைத்திறம் பாடினை
ஞதலா னீயு மவனையே பாடிப்
போதியென் றுரைப்பப் புகழ்ந்தவற் பணிந்து
சிந்தையி லெழுந்த சிறுகளி முதிரத்
தந்தனை செல்வந் தமிழ்மலோ யென்னச்
சென்றனன் பொற்குடஞ் செறிந்தொளி ராடகக்
குன்றென வுயர்ந்த கொடிநெடு மாளிகைப்
பச்சொளி நீலப் பருக்குமிழ் செறித்த
வச்சிர கபாடம் வகுத்தநீண் முன்றிலிற்
குடகமு மீழமுங் கடகரி நிரைப்பக்
காம்பிலி யாரியம் வாம்பரி வகுப்ப
வல்லமுந் துளுவமு மணிமுத் தளப்பக்
கொல்லமுங் கவுடமுங் குடைநிதி யிறைப்ப
மகதமுங் கடாரமுங் குகுதமும் வளைந்து
கவிகையுஞ் சுடர்மணிச் சிவிகையுங் குவிப்பத்
தென்கலிங் கந்தினம் பொன்கலிங் கந்தரக்
கருநட பாளுவங் குருமணி சொரிய
வங்கஞ் சிங்கள மணிமுடி யேந்தக்
கங்கங் குலிசங் கவசம் வழங்க
மையலங் களிற்று மணிமுடி யரசர்
கொய்தபட் டாடைக் குறும்பாய் விரித்துக்
கையணை நாப்பண் செய்யகண் முகிழ்ப்ப

முறையிடுந் தெவ்வர் முறைமுறை முத்தந்
திறையிடுந் துழனி செறிந்தபொன் வாசலி
னின்றனன் சமையமியா தென்று வினவுதலு
மாதுலர் வறியோ ரடுத்தவ ருற்றவ
ரேதிலர் பெரியவர் யாரையு மழைத்து
வரிசையின் முறைமுறை நிரைபெற விருத்திக்
கனியு முக் கனியு மினியபாற் குழம்பு
மிறுகுவெண் டயிரு நறியவா னெய்யு
மறுவிலா வடிசிலு மலிந்துதேக் கெறிய
வறுசுவைக் கறியொடு மன்பொடு மருத்தி
மனந்துணிந் தெவர்க்கும் வரையா தம்பொன்
றினந்தினம் பொழியுந் தியாக மண்டபத்துச்
சூரிய படத்தாற் றுலங்குபூந் தபூவணை ச
சீரிய தமனியச் சிங்கா தனத்து
வேதிய ரொருபால் விருந்தின ரொருபால்
வாதிய லேழிசை வல்லவ ரொருபாற்
காவல ரொருபாற் கவிமழை பொழியும்
பாவல ரொருபாற் பதிந்துசூழ்ந் திருப்ப
விருந்தவன் விரைந்தாங் கெழுந்தெதிர் வந்தனன்
பரிந்துமுன் னெடுநாட் பழகுநண் பினர்போன்
முற்றவத் துறுபய னுற்றதின் றென்றனன்
வருகவென் றொருகை யிருகையிற் றங்கினன்
வியப்புட னுள்ளே பயப்பயக் கொடுபோய்த்
திருத்திக ழாசனத் திருத்தி யிருந்தனன்
முளரியின் மலர்மகள் முகமலர் குடிகொள
வொளிபெற வெனதுட லுளமொடு புளகெழ
விதிவிளை தெறுகலி விடைகொள வருண்மழை
குதிகொள விணைவிழி குளிர நோக்கினன்
குருமணி மகரக் குழைக்கா தழக
வருள்பரி மளிக்கு மம்புய விலோசன
சுந்தர சீதள சந்திர வதன

மடல்விழ் குவளைமேல் வரியளி துளிநறை
யிடையிடை பொதுளிய விருபுய பூதர
கொடியிடை மடவியா குடமுலை மிருகமதம்
வடிபுழு கொடுகமழ் வரைநெடு மார்ப
தியாகவை போகபூ லோகதெய் வேந்திர
பலகலை நிபுண பார்த்திப சேகர
கலியுக கன்ன கருணை கடாக்ஷ
மதுரித வசன விதரண சூர
விரவலர் தவமே மருவல ரிபுவே
கற்றவர் துணையே யுற்றவ ரபிமே
முதியபாட் டமுதே மதுரைவீட் டரசே
யிசைபய பதிவாழ் கருணையங் கடலே
வடமலை சாயினுந் திடமலை யாமெனக்
கடமலை யழையா வுடன்மலை யெற்றித்
தடமலை யேந்தும வாமலை யேந்த
வென்றுசொன் மதுர வியற்றமி ழிசையொடுந்
துன்றுநற் பொருளொடுஞ் சுவைபெறக் கேட்டனன்
பெருகிய வுவகை கரைகடந் தேற
மூட்டுபொற் கஞ்சுகப் பூட்டற நிமிர்ந்து
வென்றிகொண் மணிப்புயம வீங்குறப் பலகா
னன்றுநன் றென்ன நன்முடி யசைத்தனன்
பொருகவென வெழுந்து சரக்கறை திறந்தனன்
பகைத்திடு மரசர் திகைத்திட நாளுந்
திறைகொணர்ந் தளித்த நிறைபசுங் கனகஞ்
செய்யபட் டாடை துய்யமென் றூசு
மின்னிய சரப்பணி பின்னுபொன் னரைஞாண்
மணிவிர லாழி யணிமணிக் குண்டல
நித்தில மாலை சித்திர மகுட
நவமணிப் பதக்கங் கவின்மணித் தண்டிகை
வேண்டுவ வேண்டுவ விரைந்திவை முதலா
வாண்டகை கொள்கென வன்பொடும் வழங்கினன்

போற்றுசெந் தமிழ்முரு காற்றுப் படைக்காச்
செந்தில்வாழ் முருகன் வந்துநக் கீரன்
வன்சிறை தவிர்த்தென வென்சிறை தவிர்த்தனன்
றன்கட னுமென் றென்கடன் தீர்த்தனன்
மாடுந் தொழுவும் வயலுந் தோட்டமும்
வீடும் விளக்கும் விளங்குறச் செய்தன
னொருகுறை யில்லா துயர்ந்தன னெளியேன்
பெருகிய சுற்றமும் பெண்டிரு மக்களும்
கற்றபா வலருஞ் சுற்றவா துலருஞ்
சூழ்ந்துவாழ் வுறவினி தூழி
வாழ்ந்தவன் புவிமேல் வாழி வாழியவே.

முற்றும்.

க கோதிச்சிக் கின்றி முடிக்கின்ற மாலைக் குழலிவிடு
தூதிச்சிக் கின்றுசெங் காவிநல் காய்துணைக் கண்கறுத்து
மோதிச்சிக் கென்று பணைத்திறு மாந்த முகிண்முலைப்பூ
மாதிச்சிக் கின்றபொன் மார்பா விரசை வடமலையே.

உ ஆலைக் குவளைக்கும் விறகரும் பான்கணை யைந்துமவந்தென்
சேலைக் குவளைக் கிடர்செய்பு மோதிரை நீர்படிந்த
வேலைக் குவளைக்கங் காந்தாய் நறுமழை வெள்ளந்துள்ளு
மாலைக் குவளைப் புயத்தா யிரசை வடமலையே.

௩ மேல்வளைக் கும்பணி கீழ்வளைக் குங்கடல் வேள்கரும்பைக்
கால்வளைக் குந்தொறுங் கைவளைக் கேபயங் காமர்மள்ளர்
சால்வளைக் குங்கொழுக் கால்வழிபோய் முத்தந் தட்டுகுட
வால்வளைக் கஞ்ச வயல்சூ ழிரசை வடமலையே.

௪ ஈர்க்கிடை போகப் பொருமுலை மாலை யிளம்பிறையாற்
பார்க்கிடை யானது பார்க்கிலை யேயெதிர் யாறிட்டொன்னார்
நீர்க்கிடை போனெகி ழாமனம் பேதிக்க நேரிடும்போர்
வார்க்கிடை வேற்கை யபங்கா யிரசை வடமலையே.

௫ படைத்தலை வாளை நிகர்போ மலர்க்கண பாயநொந்து
சடைத்தலை வாளை முகம்பார்க் கிலாயலை தத்துதெண்ணீ
ருடைத்தலை வாளை விரிமுத்த ராசி யொதுக்கியவாய்
மடைத்தலை வாளை குதிபா யிரசை வடமலையே.

௬ முடக்கால் வளைக்கும் பிறைக்கீற்றுக் கண்டபின் மோகமென்னு
லடக்கா வகைகை கடந்ததெண் ணைமர்க் குந்தமிழ்க்கு
மிடக்கா லெனினு மொருக்கான் மனங்கொண் டெடுத்தவடி
மடக்கா முழுவல் லமையா ணிரசை வடமலையே.

௭ கூலிக்கு நான்சொல் வதோயெம்ம ஞோர்நின் கொழுங்கருணை
வேலிக்கு ணின்ற பயிரலல வோவெறுங் கான்புகுந்த
நீலிக்கும் ராவணன் மோலிக்குங் கும்ப நிகும்பனுக்கும்
வாலிக்கும் வாளிதொட் டாயிரை யூரில் வடமலையே.

௮ பொரிந்தது முத்தம் புகைந்தது சாந்தம் பொருக்கெழுந்தே
கரிந்தது பூவணை யேதூப டாள்பணிக் கால்பரப்பி
விரிந்தது வான நிலாவெள்ளங் காணுன்னை விட்டொருநாட்
பிரிந்ததற் கித்தனை யுண்டோ விரசைப் பெரியவனே.

௯ இரசைப் பதியில் வடமலை ராயன்றெய் வேந்தனென்னப்
புரசைக் களிற்றிற் பவனிவந் தான்வந்த போதிலென்பெண்
ணரசைக்குறித்தின் றுபோர்க்கோலங்கொண்டவனங்கன்வெற்றி
முரசைப் பறித்துடைப் பாரில்லை யோவமர் மூளுமுன்னே.

௰ ஏர்விற்றுப் பள்விற் றுடைமையெல் லாம்விற் றிருந்தமனைச்
சீர்விற் றனமுன்னைக் காணுத முன்றெரி சித்தபின்பு
போர்விற் றடக்கை யிளையூர் வடமலைப் பூபதிநின்
பேர்விற்று முன்விற்ற தெல்லா மறுபடி பெற்றனமே.

வேறு.

௧௧ பொருந்து திக்கைக் கருங்கங்குல் யானையான்
 புறப்ப டும்படைப் போர்க்கிலக் காய்மலைத்
திருந்து திக்குத் திகையறி யாதுவிண்
 ணெழுந்து திக்கு மிளம்பிறைக் கேங்குமோ



வருந்து திக்கற் புடையா ளசோதைமுத்
 தாடும் ரத்தின முழுமணி யேயனை
வருந்து திக்கப் புகழ்படைத் தாய்சின்ன
 வடம லேந்திர மகராச ராசனே.

கஉ ¹இங்கணையு மொருகணைவிட் டிருகணையுந்
 துயிலவொட்டா திரவெல்லாம்வரு
தைங்கணைவேள் பொருவதெல்லா மறுகணைவே
 ணியனறிவான் யாரைநோவேன்
கொங்கணையும பங்கயமேற் குருகணைய
 முருகணையும் குமுதநதோறுஞ்
சங்கணையும வளவயலசூ ழிரசைவட
 மலையமுத் தமிழ்வல லோனே.

கங முடிக்கு மருபபுக கிருநதபைங கோதைப்பெண் மூரிவில்வே
பிடிக்கு மருபபுக கணை நகிலைக கோசிறைப பேரிட்டொன் றார்
குடிக்கு மருப்புக் கடலேற்றி விறபக கொடிமதில்பாய்ந
திடிக்கு மருபபுக் களிற்று யிரசை யிருபபவனே.

கச பாடுவன் பாடுவ தல்லாமற பாவலர் பாடலுங்கொண்
டாடுவன் செய்வ னிரையூர் வடமலை யனறிபபுலவன்
றேடுவன் றேடிப் புதைபபா னவனுககுச செநதமிழென்
வேடுவன் சேரியி லெவ்வாறு நானம விலைசொலவதே.



கனாநூல்.

முகவுரை.



தமிழிற் 'கனாநூல்' எனப்பெயரிய ஒரு நூலுண்மை சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையாற் பலரும் அறிந்தது. யான் இத்தமிழ்ச் சங்கத்திற்கு ஏடுதேடிச் சென்ற காலத்தில் இந்நூற்பிரதி ஒன்று ஆழ்வார் திருநகரியிற் கள்ளபிரான்ருதர் வீட்டினின்று கிடைத்தது. இதனிற் சிலப்பதிகார உரைக்கண் அடியார்க்கு நல்லார் எடுத்தாண்ட கனாப்பயனைப் பற்றிய பாடல்கள் நான்கும் சிலபாடபேதங்களுடன் உள்ளன. இது, அடியார்க்குநல்லார்க்கு முற்பட்ட பழையதோர் நூலாதலால், காலநீட்சிபற்றி எழுதுவோரால் பாடபேதங்கள் நேர்ந்தனபோலும்! இந்நூலால், கனவுப்பயனைப்பற்றி முதலில் தேவகுருவாகிய வியாழனால் ஓர் நூல் செய்யப்பட்டுள்ளதென்றும், அதன் பொருளை விளக்கி அம்பர் என்னும் நகரத்திருந்த கணபுரத்தேவன் என்பான் சொல்ல, அவன் சொன்னவாறு பொன்னவன் என்பான், இந்நூலை அந்தாதியாக முப்பது பாடல்களாற் செய்து அமைத்தான் என்றும் ஊகிக்கப்படுகின்றன. தேவகுரு செய்த கனாநூல் வடமொழிபோலும்! "எந்தை கணபுரத்தேவன் றன் கட்டுரையே" என இந்நூல் உ௬-ம் பாடலிற் காண்டலால் இந்நூல்செய்தான் கணபுரத்தேவனாகாமையும், "கட்டுரை யார்மகப் பொன்னவன் சொன்ன கனவுநன்னூ, லெட்டு மிரண்டு மிருபதும்" என இதனிறுதிச் செய்யுளிற் கூறப்பட்டமையால் இம்முப்பதுபாடலும் இயற்றினோன் பொன்னவன் ஆதலும் அறியத்தக்கன. "எந்தை கணபுரத்தேவன்" எனவும், "மகப்பொன்னவன்" எனவும் உண்மையால் இந்நூல் செய்த பொன்னவன் அம்பர்க் கணபுரத் தேவற்கு மகன் எனினும் அமையும்.

பத்திராசிரியர்.



கடவுள்துணை.

கனா நூல்.

௧ திருத்தங் கமலத்து மாயனைச் சேவடி சேர்த்தியும்பர்
குருப்பண் டுரைத்த கனவுநன் னூலைக் குழைத்தெழுந்த
கருத்தங் கியபொழி லம்பர்க் கணபுரத் தேவன்சொன்னா
னருத்தம் பயிலுந் தமிழ்ப்புல வோர்த மருள்படைத்தே.

௨ படைத்தமுற் சாமத்தொ ராண்டிற் பலிக்கும் பகரிரண்டாய்க்
கிடைத்தபிற் சாமத்திற் றிங்களெட் டாவதிற் கிட்டுமென்ப
ரிடைப்பட்ட சாமத்து மூன்றினிற் றிங்களுண் மூன்றென்ப
கடைப்பட்ட சாமத்து நாட்பத்தி லேபலன் கைப்பெறற் [ாற்
[றதே.

௩ பெற்றம் பசுமன்ன ரானை குதிரைபொன் காணப்பெற்றாற்
சுற்றந் தழைக்குந் துயரங் கெடும்புளிச் சூதமுதன்
மற்றுந் தழைத்த பசுமரம் பான்மர மேறிநின்றே
யுற்றங் குணரி னலம்வந்து கூடுமென் றோதினரே.

௪ ஓதும் பசுவு மிடபமும் யானையு மோங்கல்களுஞ்
சீர்துன்று கோயிலு மேறிடக் காணினுந் தீமலத்தை
மீதொன் றடிமுடி பூசிடக் காணினு மெல்லியலார்
சூதென்ற கொங்கைத் துணைநலம் வாய்த்திடச் சொல்லினரே.

௫ சொல்லுங் கனவினிற் றுனேபிற் சாகிற் சுடரரவம்
பல்லொன் றுறவலத் தோளிற் கடிக்கிற் பலவிதத்தாற்
செல்வம் புகுந்திடுந் தேளட்டை பாம்பிவை சேரப்பெற்றான்
மல்குந் திருவொடு புத்திர லாபமும் வந்திடுமே.

௬ வந்துற்ற கோவின் மலைகடல் யாவும் வருமுறையே
யந்தத் தளவுஞ்சென் றேறப்பெற் றாலடை யார்மகுடஞ்
சந்திக்கும் வையகந் தம்வச மாம்பெருங் கண்ணியடன்
முந்துற்ற நெய்பா லடிசில்கண் டாலு முடிமன்னனே.

எ முடிசெய்த வன்றிலுங் கொக்குங் கிளியு முயங்கப்பெற்றாற்
பிடிசெய்த மின்னிடைக் கன்னியைச் சேரப் பெறுகவென்
தொடிசெய்து தோளுக்குக் கட்டினுங் கைத்தளை சூழ்ந்தி [னுங்
வடிசெய்த வேற்கணல் லாய்மக்கட் பேறென்று மன்னு [டினும்
[தியே.

அ மன்னிய வாகன மேறுந் சிவிகை மனையனந்
தன்னுடை யாசன மேறி னின் றோட லேவிழித்தாற்
பைந்நல மாகிய செல்வமுண் டாகும் பலவிதத்தாற்
பின்னிய கோதைநல் லாய்பிணங் காணிற் பெருஞ்செல்வமே.

கூ செங்கதிர் வெண்டிங்க ளென்றிவை காண்கிலுஞ் செல்வமு
மங்கைமை நோய்கொண்ட நாட்களிற் காண்கிலந் நோய் [ண்டா
பொங்கிய கள்ளுங் குருதியும் பூசிடக் கண்டிடின்மேற் [தவிரும்
றங்கிய வேள்விக் குலத்தார் தமக்குத் தனமிகுமே.

க0 மிக்க வெயிற்றினங் கோட்டின மேனம் விறற்குரங்கு
தொக்கன தம்மைக் கனவிடைக் காண்கிற் சுடரரவஞ்
சக்கர வர்த்திக ளாற்பய முண்டெ தன் பன்முறித
லுக்கன வாதல்கண் டாற்பொரு டோற்ற லுடைத்தென்பவே.

கக உடுத்தசெவ் வாடையும் பூசிய சாந்தமு மோதியின்மேன்
முடித்தசெம் பூவு முடையா ளொருத்தி முயங்கிடுமேற்
பிடித்திடும் பாதகம் பீதக வாடையும் பேதகமே
படித்துஞ்செம் பூவின் முடியாண் முயங்கிற் பரும்பிணியே.

கஉ பிணையல் கறுத்தது சூடிப் பெருங்கருஞ் சாந்தினையே
யணிவது செய்து கறுத்த துடுத்தங்கொ ராயிழையாள்
புணர்வது செய்திடிற் கூற்றங் குறுகிடும் போர்க்களத்தே
கணைபொழி மாரிகண் டான்மழை யாமெனக் கட்டுரையே.

கங கட்டிய வாடையும் பூசிய சாந்தமுங் கார்க்குழன்மேற்
சுட்டிய பூவும் வெளுத்தன கொண்டொரு தொண்டைச்செவ்வா
யிட்டிடை மாதர் புணரக்கண் டாலிருங் கீர்த்தியுண்டாய்
மட்டவிழ் பூங்கொடி சேருமென் றோதி வகுத்தனரே.

௧௪ வருத்ததன் மேனியின் மேலெண்ணெய் பூசினும் வல்லபத்தான்
மிருத்தங்கொ ராடை யுடுப்பினு மேனி தனில்விளங்கப்
பகுத்துட னோர்சுற்றுக் காணினும் பல்கலை நூலின்வல்லோர்
தொகுத்தநன் மாதவர் நோய்கொண்டு வாரென்று சொல்லு
[வரே.

௧௫ சொல்லத் தகுமுகட் டோட்டு மெட்டுந் துணைமருப்போ
டில்லத் தெருமை கழுதையின் றிங்கிவை யேறிநின்றே
மெல்லத் தரையி லிவ்தன் முன்னம் விழித்திடுமேற்
கொல்லத் தலைவரு மாற்றருஞ் சீற்றத்திற் கூற்றுவனே.

௧௬ கூறிய வங்கத்தி லேறிற் குரைகட லிற்குளியா
தேறிக் கரைபுகக் கண்டிடிற் றன்பர தேசத்திற்போய்த்
தேறித் தனங்கொண்டு மீளுஞ் செழுங்கள்ளு நீரும்பெற்றால்
வீறிட்ட லாபமும் பேறுமுண் டாகும் விரைக்குழலே.

௧௭ விரைமலர்த் தாளிற் செருப்பு மிதியடி மென்குடையென்
றுரைசெயத் தக்கன கூறிய வாயுத மொண்கனவா
லிரவிடைக் கண்டிடிற் றன்பர தேசத்தில் யாத்திரைபோம்
பரவிடத் தக்கன வாட்கே டிவற்றினை பற்றிடுமே.

௧௮ பற்றிடுங் கீர்த்தி யணிகள்பெற் றாலின்பம் பால்பருகி
லற்றிடுந் துன்பந் தயிர்பெறிற் பொன்பெறு மப்பந்தின்றா
லுற்றிடுந் துன்பம் வரகுஞ்செஞ் சாலியு முப்புமெள்ளும்
பெற்றிடு மின்ப மிறைச்சியுண் டாலும் பெருநலமே.

௧௯ பெருமா னிடந்தன் னிறைச்சியைப் பொன்னிறம் பேணிச்சுட்
டருமா னொருத்தி தளிர்க்கையி லிட்டுத் தரத்தின்னுமே [டுத்
லருமா நிதியமைஞ் ஞூறு புயந்தின்னி லாயிரமாம்
வருமான் றலைதின்னின் மன்னவ ராமென்று வைத்தனரே.

௨௦ வைத்ததொர் பாசத்தி னுன்மலை சுற்றிடின் மண்டலிகற்
குற்றதொர் வான்பய முண்டென்பர் பாசங்கொண் டோர்வளைக்கி
லத்தல மாள்கின்ற மன்னவற் காமென்ப ரம்புயப்பூஞ்
சித்திரஞ் சேருந் துவசம்பெற் றாலுந் திருவருமே.

உக திருவரு மென்ப ரெரிவது காண்கிற் புகையைக்கண்டால்
வருவது நோயென்பர் வானவர் செற்றலர் மாதவத்தோர்
பொருவரு பூண்முலை யாரொடு பூசுர ரென்றிவர்க
ளொருவரு டன்சொல்லிற் சொல்லிய நன்மை யுறுமென்பரே.

உஉ என்பும் பருத்தியு நீறும்வெண் சோறு மினிதுவைத்த
வன்புறு மோரிவை யைந்துந் தவிர வெளுத்தவெல்லா
மின்பந் தருமென்ப மேனியெல் லாமெறும் பூரக்கண்டாற்
றுன்பந் தவிர்ந்து நலங்களெல் லாம்வந்து சூழ்ந்திடுமே.

உ௩ சூழுங் கரியும் பரியுஞ் சுரருந் துலங்குமுந்நூல்
வாழுந் தலத்துறு மாமறை யோரும் வருமுலைப்பா
ராழும் பசுவிவை யைந்துந் தவிரக் கறுத்தவெல்லாம்
யாழுங் குழலும் புரையுஞ்சொல் லாயல்ல லெய்திடுமே.

உச எய்திடுஞ் செல்வ மனைமனைபெற் றலெழின் மேகமெங்கும்
பெய்திடக் கண்டிடிற் பூரணுண் டாகுமயின் றைக்கரிசி
னைவது செய்திடு நஞ்சடர் வேல்விழி நாகரிகீர்
கொய்திடுஞ் சாகமுங் கொள்ளியுந் தான்கொள்ளி னேய்கொள்
[ளுமே.

உ௫ கொள்ளும் பலாப்பழஞ் சாமை முதிரை குறங்கிடினே
யெள்ளும் வரகும் பொரியின்ப மாமயிற ரெச்சிற் கொண்டா
னள்ளும் பெருமபுக [முலலற் றருமென்னுஞ் சேகரஞ்சீர்
தெள்ளு மனவர தங்கள்பொன்] போற் செல்வஞ் சேர்ந்திடுமே.

உ௬ சேற்றுட் புகினு மிருட்டறை சேரினுஞ் [சேகரஞ்சீ]
ராற்றுக் குளிப்பினு மாம்பிலஞ் சேரினு மாங்கமுகந்
தாற்றுப் பொலிவய லல்லற் றவிருந தனதுபுகழ்
போற்றித் தொழுவந்த மாற்றலர் போற்கெடும் பொய்யலவே.

உஎ அல்லலுண் டாகு மிரந்திடிற் கட்டிலி லப்பந்தின்றாற்
செல்வமுண் டாகுஞ் செழுமணிப் பூணைச் சிலபறித்துப்
புல்லர்கொண் டோடினுஞ் செல்வமும்போஞ்சுரை பூசணிக்காய்
கொல்லையஞ் சாரல் வரையினிற் காய்பெறிற் குற்றமுண்டே.

[ ] இவ்வடையாளமிட்டவிடங்கள் நன்கு விளங்கவில்லை.

௨௮ உண்டா கியபசு வேறு மறிந்து முரைத்தவற்றிற்
றண்டா மரங்களி லேறி மறியினுந் தானமன்னர்
கண்டா ரிகழத் திரியினு நோயிற் கலந்திடினும்
வண்டார் குழன்மட வீர்சாவு கேடு வரும்பிணியே.

௨௯ பிணியடைந் தார்க்குப் பிணிகெடு மாற்றலர் பீடழியத்
துணிகவெண் கூறையைச் சுற்றிச் சுழிப்புன னீந்துவரேற்
றணிவினற் றேரொரு கன்னியைச் சாரப் பெறுகவென்னுங்
கணிதரு மெந்தை கணபுரத் தேவன்றன் கட்டுரையே.

௩௰ கட்டுரை யார்மகப் பொன்னவன் சொன்ன கனவுநன்னூ
லெட்டு மிரண்டு மிருபது மோத விரவிற்றந்து
முட்டிய தீய கனவின்பொல் லாங்கறு மொய்குழலீர்
சட்டென முட்டிடு நல்லக னாக்க டருந்திருவே.

கனாநூல் முற்றும்.

☞ ௨, ௪, ௰, ௰௫ பாடல்கள், சிலப்பதிகாரம், ௰௫-அடைக்கலக் காதை, ௯௫—௱ அடிகளின் விசேடவுரையில் அடியார்க்கு நல்லாரால் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. பாடபேதத்தை நோக்கிக்கொள்க.



வளையாபதிச் செய்யுட்கள்.



௧ உலக மூன்று மொருங்குட னேத்துமாண்
டிலக மாய் திறலறி வன்னடி
வழுவி னெஞ்சொடு வாலிதி னாற்றவுந்
தொழுவ ரெல்வினை நீங்குக வென்றியான்.

(தொல்காப்பியம், செய்யுளியலுரை மேற்கோள்.)

௨ வினைபல வலியினாலே வேறுவேறு யாக்கையாகி
நனிபல பிறவிதம்முட் டுன்புறாஉம் பல்லுயிர்க்கு
மனிதரி னரியதாகுந் தோன்றுத றோன்றினாலு
மினியவை நுகரவெய்துஞ் செல்வமு மன்னதேயாம்.

௩ உயர்குடி நனியுட்டோன்ற லூனமில் யாக்கையாதன்
மயர்வறு கல்விகேள்வித் தன்மையால் வல்லராதல்
பெரிதுணர் வறிவேயாதல் பேரறங் கோடலென்றாங்
கரிதிவை பெறுதலேடா பெற்றவர் மக்களென்பார்.

(புறத்திரட்டு, பெறுதற்கருமை-௫-௭)

௪ நாடு மூரு நனிபுகழ்ந் தேத்தலும்
பீடு றம்மழை பெய்கெனப் பெய்தலும்

---

* "தரவின்றாகித் தாழிசைபெற்றும்" என்னுந் தொல்காப்பியச் செய்யுளியல் ௧௪௮-ம் சூத்திரவுரையில் "இதனானே தொடர்நிலைச்செய்யுளின் முதற்கணின்ற தேவபாணி தன்பொருளொடு தான் முடிந்தன, தனித்தரவு கொச்சகமாம்; உ-ம். 'உலகமூன்று ....வென்றியான்' 'மூவாமுதலா ......சேர்துமன்றே' எனவரும் இவ்வளையாபதி முதலியவற்றுட் டேவபாணியல்லாத தொடர்பொருட் செய்யுட்களை யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையதென்றதனாற் றரவுகொச்சகம் என்று கொள்க; அவை தம்பொருளொடு தாமுடியாமையின்." என ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுமாற்றான், இது, வளையாபதிச் செய்யுள் என்பது விளங்குகின்றது.

கூட லாற்றவர் நல்லது கூறுங்காற்
பாடு சான்மிகு * பத்தினி யாதலே.

(ஷை, கற்புடைமகளிர்-கக.)

ரு பள்ள முதுநீர்ப் பழகினு மீனினம்
வெள்ளம் புதியது காணின் விருப்புறாஉங்
† கள்ளவிழ் கோதையர் காமனோ டாயினு
முள்ளம் பிறிதா யுருகலுங் கொண்ணீ.

சு உண்டியுட் காப்புண் டுறுபொருட் காப்புண்டு
கண்ட விழுப்பொருள் கல்விக்குக் காப்புண்டு
பெண்டிரைக் காப்ப திலமென்று ஞாலத்துக்
கண்டு மொழிந்தனர் கற்றறிந் தோரே.

எ எத்துணை யாற்று ளிடுமணனீர்த் துளி
புற்பனி யுக்க மரத்திலை நுண்மயி
ரத்துணை யும்பிற ரஞ்சொலி னார்மனம்
புக்கன மென்று பொதியறைப் பட்டார்.

அ தளிப்பெயற் றண்டுளி தாமரை யின்மேல்
வளிப்பெறு மாத்திரை நின்றற் றொருவ
னளிப்பவற் காணுஞ் சிறுவரை யல்லாற்
றுளக்கிலர் நில்லார் துணைவளைக் கையார்.

(ஷை, கற்பின் மகளிர்—அ, சு, கo, கக.)

கூ பொறையிலா வறிவுபோகப் புணர்விலா விளமைமேவத்
துறையிலா வனசவாவி துகிலிலாக் கோலத்தூய்மை
நறையிலா மாலைகல்வி நலமிலாப் புலமைநன்னர்ச்
சிறையிலா நகரம்போலுஞ் சேயிலாச் செல்வமன்றே.

(ஷை, புதல்வரைப்பெறுதல்—எ.)

---

* 'பத்தினிக்காவதே' எனவும் பிரதிபேதம்.

† "வெள்ளம் பழகினும் வேற்றோர் முகம்பெறின்" எனவும் பிரதிபேதம்.

௧௦ ஆக்கப் படுக்கு மருந்தளை வாய்ப் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகத் துய்ப்பிக்குங்
காக்கப் படுவன விந்திரிய மைந்தினு
நாக்கல தில்லை நனிவெல்லு மாறே.

(ஷை, அடக்கமுடைமை—௧௧.)

௧௧ தார நல்விரதந் தாங்கித் தலைநின்மி
ரூரு நாடு முவத்த லொருதலை
வீர வென்றி விறன்மிகு விண்ணவர்
சீரி னேத்திச் சிறப்பெதிர் கொள்பவே.

௧௨ பெண்ணி னாகிய பேரஞர் பூமியு
ளெண்ண மிக்கவ ரெண்ணினு மெண்ணிலார்
பின்னி நின்ற பெருவினை மேல்வரு
மென்ன தாயினு மேதில்பெண் ணீக்குமின்.

(ஷை, பிறர்மனைநயவாமை— அ, ௯.)

௧௩ பொய்யன் மின்புறங் கூறன்மின் யாரையும்
வையன் மின்வடி வல்லன சொல்லிநீ
ருய்யன் மின்னுயிர் கொன்றுண்டு வாழுநாள்
செய்யன் மின்சிறி யாரொடு தீயன.

௧௪ கள்ளன் மின்கள வாயின யாவையுங்
கொள்ளன் மின்கொலை கூடி வருமற
மெள்ளன் மின்னில ரென்றெண்ணி யாரையு
நள்ளன் மின்பிறர் பெண்ணொடு நண்ணன்மின்.

(ஷை, தீவினையச்சம்— அ, ௯.)

௧௫ துற்றன வாகத் தொகுத்து விரல்வைத்த
தெற்றுக்கஃதென்னி னிதுவதன் காரண
மற்றமி ருன மெனைப்பல வாயினுந்
துற்றவி ழொவ்வாத் துணிவென்னு மாறே.

(ஷை, தானம்— ௧௦.)

௧௬ ஆற்று மின்னரு ளாருயிர் மாட்டெலாந்
தூற்று மின்னறந் தோநனி துன்னன்மின்

மாற்று மின்கழி யாயமு மானமும்
போற்று மின்பொரு ளாவிவை கொண்டுநீர்.

௧௭ பொருளைப் பொருளாப் பொதிந்தோம்பல் செல்லா
தருளைப் பொருளா வறஞ்செய்தல் வேண்டு
மருளைப் பொருளா வறஞ்செய்து வான்கண்
ணிருளிலியல் பெய்தாத தென்னோ நமர்காள்.

(ஷை, அருளுடைமை-கக, க௨.)

௧௮ தகாதுயிர்கொல் வானின் மிகாமையிலை பாவ
மவாவிலையி லுண்பான் புலால்பெருகல் வேண்டும்
புகாவலை விலங்காய்ப் பொருதுபிற வூன்கொன்
றவாவிலையில் விற்பானு மாண்டருகல் வேண்டும்.

௧௯ பிறவிக் கடலகத் தாராய்ந் துணரிற்
றெறுவதிற் குற்ற மிலார்களு மில்லை
யறவகை யோரா விடக்கு மிசைவோர்
குறைவின்றித் தன்சுற்றந் தின்றன ராவர்.

௨௦ உயிர்க ளோம்புமி னூன்விழைந் துண்ணன்மின்
செயிர்க ணீங்குமின் செற்ற மிகந்தொரீஇக்
கதிக ணல்லுருக் கண்டனர் கைதொழு
மதிகள் போல மறுவிலர் தோன்றுவீர்.

(ஷை, புலான்மறுத்தல்—எ, அ, ௯,)

௨௧ பொருளொடு போகம் புணர்த லுறினு
மருளுதல் சான்ற வருந்தவஞ் செய்ம்மி
னிருளில் கதிச்சென் றினியிவண் வாரீர்
தெருள லுறினுந் தெருண்மி னதுவே.

௨௨ தவத்தின் மேலுறை தவத்திறை தனக்கல தரிதே
மயக்கு நீங்குதன் மனமொழி யொடுமெயிற் செறித
லுவத்தல் காய்தலோ டிலாதுபல் வகையுயிர்க் கருளை
நயத்து நீங்குதல் பொருடனை யனையது மறிநீ.

(ஷை, தவம்—௯, ௧௦.)

௨௩ எண்ணின் றியேது ணியுமெவ்வழி யானு மோடு
முண்ணின் றுருக்கு முரவோருணர் கோட லின்றா
நண்ணின் றியேயு நயவாரை நயந்து நிற்குங்
கண்ணின்று காம நனிநாமுறு வானை யிழ்க்கும்.

௨௪ சான்றோ ருவப்பத் தனிநின்று பழிப்ப காணு
ரான்றுங் கமைந்த குரவர்மொழி கோட லீயார்
வான்றாங்கி நின்ற புகழ்பாக படுப்பர் காமன்
றான்றாங்கி விட்ட கணைமெய்ப்படு மாயி னக்கால்.

௨௫ பாவென் றுரைத்து மடலேறுப மன்று தோறும்
பூவென் றெருக்கி னிணர்சூடுப புன்மை கொண்டே
பேயென் றெழுந்து பிறரார்ப்பவு நிற்பர் காம
நோய்நன் கெழுந்து நனிகாழ்கொள்வ தாயி னக்கால்.

௨௬ நக்கே விலாவி றுபவர்நாணுவர் நாணும் வேண்டார்
புக்கே கிடப்பர் * சனவுந்திளை கையு மேற்பர்
துற்றான் மறப்ப ரழுவர்நனி துஞ்ச லில்லார்
நற்றேன் மிசைநெ ரிதுகாட்டறி துன்ப மாக்கும்.

௨௭ அரசொடு நட்டவ ராப்பவி ருந்தி
யரவொடு நட்டவ ராட்டியு முண்பர்
புரிவளை முன்கைப் புனையிழை நல்லார்
விரகில ரென்று விடுத்தனர் முன்னே.

(ஷை, புணர்ச்சிவிழையாமை-௫—௬.)

௨௮ பீடில் செய்திக ளாற்கள விற்பிறர்
வீடில் பல்பொருள் கொண்ட பயனெனக்
கூடிக் காலொடு கைகளைப் பற்றிவைத்
தோட லின்றி யுலையக் குறைக்குமே.

(ஷை., கள்ளாமை—௫.)

௨௯ பொய்யி னீங்குமின் பொய்யின்மை பூண்டுகொண்
டைய மின்றி யறநெறி யாற்றுமின்

* 'நனவுகையு மேற்பர்' எனவும் பிரதிபேதம்.

வைகல் வேதனை வந்துற லொன்றின்றிக்
கௌவை யில்லுல கெய்துதல் கண்டதே.

௯0 கல்வி யின்மையுங் கைப்பொருள் போகலு
நல்வில் செல்லல்க ளானவி வுண்மையும்
பொய்யில் பொய்யொடு கூடுதற் காகுத
லைய மில்லை யதுகடிந் தோம்புமின்.

(ஷ், பொய்யாமை—௩, ௪.)

௯௧ உலகுடன் விளங்கவுயர் சீர்த்திநிலை கொள்ளி
னிலையில்கதி நான்கினிடை நின்றுதடு மாறு
மலகிறுய ரஞ்சினுயி ரஞ்சவரும் வஞ்சக்
கொலையொழிமி னென்றுநனி கூறினா ரறிந்தார்.

௯௨ வெள்ள மறவி விறல்வேந்தர் நித்தாயங்
கள்வரென் றிவ்வாற்றிற் கைகரப்பத் தீர்ந்தகலு
முள்ளி லுறுபொருளை யொட்டா தொழிந்தவா
றெள்ளும் பெருந்துயர்நோ யெவ்வ மிகப்பவே.

௯௩ ஒழிந்த பிறவற லுண்டென்பா ருட்க
வழிந்து பிறரவாம் வம்பப் பொருளை
யிழந்து சிறிதானு மெய்தா தொழிந்தா
ரழிந்து பெருந்துயர்நோய்க் கல்லாப் பவரே.

௯௪ இன்மை யிழிவா முடைமை யுயிர்க்கச்ச
மன்னல் சிறிதாய் மயக்கம் பெரிதாகிப்
புன்மை யுறுக்கும் புரையி லரும்பொருளைத்
துன்னு தொழிந்தார் துறவோ விழுமிதே.

௯௫ ஈண்ட லரிதாய்க் கெடுத லெளிதாகி
நாண்டல் சிறிதாய் நடுக்கம் பலதரூஉ
மாண்பி லியற்கை மறுவி லரும்பொருளை
வேண்டா தொழிந்தார் விறலோ விழுமிதே.

௯௬ இல்லெனின் வாழ்க்கையு மில்லையுண் டாய்விடிற்
கொல்வர் கயவர் கொளப்பட்டும் வீடுவ

றில்லையுண் டாய்விடி னிம்மை மறுமைக்கும்
புல்லென்று காட்டும் புணர்வது மன்றே.
(ஷை, செல்வநிலையாமை-௧௨—௧௭.)

௩௭ வேற்கண் மடவார் விழைவொழிய யாம்விழையக்
கோற்க ணொரிகாட்டக் கொல்கூற் றுழையதா
நாற்ப திகந்தா னரைத்தூது வந்ததினி
நீத்த றுணிவா நிலையா திளமையே.
(ஷை, இளமை நிலையாமை-௧௦.)

௩௮ இளமையு நிலையாவா லின்பமு நின்றவல்ல
வளமையு மஃதேபோல் வைகலுந் துன்பமெள்ள
முளவென நினையாதே செல்கதிக் கென்றுமென்றும்
விளைநில முழுவார்போல் வித்துநீர் செய்துகொண்மின்.
(ஷை, பலவகைநிலையாமை—௪.)

௩௯ மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகையவை யுள்வழிப்
பற்றா வினையாய்ப் பலபல யோனிக
ளெற்றா யுழலு மறுத்தற் கரிதே.

௪௦ உற்ற வுதிர மொழிப்பான் கலிங்கத்தை
மற்றது நோய்த்துக் கழுவுத லென்னொக்கும்
பற்றினு னாகிய பாவத்தைப் பீட்டும்
பற்றொடு நின்று பறைக்குறு மாறே.

௪௧ தானஞ் செய்திலந் தவமு மன்னதே
கானந் தோய்நில விற்கழி வெய்தி
ஞானந் தோய்குழ னமக்குய்த லுண்டோ
மானந்நீர் கொள்கையார் மாற்றம்பொய் யல்லவாய்.
(ஷை, துறவு—௮, ௯, ௧௦.)

௪௨ பருவந்து சாலப் பலர்கொலென் றெண்ணி
யொருவந்த வுள்ளத் துவத்த லொழிமின்

வெருவந்த துன்பம் விடுக்குந் திறலோ
னொருவ னுலகிற் குளனென்னு மாறே.
(ஷை, மெய்யுணர்தல் — கக)

சஙு உய்த்தொன்றி யோர்தந் துழவுழு தாற்றவும்
வித்தின்றிப் பைங்கூழ் விளைக்குற லென்னைக்கு
மெய்த்தவ மில்லான் பொருளொடு போகங்கட்
கெய்த்துழுந் தேதா னிடர்ப்படு மாறே.
(ஷை, பழவினை—உரு.)

சச குலந்தருங் கல்வி கொணர்ந்து முடிக்கு
மலந்த கிளைக ளழிபசி தீர்க்கு
நிலம்பக வெம்பிய நீள்சுரம் போகிப்
புலம்பில் பொருடரப் புன்கண்மை யுண்டோ.
(ஷை, பொருள் செயல்வகை—கசு.)

சரு கெட்டே மிதுவென் னிலையென்று சார்தற்க
ணட்டவ ரல்லார் நனிமிகு பவர்சுற்றம
பெற்றது சொல்லிப் பெரிதிகழுந் தாற்றவு
மெட்டவந் தோரிடத் தேசி நிற்பவே.
(ஷை, நட்பு—கரு.)

சசு தெண்ணீர் பரந்து திசைதோறும் போய்க்கெட்ட
வெண்ணைகொண் டட்ட விவறுத லென்னைக்கும்
பெண்மனம் பேதித் தொருப்படுப் பன்னென்னு
மெண்ணி லொருவ னியல்பென்னு மாறே.

சஎ நீண்முகை கையாற் கிழித்தரு மொக்குறு
மாண்வினைப் பாவை மறைநின்று கேட்டிறிற்
பேணலு மன்பும் பிறந்துழிப் பேதுசெய்
தாணைப் பெண்ணை யணைக்குறு மாறே.
(ஷை, பேதைமை—கஅ, கசு.)

சஅ அந்தக னந்தகற் காறுசொல்ல யாதொக்கு
முந்துசெய் குற்றங் கெடுப்பான் முழுவது

நன்கறி வில்லா னதுவறி யாதவர்க்
கின்புறு வீட்டி னெறிசொல்லு மாறே.

(ஷை, புல்லறிவாண்மை—கரு.)

சகூ நகைநனி தீது துனிநன் றியார்க்கும்
பகைநனி தீது பணிநன்றி யாரோடு
மிகைமிகு பொருளென் றிறக்க விலரே
வகைமிகு வானுல கெய்தி வாழ்பவே.

(ஷை, பண்புடைமை—எ.)

ருO பெண்டிர் மதியார் பெருங்கிளை தானது
கொண்டவி ருகா குறிப்பி னஃகுப
வெண்டறை நின்று வெறுக்கை யிலராயின்
மண்டினர் போல்வர்தம் மக்களு மொட்டார்.

ருக சொல்லவை சொல்லார் சுருங்குபு சூழ்ந்துணர்
நல்லவை யாரு நனிமதிப் பாரல்லர்
கல்வியுங் கைப்பொரு ளில்லார் பயிற்றிய
புல்லென்று போதலை மெய்யென்று கொண்ணீ.

ருஉ தொழுமக னாயினுந் துற்றுடை யானைப்
பழுமரஞ் சூழ்ந்த பறவையிற் சூழ்ப
விழுமிய ரேனும் வெறுக்கை யுலந்தாற்
பழுமரம் வீழ்ந்த பறவையிற் போப.

ருங பொருளில் குலனும் பொறுமையி னோன்பு
மருளி லறனு மமைச்சி லரசு
மிருளினு ளிட்ட விருண்மயி ரென்றே
மருளில் புலவர் மனங்கொண் டுரைப்ப.

(ஷை, நல்குரவு — கூ, கO, கக கஉ.)

ருச துக்கந் துடைக்குந் துகளறு காட்சிய
நிக்கந்த வேடத் திருடி கணங்களை
யொக்க வடிவீழ்ந் துலகியல் செய்தபி
னக்கதை யாழ்கொண் டமைவரப் பண்ணி.

௫௫ பண்ணாற் றிறத்திற் பழுதின்றி மேம்பட்ட
தொண்ணூற் றறுவகைக் கோவையும் வல்லவன்
விண்ணா றியங்கும் விறலவ ராயினுங்
கண்ணுறி நோக்கிக் கடுநகை செய்வான்.

(இவ்விரண்டும் சிலப்பதிகாரம், கனுத்திறமுரைத்தகாதை, அடியார்க்கு நல்லாருரை மேற்கோட் செய்யுட்கள்.)

௫௬ நீல நிறத்தனவாய் நெய்கனிந்து போதவிழ்ந்து
கோலங் குயின்ற குழல்வாழி நெஞ்சே
கோலங் குயின்ற குழலுங் கொழுஞ்சிகையுங்
காலக் கனலெரியின் வேம்வாழி நெஞ்சே
காலக் கனலெரியின் வேவன கண்டாலுஞ்
சால மயங்குவ தென்வாழி நெஞ்சே.

௫௭ வித்தகர் செய்த விளங்கு முடிகவித்தார்
மத்தக மாண்பழிதல் காண்வாழி நெஞ்சே
மத்தக மாண்பழிதல் கண்டால் மயங்காதே
யுத்தம நன்னெறிக்க ணில்வாழி நெஞ்சே
யுத்தம நன்னெறிக்க ணின்றாக்கஞ் செய்தியேற்
சித்தப் படாத தெளிவாழி நெஞ்சே.

(யாப்பருங்கலவிருத்தி, ௬௱-ம் சூத்திரவுரை மேற்கோள்)